Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
28.°C 24.°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 360 | வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 06, வெள்ளி 22.11.2013

## வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் இவை

- ★ அரச ஊழியர் வாழ்க்கைச் செலவுப்படி ரூ.1200 மட்டுமே
- ★ தனியார்துறைக்கும் சம்பள உயர்வு
- ★ ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிப்பு 350, 500 ரூபா
- ★ பல்கலை விரிவுரையாளர் சம்பளம் அதிகரிப்பு
- ★ மிருக வைத்தியர்களுக்கு 7500 மாதாந்த கொடுப்பனவு
- ★ விவசாயிகளுக்கு ஓய்வூதியம்
- ★ வறுமை 6 வீதமாக குறைப்பு
- ★ 5000 வீடுகளைக் கொண்ட 15 புதிய வீட்டுத்திட்டங்கள்
- ★ 2014 இல் 1000 பாலங்கள் நிர்மாணிக்கப்படும்
- ★ விமானிப் பயிற்சிப் பாடசாலை
- ★ வடக்கில் பொலிஸ் சேவை முக்கிய பங்கு
- ★ வாகனங்கள், மதுபானங்கள், சிகரெட் வரி மூலம் வருமானம்
- ★ வெளிநாட்டவர்கள் காணி வாங்குவதை நிறுத்தச் சட்டம்
- ★ வங்கிகள் தனியார் மயப்படுத்தப்படமாட்டா
- ★ கமநெகுமவுக்கு 4500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ வரி வங்கிகள் அறிமுகம்
- ★ அரச கடன் குறைக்கப்படும்

21

# ஏமாற்றம்

## ★ விலைகுறைப்பு, நிவாரணங்கள் இல்லை
## ★ மக்கள் நலன் முற்றாகப் புறக்கணிப்பு
## ★ அரச ஊழியர்களுக்கும் 1,200 ரூபாவே
## ★ எதிர்பார்ப்பைத் தகர்த்தது 2014 பட்ஜெட்

கொழும்பு, நவம்பர்22

பொருள்கள், சேவைகளின் விலைகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றமையால் வாழ்க்கைச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் திண்டாடும் மக்களுக்கு 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் பெரும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அடுத்த ஆண்டிலாவது நிவாரணங்கள் கிடைக்கும், பொருள்களின் விலைகள் குறைவடையும் என்ற நம்பிக்கையோடு இருந்த மக்களின் எதிர்பார்ப்புகளை அது தகர்த்தெறிந்துள்ளது என்று பொருளாதார நிபுணர்களும் அரசியல் விமர்சகர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.


மக்கள் ஏற்றுக்கொள்ளுமளவுக்குப் பெருமளவிலான சமூக நலத் திட்டங்கள் ஏதுவும் 2014 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சிகள், சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும், அவை சோடிக்கப்பட்டவையே என்றும் கடுமையாகச் சாடியுள்ளன.

அதேவேளை, பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அரசு அறிவிப்புகளை விடுத்திருந்தாலும் அந்த இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் உரிய முறையில் வகுக்கப்படவில்லை என்றும், சிறந்ததொரு சம்பளப்பொறி முறை நிர்ணயிக்கப்படவில்லை என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

2014 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார். அதில் அவர் அடுத்த ஆண்டுக்கான முன் மொழிவுகள், அபிவிருத்தி இலக்குகள் உட்பட பல விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

வரவு - செலவுத் திட்ட முன் மொழிவுகள் வருமாறு-

21



## 51,600 கோடி ரூபா துண்டுவிழும் தொகை

### வருமானம் 146,900 கோடி
### செலவு 198,500 கோடி ரூபா

கொழும்பு, நவ. 22

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 51 ஆயிரத்து 600 கோடியே 10 இலட்சம் (516.1 பில்லியன்) ரூபா பற் றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான மானியங்கள் அடங்கலாக

21

## வடக்கு, கிழக்கு புறக்கணிப்பு

### கூட்டமைப்பு விசனம்

கொழும்பு, நவ. 22


2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் ஆதரிக்கமாட்டோம் என்றும் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்

21

## மானிய எரிபொருளே எங்களுக்கு வேண்டும்

### மீன்பிடி உபகரணங்கள் வேண்டாம்
### மன்னார் மீனவர் அமைச்சருக்கு மனு



மன்னார், நவ.22

மீனவர்களுக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக வலைகள் வழங்கும் நடவடிக்கைக்கு மன்னார் மாவட்ட மீனவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்தும் எரிபொருள் மானியத்தை வழங்குமாறும் அல்லது எரிபொருளுக்கு விலை குறைப்புச் செய்யுமாறும் கோரி சர்வதேச கடற்றொழிலாளர் தினமான நேற்று அவர்கள் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு மனு ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

21

## இணைத் தலைவராக விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், நவ. 22

வடக்கில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நிறைவுற்றுள்ள நிலையில், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நியமிக்கப்படுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்குப் பதவி வழியாக மாகாண முதலமைச்சரே இணைத் தலைமை வகிக்கவேண்டும். யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. ஆயினும் அவற்றுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் இணைத் தலைவராக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்த ஒருங்கிணைப்

21

## வெளியுறவுக் கொள்கைகளை அங்கீகரித்துள்ளது சர்வதேசம்

### பட்ஜெட் உரையில் ஜனாதிபதி மஹிந்த பெருமிதம்

கொழும்பு, நவ. 22

பொதுநலவாய மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, அதன் தலைமைத்துவம் எமது நாட்டுக்கு வழங்கப்பட்டதனூடாக அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளைச் சர்வதேசம் அங்கீகரித்துள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் தெரி வித்தார்.

இலங்கையில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதைப் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற 53 நாடுகளும் அறிந்துகொண்டுள்ளன. இதனூடாக இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பவர்கள் மேற்கொள்ளும் பிரசாரங்கள் முற்றிலும் தவறானவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

2014ஆம் நிதியாண்டுக்கான வரவு -

21

## ஐ.தே.க., ஜே.வி.பி. பகிஷ்கரிப்பு தமிழ்க் கூட்டமைப்பு பங்கேற்பு

கொழும்பு, நவ. 22

2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை நிதியமைச்சர் என்ற அடிப்படையில் நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வரவு - செலவுத்திட்ட உரையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனநாயக தேசியக் கூட்டணியும் புறக்கணித்தன. எனினும், மற்றுமொரு எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றைய சபை அமர்வுகளில் பங்கேற்றிருந்தது.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமை

21

## வெடிபொருள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், நவ.22

மாதகல் - பெரிய விளான் வீதியோரமாக 12 கிலோ கிராம் நிறையுடைய கிளைமோர், இரண்டு மோட்டார் குண்டுகள் என்பவற்றை இளவாலைப் பொலிஸார் நேற்று மீட்டுச் செயலிழக்க வைத்துள்ளனர்.

சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் அவை புதைக்கப்பட்

21

## தேர்தல் கடமையின் போது உயிரிழந்தவருக்கு நிதியுதவி



வவுனியா, நவ.22
வடக்கு மாகாண சபைத் தேர்தல், கடமையின் போது குளவி கொட்டியதில் உயிரிழந்த ஆசிரியரின் குடும்பத்துக்கு, தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட நிதி நேற்று முன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டது.
தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இந்த நிதியைக் கையளித்தார்.
வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முதல் நாள், வவுனியாவுக்கு தேர்தல் கடமைகளுக்காக சென்ற ஆசிரியரான கிறிஸ்ரிராஜா குளவி கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.
இவரது குடும்பத்துக்கு, தேர்தல்கள் திணைக்கள ஊழியர்களின் பங்களிப்பினால் ஒரு தொகைப் பணம் சேர்க்கப்பட்டு அவரது குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
உயிரிழந்தவரின் மகனின் பெயரில் 25 ஆயிரம் ரூபாவும், மனைவியின் பெயரில் 50 ஆயிரம் ரூபாவும் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. காசாக 25 ஆயிரம் ரூபாவும் கையளிக்கப்பட்டுள்ளது.
மகனுக்கு பாடசாலைக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன், அவரது உயர் கல்வி வரையிலான செலவுகளை ஏற்பதற்கும் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
(த-5-402)

# ஒதியமலைப் படுகொலையை நினைவு கூரத் தடையில்லை

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.22
ஒதிய மலைப் படுகொலையை நினைவு கூறுவதற்கு இந்த ஆண்டு எந்தத் தடையும் இருக்காது. தமிழ் மக்கள் கொல்லப்பட்ட இடத்திலேயே இந்த ஆண்டு அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, ஒதியமலைப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற மாகாண சபை உறுப்பினர், அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஒதியமலையில் தமிழ் மக்கள் குடியிருந்த வீடுகளின் அத்திபாரங்கள் கூடத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அங்கேயிருந்த பழைய பாதை அழிக்கப்பட்டு, குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்காகப் புதிய பாதை அமைக்கப்பட்டு வருகின்றது.
காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டு புதிய சிங்களக் குடியேற்றங்கள் துரிதமாக்கப்பட்டுள்ளன.
ஒதிய மலைக் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பழைய கொம்பனித்தெரு என்று முன்னர் அழைக்கப்பட்ட பகுதிக்குச் செல்லும் போது வெலிஓயா பகுதிக்குள் சிங்களக் குடியேற்றத் திணிப்புக்கள் துரித கதியில் இடம்பெறுகின்றன. புதிய பாடசாலைகளும் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டுப் புதிதாக சிங்களப் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. புதிய வீடுகள் கட்டப்பட்டு வருவது மாத்திரமல்லாமல், அங்கு முழுமையான மின்சார வசதியும் வழங்கப்பட்டுள்ளது.
முதலில் தமிழர்கள் பயன்படுத்திய சிலோன் தியேட்டர்ஸ் பகுதி தற்போது சிங்கள மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.



ஒதிய மலைப் பகுதியில் 28 தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையும், மேலும் 5 பேர் அருகிலிருந்த காட்டுப் பகுதியில் உழவு இயந்திரத்துடன் சேர்த்து எரிக்கப்பட்டதையும் நினைவு கூர முடியாத நிலையில் அந்தப் பகுதிக்கு அருகில் வசிக்கும் தமிழ் மக்கள் உள்ளனர். இந்த முறை அவர்களுடன் சேர்ந்து நானும் அந்த நினைவு நிகழ்வில் பங்கேற்பேன்.
இடப்பெயர்வுக்கு முன்னர் எங்கள் மக்களின் பாவனையிலிருந்த 700 ஏக்கர் காட்டுப் பகுதியும் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பகுதியும் இன்று துரித கதியில் அபகரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது என்றார்.
(த-5)

## அரசின் பட்ஜெட்டினால் கல்விச் சமூகம் ஏமாற்றம்

### ஜோசப் ஸ்ராலின் சாடல்

யாழ்ப்பாணம், நவ.22
2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கல்விச் சமூகம் உட்பட அரச உத்தியோத்தர்களுக்கு மிகப்பெரும் ஏமாற்றம். ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்காமல் கொடுப்பனவாக ஆயிரத்து 200 ரூபாவை வழங்குவது போதுமானதா?
இவ்வாறு தெரிவித்தார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களுக்கான மாதாந்தச் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து வழங்குமாறு பலதடவை கோரியிருந்தோம். கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை 6 வீதமாக அதிகரிக்குமாறு கோரி ஆசிரியர் சங்கங்கள் பல நாள்களாக போராட்டங்களிலும் ஈடுபட்டன.
அவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் எந்தவித அதிகரிப்பும் வழங்காமல் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 200 ரூபாவைக் கொடுப்பனவாக வழங்கத் தீர்மானித்துள்ளனர்.
போக்குவரத்துக் கட்டணங் கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலை யில், வாழ்க்கைச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துள்ள வேளையில் சம்பளத்தைச் சிறிது கூட அதிகரிக்காமல்விட்டமை பெரும் ஏமாற்றத்தையே தருகிறது.
இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்காலத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை - என்றார்.
(த-4)

# இ.போ.ச. யாழ்.சாலையின் சேவைகள் நெருக்கடியில்

யாழ்ப்பாணம், நவ.22
சாரதிகள், நடத்துநர்கள் இல்லாத நிலையில் சேவையை சீராக வழங்க முடியவில்லை என இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.டிப்போ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யாழ்.டிப்போவில் 105 சாரதிகளும் 132 நடத்துநர்களும் பணியில் இருந்தாலும் இந்தத் தொகை முழுமையான சேவையை வழங்குவதற்கு போதாதுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
இதன் காரணமாக யாழ். சாலையில் 10 இற்கும் மேற்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
பணியாளர் பற்றாக்குறை குறித்து கொழும்பு தலைமையகத்துக்கு பல தடவை அறிவிக்கப்பட்டது. ஆனால் பிரச்சினைக்கு இது வரை தீர்வு காணப்படவில்லை.
சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.சாலைக்கென கிழக்கு மாகாணத்திலிருந்து 6 சாரதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஓரிரு மாதங்களில் மாற்றலாகிச் சென்றுள்ளனர். இதன் காரணமாகவே சேவையைச் சீராக வழங்க முடியவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் இலங்கை இ.போ.ச. வட மாகாண பொது முகாமையாளர் அஸ்கரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது யாழ்.சாலைக்குரிய சாரதிகள் ஒழுங்காக பணிக்கு வருவதில்லை. இதனாலேயே சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. யாழ்.டிப்போவைத் தவிர வேறு இடங்களில் இவ்வாறான பிரச்சினைகள் இல்லை என்றார்.
இதேவேளை வட மாகாண ஜனநாயக போக்குவரத்து சங்கத் தலைவர் என்.கெங்காசுதனிடம் இந்தப் பிரச்சினை குறித்துக் கேட்ட போது பணியாளர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படுவதில்லை. இதனால் வருமானத்துக்காக அவர்கள் வேறு வேலைகளுக்குச் செல்வதோடு தனியார் பஸ்களுக்கு சாரதிகளாகவும் சென்று வருகின்றனர். இதனாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது - என்றார்.
(ஜ-4)

## பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ.22
வலி.மேற்கு பிரதேச சபை ஆளும் கட்சி உறுப்பினர் தம்பிராசா சசிதரன் நேற்று இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தொழில் இடத்திலிருந்து மதிய உணவு அருந்துவதற்காக மூளாய் - பிளவத்தை வீதியூடாக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
(ஜ-50)

# போர்க் குற்ற விசாரணைக்கு உத்தரவிடக் கமரூன் யார்?

## இராவண சக்தி அமைப்பு கேள்வி




கொழும்பு, நவ.22
போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிட டேவிட் கமரூன் யார்? பிரிட்டன் காலனித்துவ ஆட்சியில் இலங்கையில் இடம்பெற்ற, ஊவா வெல்லஸ்ஸ கலவரத்தில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் முதலில் விசாரணை நடத்த வேண்டும் என்று 'இராவண சக்தி' அமைப்பின் தலைவர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.
இலங்கையில் உள்ள பிரிட்டன் தூதரகத்தின் முன்பாக நேற்றுக்காலை நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தின் போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்ற வந்திருந்த பிரிட்டன் பிரதமரான டேவிட் கமரூன், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இல்லையேல் சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்திருந்தார்.
கமரூனின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே, இராவண சக்தி அமைப்பினால் மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
இந்தப் போராட்டம் தொடர்பில் பொலிஸார் முன்னரே அறிந்திருந்ததால் தூதரகத்தைச் சுற்றிப் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர். அத்துடன் கலகமடக்கும் பொலிஸாரும் இறக்கப்பட்டிருந்தனர்.
ஆனால் நூற்றுக்கணக்கானோரே கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரிட்டனுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இதன் பின்னர் பிரிட்டன் தூதரகத்தின் முதல் நிலைச் செயலரிடம் மனுவைக் கையளித்துவிட்டு கலைந்து சென்றனர்.
இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பில் இராவண சக்தி அமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

> “பிரிட்டன் படைகளால் சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். இதன் போது மீறப் பட்ட மனித உரிமைகள் தொடர் பிலும் விசாரிக்கப்பட வேண் டும்

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கதைப்பதற்குப் பிரிட்டனுக்கு எந்த அருகதையும் இல்லை. 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரிட்டன் காலனித்துவத்துக்குக் கீழ் இலங்கை இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விசாரிக்கப்பட வேண்டும்.
ஊவா - வெல்லஸ்ஸ கலவரத்தின் போது பிரிட்டன் படைகளால் சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். இதன் போது மீறப்பட்ட மனித உரிமைகள் தொடர்பிலும் விசாரிக்கப்பட வேண்டும் - என்றார்.
(த-5)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.22
மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில், அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நபர் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளார்.
அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.
இதனையடுத்து அவருக்கு மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக 7 ஆயிரம் ரூபா அபராதமும், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியதற்காக 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.
(த-4)

## வவுனியாவில் பல்வேறு நிகழ்வுகளில் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், நவ.22
வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் நாளை வவுனியாவுக்கு பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார்.
காலை சுகாதார திணைக்களத்தில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொண்டு வட மாகாண சுகாதாரத்துறை அமைச்சரின் இணைப்பு அலுவலகத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.
தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியை திறந்து வைப்பதுடன் மாலை 4.00 மணிக்கு வவுனியா ஸ்ரீ சத்திய சாயிபாபா நிலையத்தில் நடைபெறும் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார விழாவிலும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
(ஐ-402)

## வயல் நிலங்கள் கையளிப்பு

*முள்ளியவளை சீனியாமோட்டையில்*



முள்ளியவளை, நவ.22
முள்ளியவளை சீனியாமோட்டைப் பகுதியில் இராணுவத்தினரின் வசமிருந்த 17 ஏக்கர் வயல் நிலங்கள் நேற்றைய தினம் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

முற்பகல் 10 மணியளவில் இந்த வயல் நிலங்களை கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி எல்.பி.ஆர்.மார்க், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன், கேப்பாபிலவு கிராம அலுவலர் இ.ரஜீந்திரா, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.பரமேஸ்வரன், திணைக்கள தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின்போது வற்றாப்பளையைச் சேர்ந்த இரண்டு விவசாயிகளுக்கும், சீனியாமோட்டையைச் சேர்ந்த நான்கு விவசாயிகளுக்கும் மொத்தமாக 17 ஏக்கர் வயல் நிலங்கள் கையளிக்கப்பட்டன. அத்துடன் விதை நெல்லும் வழங்கப்பட்டது. விதைப்பு வேலைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கேப்பாபிலவு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் மொத்தமாக 1029 ஏக்கர் வயல் நிலங்கள் உள்ளன.

இதில் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற மீளக்குடியமர்வின் போது ஒரு தொகுதி வயல் நிலங்கள் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன. (க-433-ரி)

# இந்திய மீனவர் 20 பேர் கைது

*சர்வதேச கடற்றொழிலாளர் தினமான நேற்று*

யாழ்ப்பாணம், நவ.22
சர்வதேச கடற்றொழிலாளர் தினமான நேற்றைய தினமும் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் 20 பேரை 5 இழுவைப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புதுக்கோட்டை ஜெகாதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 20 மீனவர்கள் 5 இழுவைப் படகுகளுடன் நேற்று அனலைதீவு வடக்கு பிரதேச கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதை அவதானித்த கடலோரக் காவல்படை யினரும், இலங்கைக் கடற்படையினரும் இணைந்து படகுகளுடன் மீனவர்களைக் கைது செய்தனர்.



கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். இது குறித்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்ததாவது:-

கடற்படையினரின் ஒத்துழைப்புடன் கடற்றொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகளில் இதுவரை 36 படகுகளுடன் 150 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவற்றில் 27 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் 65 மீனவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்களது இந்த அத்துமீறல் செயற்பாடுகள் மேலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நேற்று கைது செய்யப்பட்ட மீனவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் தாம் கடலில் பனி மூட்டம் காரணமாக திசைமாறி வந்ததாகவும் இதனால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்களை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வடமாகாண கடற்றொழிலாளர்களால் நேற்று சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு துக்க நாள் அனுஷ்டிக்கப் பட்டது. இந்திய மீனவர்களது அத்துமீறல் செயற்பாடு தமது வாழ்வாதாரத்தை பாதிப்பதா கவும் வடக்கு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-14-17-21)

*கொடிகாமம் இரட்டைக் கொலை*

## வழக்கின் சூத்திரதாரி திருமலையில் கைது

தென்மராட்சி, நவ.22
கொடிகாமம் இரட்டைக் கொலை வழக்கின் சூத்திரதாரி திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி இரவு கொடிகாமம் கச்சாய் வீதியில் மனைவியையும், மகளையும் கத்தியால் வெட்டிக் கொலை செய்து விட்டு தலைமறைவான இறந்த பெண்ணின் கணவரான மகாலிங்கம் லோகேந்திரன் என்பவரை தம்பலகாமம் பொலிஸார் அங்கு வைத்து கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் கையளித்தனர்.

குறித்த நபரை கொடிகாமம் பொலிஸார் நேற்று வியாழக் கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள 24 மணி நேரம் அவகாசம் வழங்குமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மூலம் அறிக்கை தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் பொலிஸாருக்கு மேலதிக விசாரணைக்கு அனுமதி வழங்கி இன்று நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டார்.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த லோகேஸ்வரன் ஜெயமேரி (வயது-38) அவரது மகளான நிலோஜினி (வயது-18) ஆகிய இருவரும் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

"_"

**பெண்ணின் கணவரான மகாலிங்கம் லோகேந்திரன் என்பவரைத் தம்பலகாமம் பொலிஸார் அங்கு வைத்துக் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் கையளித்தனர்.**

## தபாலக ஊழியர்களின் புறக்கணிப்பு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.22
முறையற்ற உத்தியோகத்தர் நியமனம் தொடர்பில் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து கொடிகாமம் தபாலகத்தின் உத்தியோகத்தர்களால் நேற்று மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொடிகாமம் தபாலகத்துக்கு தபால் தரம் பிரிப்பு உத்தியோகத்தர் முறையற்ற விதத்தில் நியமிக்கப்பட்டுள்ளதால், முது நிரல் அடிப்படையில் ஏற்கெனவே கடமையில் உள்ள உத்தியோகத்தர்கள் யாழ். பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் முறையற்ற நியமனம் சட்டதிட்டங்களுக்கு முரணாக வழங்கப்பட்டுள்ளதை தபால் அதிபர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்புக் கொண்டிருந்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்து முது நிரல் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்று கொடிகாமம் தபாலக உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்தனர். இந்த நிலையில், வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் நியமனம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடிதம் மூலம் அறிவித்திருந்தார். அதை அடுத்து பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (வ-14)

*கோப்பாய் பிரதேச மருத்துவமனைகளில்*

## போதை நிலையை பரிசோதிக்க அனுமதி

அச்சுவேலி, நவ.22
அச்சுவேலி-கோப்பாய் உள்ளிட்ட பிரதேச மருத்துவமனைகளில் மது போதையில் உள்ள குற்றவாளிகள் மற்றும் மது போதையில் வாகனம் செலுத்துவோர் தொடர்பான 'போதை நிலை பரிசோதனை'யை மேற்கொண்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள லாம். இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மது போதையில் உள்ளவர்களின் போதை நிலை பரிசோதனை, இதுவரை காலமும் போதனா வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் சட்ட வைத்திய அதிகாரிகள் தர நிலையில் உள்ளவர்களால் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சட்ட வைத்திய அதிகாரி நிலையில் மதுபோதையில் உள்ளவர்களை பரிசோதித்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள் வதில் உள்ள கால தாம தம் மற்றும் மது போதையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதையும் கருத்தில் கொண்டு பிரதேச வைத்தியசாலைகளிலும் மதுபோதை பரிசோதனை மற்றும் அறிக்கைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச வைத்தியசாலைகளில் பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றும் மருத்துவப் பட்டதாரிகள் (எம்.பி.பி.எஸ்) மது போதை நிலை பரிசோதனையை மேற்கொள்ளவும் அறிக்கை வழங்கவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. (வ-11)

## தீருவில் பூங்கா காணி வழக்கு முடிவுக்கு

வடமராட்சி, நவ.22
வல்வெட்டித்துறை தீருவில் பொதுப் பூங்கா காணி உரிமம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறியதுடன், இந்த மன்றில் அதனைக் கேட்பதற்கு நியாயாதிக்கம் இல்லை. இதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மன்றில் வழக்கைத் தாக்கல் செய்ய அறிவுறுத்தி வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

தீருவில் வயலூர் முருகன் ஆலயத்துடன் இணைந்த வெளிக் காணியில் வல்வெட்டித்துறை நகரசபையின் ஏற்பாட்டில் பொதுப்பூங்கா அமைத்ததை எதிர்த்து அந்தக்காணி உரிமம் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.ஆனந்தராஜ், உப தலைவர் க.சதீஸ், உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் மீது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இரண்டாம் தரப்பினரான வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகளான திருமதி விஜியராணி உருத்திரேஸ்வரன், நடராசா ராஜிவன் ஆகியோர் பூங்காக் காணி உரிமம் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பித்து வாதங்களை முன் வைத்தனர். பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பொறுப்பதி காரியும் தமது வாதத்தை முன்வைத்தார்.

விசாரணையை அடுத்து நீதிபதி தீருவில் பொதுப் பூங்கா காணி உரிமம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தியதுடன் வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றது என்றும் தீர்ப்பளித்தார். (வ-8)

"_"

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வல் வெட்டித் துறை நகரசபைத் தலைவர் ந.ஆனந்தராஜ். உப தலைவர் க.சதீஸ். உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் மீது பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.**

## மீன் பட்டிகளில் திருடப்படும் மீன்கள்

*பாஷையூர் கடற்றொழிலாளர்கள் விசனம்*

கொழும்புத்துறை, நவ.22
பாஷையூர் பகுதி கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் கடற்பகுதிகளிலுள்ள மீன் பட்டிகளில் உள்ள மீன்களை இனந்தெரியாதவர்கள் திருட்டுத்தனமாகப் பிடித்துச் செல்வதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த தொழிலாளர்கள் மீன்பிடிக்குச் செல்லாத வெள்ளிக் கிழமைகளிலேயே பெரும்பாலும் இவ்வாறான திருட்டு மீன்பிடி இடம்பெறுகிறது.

கல்லடி, கௌதாரிமுனை, பள்ளிக்குடா, மறுகரை, மண்டைதீவுப் பகுதிகளில் பாய்ச்சப்பட்டுள்ள வலைப் பட்டிகளில் திருட்டு இடம்பெறுவதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வலைக் கூடுகளுக்குள் வெடிகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் வலைகளும் சேதமடைவதாகக் கூறப்படுகிறது. (வ-135)

## நுணாவில் நூலக வாசிப்பு மாத நிகழ்வு



தென்மராட்சி, நவ.22
சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப் பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், நுணாவில் அமெரிக்கன் மிஷன் தேவாலய போதகர் அருட்பணி தேவராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நகர சபை உறுப்பினர்களான க.மயில்வாகனம், த.சுதர்சன், ந.திருக்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
நூலகத்துக்கு பொதுமக்களால் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.
தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு விருந்தினர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. (வ-9)

## வெள்ள வாய்க்கால் திருத்தம் 2 ஆம் கட்டப் பணி ஆரம்பம்

வலி.தென்மேற்கு, நவ.22
மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வடலியடைப்பு வெள்ளவாய்க்காலின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள வடலியடைப்பு வெள்ள வாய்க்கால் பல வருடங்களாகத் திருத்தப்படாமல் சேதமடைந்த நிலையில் இருந்தது. இதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் மழை காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுப் பெரும் சிரமங்களுக்குள்ளாவதுடன் போக்குவரத்துச் செய்ய முடியாமல் திண்டாடினர்.
குறித்த வாய்க்காலின் குறித்த அந்தப் பகுதி மக்கள் இந்த விடயத்தை அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசசபை உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதை அடுத்து பிரதேசசபை எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக யாழ்.அரச அதிபரால் முதற்கட்டமாக வழங்கப்பட்ட 2.4 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் வாய்க்காலின் முதலாம் கட்டப் பணி பூர்த்தியடைந்தது.
வெள்ளவாய்க்காலின் வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பு குறித்தும் மழைக்கு முன்பு இந்த வேலையைச் செய்து முடிக்க வேண்டிய அவசியம் தொடர்பாகவும் அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து வாய்க்காலின் இரண்டாம் கட்டப் பணிக்கு அரச அதிபரால் மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.
அந்த நிதி மூலம் வெள்ளவாய்க்காலின் பணிகள் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளைச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மேற்கொண்டமையை அடுத்து இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(வ-115)

## சடலத்தை அடையாளம் காட்டுக

வாகன விபத்தில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். அவரை அடையாளம் காணுமாறு கிளிநொச்சிப் பொலிஸார் கேட்டுள்ளனர்.
பரந்தன் ஏ-9 வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
அவரது பெயர் வெற்றிவேல் என்றும் 65 வயது மதிக்கத்தக்க அவர் சந்தோசம் என்றும் அழைக்கப்படுபவர் என்றும் விசுவமடு தொட்டியடி, கிளிநொச்சி உமையாள்புரம் பகுதிகளில் வசித்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.
கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று உயிரிழந்துவிட்டார். உறவினர்கள் வந்து அடையாளம் காணுமாறு பொலிஸார் மேலும் கோரியுள்ளனர். (ஐ-4-6)

## பொதுநலவாய மாநாட்டில்
# இந்தியா பங்கேற்றதை எதிர்த்து வழக்கு தாக்கல்

சென்னை, நவ.22
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றதற்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இலங்கையில் நடைபெற்ற காமன் வெல்த் மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்றும் தமிழக சட்டசபையில் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப் பட்டது. பல்வேறு தமிழ் அமைப்புகளும் இந்த கோரிக் கையை வலியுறுத்தின.
ஆனால் இந்திய அரசு சார்பில் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், இப்போது உச்ச நீதிமன் றத்தி லும் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.
உச்ச நீதிமன்றத்தில் சட்டத் தரணிகள் சுந்தரவதனம், ராஜேந்திரன் மற்றும் டிராபிக் ராமசாமி ஆகியோர் சார்பில் ஒரு மனு தாக்கல் செய் யப்பட்டது. அதில், இலங்கை யில் நடைபெற்ற பொதுநல வாய மாநாட்டில் கலந்து கொள்வது என்று மத்திய அரசு எடுத்த முடிவும், வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மாநாட்டில் கலந்து

**இந்திய அரசு சார்பில் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், இப்போது உச்ச நீதிமன் றத்தி லும் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.**

கொண்டதும் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
1994 ஆம் ஆண்டில் எஸ். ஆர். பொம்மை வழக்கில், உச்ச நீதிமன்றம் அடிப்படை கட்டமைப்புகளை மீறாமல் மத்திய அரசு செயல்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. அதன் பின்னரும் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும், மக்க ளின் போராட்டங்களுக்குப் பின்னரும், மத்திய அரசு தமிழகத்தின் பிரதிநிதிகளை கலந்து ஆலோசிக்காமல் பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ள முடிவெடுத்தது. இந் திய அரசியலமைப்பின் அடிப் படைக் கட்டமைப்புக்கு எதி ரானது.
இனிமேல் இலங்கை குறித்த வெளியுறவு தொடர்பான விடயங்களை தமிழ் நாடு அரசு அல்லது தமிழ் பிரதிநிதிகளை கலந்து ஆலோ சித்த பின்னரே முடிவெடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என் றும், நாங்கள் உச்ச நீதிமன் றத்தை அணுகி யிருக்கிறோம் என்றும் மனுதாரர் சுந்தரவதனன், மனுவை தாக்கல் செய்த சட்டத் தரணி ராஜா ராமன் ஆகியோர் பத்திரிகையாளர்களிடம் தெரி வித்தனர். இந்த வழக்கு இன் னும் இரண்டு வாரங்களில் விசார ணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளக விசாரணைகளின் மூலம் குற்ற வாளிகளை தண்டியுங்கள்
### *இலங்கையிடம் கோருகிறது இந்தியா*

யாழ்ப்பாணம், நவ.22
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு உள்ளக விசாரணை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. அத்துடன் போர்க் குற்றங்களைக் காரணம் காட்டி வெளிநாட்டு முதலீட்டைத் தடுப்பது சரியான தல்ல எனவும் அது கூறியுள்ளது.
சிங்கப்பூரில் இரண்டாவது தெற்காசியமாநாடு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமா னது. இதில் இந்தியா சார்பில் கலந் துகொண்ட மத்திய நிதியமைச்சர் ப.சிதம் பரம் மனித உரிமை கள் மீறப்பட்டமை தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இலங்கை அரசுக்கு உள்ளது என்று குறிப்பிட்டார்.
இலங்கையில் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளான நிலையில், அந்த நாட்டின் முதலீட்டுக்கு ஏன் அனுமதிக்க வேண்டும்? என்று பிரதிநிதி ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சிதம்பரம், இது ஒரு மனித உரிமை மீறல்கள் விவகாரம் என்றார்.
இலங்கை அரசுக்குக் கொடுக்கப்படும் நெருக்கடிக்கு அந்த நாடு பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடையக் கூடாது என்பது அர்த்தம் அல்ல என்றும் சிதம்பரம் தெரிவித்தார்.
(த-5)

**கார் விற்பனைக்கு**

வங்கி முகாமையாளரது பாவனையிலுள்ள WP KD xxxx 2005 இல் இறக்குமதி செய்யப்பட்ட Beige நிற Toyota Corolla Auto கார் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு : 072 4108953

## பணிக்கொடை கொடுப்பனவுகள்

இலங்கை மத்திய போக்கு வரத்து சபையில் கடமையாற்றி இளைப்பாறியவர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவுகள் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் பருத்தித்துறையைச் சேர்ந்த 6 பேரும், காரைநகரைச் சேர்ந்த 3 பேரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 பேரும் என 25 பேர் இது வரை பணிக் கொடைகளைப் பெற்றுக் கொள்ள வில்லை.
எனவே தொடர்புடையவர்கள் யாழ்.மாட்ட தொழில் திணைக்களத்துக்கு இந்த மாத இறு திக்குள் வருகை தந்து உரிய பணிக்கொடைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.
(வ-14)

**காணவில்லை**



மண்டை தீவைச்சேர்ந்த மெலானியஸ் டிலக்ஷன் என்பவர் 20.11.2013 மு.ப. 10 மணியிலிருந்து காணாமல் போய்விட்டார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தகவல் தரவும்.
தொ.பேசி. : 071 4667697, 071 2477565

**மரண அறிவித்தல்**



**வீரவேல் அருளானந்தம்**

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட வீரவேல் அருளானந்தம் நேற்று (21.11.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வீரவேல் சிவயோகவல்லி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ஆனந்தர் - நீலாயாதாட்சி தம்பதியரின் மருமகனும் திலகவதியின் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் யாழ். போதன வைத்திய சாலை - இரத்தவங்கி) அன்புக் கணவரும் அனோஜா, கஜனுதன் (BNS - Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமங்கலா வின் ( இலங்கை வங்கி கைதடி) மாமனும் காலஞ்சென்ற குருநாதர் மற்றும் சிவானந்தன் (கனடா), கமலாதேவி (கனடா), கெங்காதேவி (கொழும்பு), சீதாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன் சத்தியவதி (கனடா), நாகலட்சுமி, விக்கினேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரி, குமுதினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி வல்லைவீதி, சங்கானை.
தகவல்: மனைவி பிள்ளைகள்
021 225 0971, 077 7173338, 077 8338993

**மரண அறிவித்தல்**



**கணபதி தம்பிப்பிள்ளை**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தம்பிப்பிள்ளை கடந்த (19.11.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுனகராசா (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் க்ல்லூரி), இரவீந்திரராசா (கனடா), யோகேஸ்வரி (டென்மார்க்), இராஜேஸ்வரி (கனடா), தவராசா (அக்ரிகோ சுன்னாகம்), ஜெயராசா (மின்னிய லாளர்), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதனின் பெரியதந்தையும், மகாமதி, மலர்விழி (கனடா), குணசிங்கம் (டென்மார்க்), பரமநாயகம் (கனடா), திருமகள் (ஆசிரியை, கிளி/ முழங்காவில் ம.வி), நகு லாம் பிகை, சந்திரகுமார் ஆகியோரின் மாமனும், நிறோஜா, தவபாலன், முரளிதரன், தர்சன், காயத்திரி, கார்வதி, செந்தூரன், ஆனந்தராஜ், கஜேந்திரன், அனித்தா, தினேந்திரன், கஸ்தூரி, தர்சா, நவதட்சன், சபேசன், லகீசன், லக்சனா, லக்கீஷன், கேதீஸ்வரன், சுரேந்திரன் ஆகியோரின் பேரனும், சறன், சஜினா, கஜித் ஆகி யோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜாமாச் சந்தி, ஆனந்தவீதி, மானிப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.

## பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு சுற்றுமதில்

வலி.தென்மேற்கு, நவ.22

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் உபதவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுமக்களின் நிதியுதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் மாடிக் கட்டடமாகக் கட்டப்பட்ட தலைமைக் காரியாலயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியான பொருள்கள் வைக்கப்பட்டிருப்பதாலும் இரவுக் காவலாளி நியமிக்கப்படாமையாலும் தலைமைக் காரியாலயத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியாக இருப்பதாகச் சுட்டிக்காட்டிய உபதவிசாளர் கட்டடத்தின் கிழக்குப் பக்கமாக மக்கள் உட்பிரவேசிப்பதால் சுற்றுமதில் கட்ட வேண்டும் என்று சபையில் தெரிவித்தார்.

உபதவிசாளரின் கருத்தை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள் சுற்றுமதில் அமைப்பதற்கான யோசனைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். (வ-115)

## சமூக சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரிகள் யாழுக்கு





யாழ்ப்பாணம், நவ.22

சமூக சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வடமாகாணத்தில் அமைச்சால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை நடத்தினர்.

கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் மாகாண சமூக சேவை திணைக்களத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வசந்திகா டயஸ் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் முதியோர் செயலகப் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளை பொதுமக்கள் பெறுவதில் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் அமைச்சின் வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (வ-9)

## 256 மயானங்கள் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.22

யாழ்.மாவட்டத்தில் உள்ள 256 மயானங்களுக்கு விரைவில் பாதுகாப்புச் சுவர், தகனக் கொட்டகைகள் அமைத்து அவை புனரமைக்கப்படவுள்ளன.

முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ் காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டத்தை தற்போது உள்ளூராட்சி சபைகளின் ஊடாக முன்னெடுக்க அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவுள்ளார். மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் ஊடாக இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படவுள்ளது.

சில உள்ளூராட்சி சபைகள் தமது பிரதேச மயானங்கள் அமைந்துள்ள இடங்களை புனித பூமிகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன் சபை நிதியைப் பயன்படுத்தி மீள் புனரமைப்புச் செய்து வருகின்றன.

இதேவேளை குடாநாட்டில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் மயானங்கள், இடுகாடுகள் என்பன தற்போதும் பராமரிப்பு இன்றி பற்றைகளாகவே காட்சியளிக்கின்றன. (வ-41)

*ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி*

## மரக்கன்று நடுகை திட்டம் சாம்பலோடையில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ.22

ஜனாதிபதியின்பிறந்ததினத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச செயலர்பிரிவில்சாம்பலோடைப் பகுதியில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் மரக்கன்றுகள் நடும் திட்டம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப் பட்டது.

'தேசத்தின் நிழல்' தேசிய மரநடுகைத் திட்ட மாவட்ட நிகழ்வாகக் காரைநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பழமரக்கன்றுகள், மரங்கள் நடுகைசெய்யும்திட்டத்தின் ஆரம்பமாக மரக்கன்றுகளை யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி ஆகியோர் நட்டுவைத்தனர். (வ-250,14)

## நூலகத்துக்கு கணினி அன்பளிப்பு....



வரணி பொது நூலகத்தின் வாசகர்களது பாவனைக்கென கணினியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. வரணிப் பகுதியைச் சேர்ந்த நூலக அபிவிருத்திச் சங்க உறுப்பினரான சி.கணபதிப்பிள்ளை கணினியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். பொது நூலகத்தில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் கணினியை நூலகர் பொ.இரவீந்திரனிடம் கையளித்துள்ளார். இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் சி.துரைராஜா, செயலாளர் செல்வி தி.தர்சினி ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)

## ப.நோ.கூ.சங்க ஊழியர்களுக்கு நிலுவைப் பணம்

நவாலி, நவ.22

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க ஊழியர்களுக்கு வழங்கப்படாது நிலுவையில் இருந்து வந்த 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு சங்க நிர்வாகத்தால் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிலையத்திலிருந்து தற்போது அதிக வருமானம் கிடைப்பதால் படிப்படியாக ஏனைய கொடுப்பனவுகளும் தமக்கு கிடைக்கும் என்று ஊழியர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (வ-100)

*கற்கள் பரவிய நிலையில் காணப்பட்ட*

## சகாய வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

மன்னார், நவ.22

மக்களின் கோரிக்கையை அடுத்து அம்பாள்புரத்தில் கற்பரவிய நிலையில் காணப்பட்ட சகாய வீதியின் புனரமைப்புப் பணிகள் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அம்பாள்புரத்தில் சேதமான நிலையில் காணப்பட்ட சகாய வீதியைப் புனரமைப்பதற்கு முன்வந்த பிரதேசசபை கேள்விகோரல் மூலம் ஒப்பந்தகாரரிடம் வேலையை ஒப்படைத்தது.

வேலையைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் ஒரு கிலோமீற்றர் நீளமான வீதிக்கு கற்களைப் போட்டுப் பரவிவிட்டு வேலைகளை இடைநடுவில் நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாது அவலப்பட்ட மக்கள், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியதுடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் சுட்டிக் காட்டி வந்தனர்.

மக்களின் நெடுநாள் கோரிக்கையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மேற்படி வீதியைப் புனரமைக்கும் பணி பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

## நகரசபை எல்லைக்கு உட்பட்ட வீதிகள் திருத்தப்படல் வேண்டும்

*சாவகச்சேரி நகர சபை கோரிக்கை*

தென்மராட்சி, நவ.22

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள மூன்றாண்டு வேலைத் திட்டங்கள் தொடர்பாக சாவகச்சேரி நகர சபையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் காணப்படும் வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள அனைத்து வீதிகளும் திருத்தப்படல் வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நகர சபை உறுப்பினர்களால் நகர சபைத் தொழிலாளர்களின் விடுதிகள் மீள அமைத்துக் கொடுத்தல், சாவகச்சேரி நகரில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தை சகல வசதிகளுடன் புனரமைத்தல், சபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தில் கைத்தொழில் பேட்டைகள் அமைத்தல், சாவகச்சேரி கடலேரிக் கடற்கரையை பொழுது போக்கு நிலையமாக மாற்றுதல் போன்ற முன்மொழிவுகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரச அதிபருக்கு அறிவிக்கப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், நவ.22

யாழ்.திருநெல்வேலி காளி கோயில் சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி காளி கோயில் அன்னதான மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## குடத்தனை மேற்குக்கு குடிதண்ணீர்

வடமராட்சி, நவ.22

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி கிழக்கு குடத்தனை மேற்கு கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் கடந்த ஞாயிறு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாகாண சபையின் 16 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறை பிரதேசசபை குடத்தனை வயல் வீரகத்திப் பிள்ளையார் கோயிலடியில் 5 ஆயிரம் லீற்றர் கொள்ளக்கூடிய தண்ணீர்த் தாங்கி ஒன்றை அமைத்து கோயில் கிணற்றிலிருந்து தண்ணீர் பெற்று குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் இணைந்து குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

குடத்தனை மேற்குக் கிராமத்தில் 4 குடிதண்ணீர் 'பைப்'கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர். இந்தத் திட்டத்தால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 90 குடும்பங்கள் பயனடைகின்றன.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் குடிதண்ணீருக்காக இந்தக் கிராம மக்கள் கடும் கடும் சிரமங்களை அனுபவித்து வந்தனர். (வ-8)

## பாவனையற்ற காணிகளை துப்புரவாக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.22

வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ள பாவனையற்ற காணிகளில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் மற்றும் செடிகளை மக்கள் வெட்டி அழிக்க வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வெற்றுக் காணிகளில் இவ்வாறு அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் சந்தர்ப்பம் காணப்படுகிறது.

சபையால் இம்மாத இறுதியில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டுக்கு முன்பாக மக்கள் தமது வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்பு சுற்றாடல்களைத் துப்புரவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (வ-17)



### இலங்கை அரசுக்கு எதிராக

# ஐ.நாவில் போர்க்குற்ற விசாரணை இந்தியாவின் தீர்மானம் அவசியம்

## மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை

சென்னை, நவ.22

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையில் போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்.

பல்வேறு நாடுகள் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில் இனியும் இந்திய மத்திய அரசு மௌனம் காக்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் நடத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்ற விசாரணையிலிருந்து தப்பும் நோக்குடன் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்த பொதுநலவாய மாநாடு அவர்கள் எதிர்பார்த்த வகையில் அமையவில்லை. மாநாட்டுக்குச் சென்றிருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களை நேரில் சந்தித்துள்ளார். இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் மார்ச் மாதத்தின் பின்னர் சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் நட்பு நாடான சீனாவும் இலங்கையின் மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளது. இவையெல்லாம் உலக அரசியல் அரங்கம் இலங்கைக்கு எதிராக மெல்ல மெல்லத் திரும்புகின்றது என்பதையே காட்டுகின்றது.

ஈழத்தமிழர் நலனில் பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் தொடர்ந்து காட்டிவரும் அக்கறை பாராட்டத்தக்கது. தனது நடவடிக்கைகளால் தமிழர்களின் மனதில் கமரூன் கதாநாயகனாக உயர்ந்திருக்கிறார்.

அதேவேளை, இலங்கைமீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்திய அரசு இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்பது மிகவும் வருத்தம் அளிக்கிறது. இலங்கை இனப்படுகொலை, போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான மறுவாழ்வு, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் ஆகியவை குறித்தெல்லாம் பிரச்சினை எழுப்பப் போவதாகக் கூறி, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்ற இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் வெறும் பார்வையாளராகக் கலந்து கொண்டு விட்டு திரும்பியிருக்கிறார்.

தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே அதிகம் உண்டு. ஆனால் அந்தப் பொறுப்பை மத்திய அரசு தொடர்ந்து தட்டிக் கழித்து வருகிறது. இந்த அணுகுமுறை சரியல்ல. வாய்ப் பேச்சுகளை விடுத்து, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம் என்னும் தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும். அதைச் செய்யாத பட்சத்தில் இந்திய அரசின் வாய்ச் சவடால்களை தமிழர்கள் ஒரு போதும் நம்ப மாட்டார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# ஆந்திராவை நோக்கி திரும்பியது 'ஹெலன்'

*தொடரும் இயற்கையின் சீற்றத்தால் திண்டாடுகின்றனர் மக்கள்*

சென்னை, நவ.22

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது புயலாக உருவெடுத்துள்ளது. 'ஹெலன்' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தப் புயல் தற்போது வங்க கடலில், சென்னைக்கு வடகிழக்கே 460 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.



'ஹெலன்' புயல் இன்று ஆந்திராவில் கரையை கடக்கும் என்று இந்தியவானிலைஆய்வுமையம் எச்சரித்துள்ளது. தற்போது 'ஹெலன்' வடகிழக்கில் நகர்ந்து, ஆந்திராவை நோக்கி செல்கிறது. புயல் ஸ்ரீஹரிகோட்டா-ஓங்கோலுக்கு இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'ஹெலன்' புயல் கரையைக் கடக்கும் போது மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் 'பைலின்' புயலால் ஆந்திராவின் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அந்தப் பகுதியில் இன்னமும் இயல்பு நிலை திரும்பாத நிலையில் தற்போது மீண்டும் அங்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதிகளில் இருந்த சுமார் 4 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். (ற)

# அதட்டிய கணவனை புரட்டியெடுத்த மனைவி

சென்னை, நவ.22

புதிய கைத்தொலைபேசி ஏன் வாங்கினாய்? என்று கேட்ட ஒரே காரணத்துக்காகத் தனது கணவனை உருட்டுக் கட்டையால் வெளுத்து, புரட்டி எடுத்துள்ளார் பெண் ஒருவர்.



சென்னை அருகே உள்ள கோவிலாங்குளம் கிராமத்தை சேர்ந்த தம்பதியினர் தாமரை (45), ஜெயலட்சுமி (40). அண்மையில் ஜெயலட்சுமி கணவர் தாமரைக்குத் தெரியாது புதிய கைத் தொலைபேசி ஒன்றை வாங்கி உபயோகித்து வந்துள்ளார்.

அது ஒரு நாள் தாமரைக்குத் தெரியவர "என்னிடம் சொல்லாமல் ஏன் கைப்பேசி வாங்கினாய்?" என்று ஜெயலட்சுமியிடம் தெரியாத்தனமாகக் கேட்டுவிட்டார். அது இருவருக்கும் இடையே சண்டையாகிவிட்டது. சண்டை பெரிதாகி ஜெயலட்சுமியின் கோபம் தலைக்கேறியது. அவரின் கையில் சிக்கியதோ உருட்டுக்கட்டை. பிறகென்ன? தாமரையைப் போட்டுப் புரட்டி எடுத்துவிட்டார்.

தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடமுயன்ற தாமரையை விடவில்லையாம் ஜெயலட்சுமி. சாலையிலும் வந்து நாலைந்து போடு போட்டுள்ளார். ஒருவாறு அவரிடம் இருந்து தப்பி ஓடத் தொடங்கிய தாமரை நேரே பொலிஸ் நிலையம் சென்று தான் தனது ஓட்டத்தை நிறுத்தியுள்ளார். "எனது மனைவி உருட்டுக்கட்டையால் அடித்துக் கொல்லப் பார்க்கிறாள். உடனே எனக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்" என்று பொலிஸ் நிலையத்திலேயே அமர்ந்துவிட்டார் அவர்.

அவரது காயங்களுக்கு சிகிச்சை செய்து ஆசுவாசப்படுத்திய பொலிஸார் தற்போது ஜெயலட்சுமியைக் கைது செய்து அவர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் கணவர்கள் மனைவியரை அதட்டுவதற்கு முதல் உருட்டுக் கட்டை ஏதாவது இருக்கின்றதா என்று ஆராய்ந்துவிட்டுத்தான் அதட்டுகின்றார்களாம். (ற)

## நம்பிக்கை இல்லாத கட்சி காங்கிரஸ்

புதுடில்லி, நவ.22

காங்கிரஸ் கட்சி வாக்குறுதி எதனையும் நிறைவேற்றவில்லை. காங்கிரஸ் கட்சி நம்பத்தகுந்த கட்சியல்ல என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.

மத்திய பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"காங்கிரஸ் கட்சி எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. காங்கிரஸ் கட்சி நம்பத்தகுந்த கட்சியல்ல. காங்கிரஸ்கட்சியின்திட்டங்கள் அனைத்தும் சராசரி மனிதர்களுக்கு எதிரானதாகவே உள்ளது. அவர்களின் உள்நோக்கம் மாறாமலேயே உள்ளது. காங்கிரஸ் கட்சி பற்றி நான் கூறிய கருத்துக்கள் அனைத்தும் என்னுடையதல்ல. மக்கள் கூறுவதையே நான் பிரதிபலிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார் மோடி. (ற)



இந்தியாவின் சேலம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம்வீடொன்றில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் அக்கம்பக்கத்து வீடுகளும் தரைமட்டமாகின. இந்த விபத்தில் பெண்கள் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். 7 பேர் பலத்த காயமடைந்த னர். காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை மோசமாக உள்ளது என்று மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வீடுகள் வெடித்துச் சிதறியதில் அதிலிருந்து வெளி யான சிமெந்துப் பாகங்கள் சுமார் 100 மீற்றர் தொலைவுக்குச் சென்று வீழ்ந்துள்ளன. (ற)

# ஸ்ருதிஹாசன் மீது தாக்குதல் அதிர்ச்சியில் திரையுலகத்தினர்

மும்பை, நவ.22

நடிகை ஸ்ருதிஹாசனின் வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர் ஒருவர் அவரைக் கட்டிப் பிடித்ததுடன், அவரது கழுத்தையும் நெரித்துள்ளார். ஒருவாறு அவரின் பிடியில் இருந்து திமிறி ஓடிய ஸ்ருதிஹாசன் சத்தமிட்டதை அடுத்து அந்த மர்மநபர் தப்பி ஓடியுள்ளார். இந்தச் சம்பவம் திரையுலக வட்டாரங்களில் பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கமல்ஹாசனின் மகளும், முன்னணி நடிகையுமான ஸ்ருதிஹாசன் படப்பிடிப்பு ஒன்றுக்காக மும்பையில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் தனியாக வீடு எடுத்து தங்கியுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஸ்ருதி தங்கியுள்ள வீட்டு அழைப்பு மணி ஒலிக்க, பாதி தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்துள்ளார். சட்டென்று உள்ளே நுழைந்த அந்த மர்ம நபர், அவரை கட்டிப்பிடித்ததுடன் கழுத்தை நெரிக்க முயன்றுள்ளார். ஒருவாறு தப்பிய ஸ்ருதி குரல்கொடுத்ததை அடுத்து அக்கம்பக்கத்தவர்கள் ஓடி வந்துள்ளனர். அதையடுத்து அந்த மனிதன் தப்பியோடியுள்ளான். இதுகுறித்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# தவறான நோக்கத்துக்கு பயன்படும் சமூக வலைத்தளங்கள் *- ஷிண்டே*

புதுடில்லி, நவ.22

சமூகவலைத்தளங்கள் தவறான நோக்கத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன. இணையக் குற்றங்கள் தொடர்பில் அதிக கவனம் தேவை என்று தெரிவித்துள்ளார் இந்திய உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டே.

புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"இணையத்தள வசதிகளால் நாம் பல முன்னேற்றங்களைக் கண்டுவருகின்றோம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் சமூக வலைத்தளங்களில் இருக்கும் நன்மைகளை விட்டுவிட்டு அவை தவறான செயற்பாடுகள், நாட்டிற்கு எதிரான குற்றங்கள் பரப்பி விடுல் போன்றவற்றுக்கே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அங்கு காணப்படும் சுதந்திரம் தவறான வழியில் செல்கிறது. இது கவலை தரும விடயமாகும். அவைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும். சிலரை அச்சுறுத்தும் விதமாக வதந்தியும் பரப்பப்படுகிறது. முஷாபர்நகர் கலவரத்தில் சமூக வலைத்தளங்களும் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மலாலாவுக்கு உயரிய விருது

பரிஸ், நவ.22
ஐரோப்பிய யூனியனின் உயரிய விருதான சகோரோவ் மனித உரிமைப் பரிசு பாகிஸ்தான் சிறுமி மலாலாவுக்கு வழங்கப்பட்டது.
பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்காக போராடி வரும் சிறுமி மலாலா யூசுப் சாய் தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். அதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைகளின் பின்னர் தற்போது லண்டனில் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.
தற்போதும் மலாலாவின் உயிருக்கு தலிபான்களால் அச்சுறுத்தல் இருந்துவரும் நிலையில், தனது போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.
இந்த நிலையில் இவரது செயல்களை கௌரவிக்கும் வகையில் ஐரோப்பிய யூனியனின் உயரிய சகாரோவ் மனித உரிமை பரிசு வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விருது நேற்று முன்தினம் கிழக்கு பிரான்சில் உள்ள ஸ்ட்ராஸ்போர்க் நகரில் விருது வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட ஐரோப்பிய நாடாளுமன்ற தலைவர் மார்டின் ஸ்க்கல்ஸ், விருதை வழங்கினார். 50 ஆயிரம் யூரோ பணத்துடன் கூடிய இந்த பரிசை உலகெங்கும் உள்ள மனித உரிமை பிரசாரகர்களுக்கு அர்பணிப்பதாக சிறுமி மலாலா தெரிவித்துள்ளார். (ற)

## டுவீட்டரில் சவூதி முதலிடம்

லண்டன், நவ.22
சமூக வலைதளமான டுவிட்டரைப் பயன்படுத்துவதில் சவூதி அரேபியா முன்னிலையில் உள்ளது. 'பியர் ரீச்' என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
சவூதி மக்களில் 32 சதவீதம் பேர் 'டுவிட்டர்' வலைதளத்தை பயன்படுத்துகின்றனர். இந்தியா, நைஜீரியா மற்றும் ஜேர்மனி நாட்டு மக்கள் மிகக் குறைவாக ஒரு சதவீத அளவே டுவிட்டரைப் பயன்படுத்துகின்றனர்.
இந்த வலைதளத்தை அறிமுகப்படுத்திய அமெரிக்கா, டுவிட்டர் வலைத்தளப் பயன்பாட்டாளர்கள் வரிசைப்பட்டியலில் எட்டாவது இடத்தில் தான் உள்ளது. முதல் ஐந்து நாடுகளில், ஆங்கில மொழி பேசாத நாடுகளில், சவுதி அரேபியா முதலிடத்தில் உள்ளது என்று அந்த ஆய்வு குறிப்பிடுகின்றது. (ற)

# தடைக்கு இது தருணமல்ல


## ஈரான் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா



வொஷிங்டன், நவ.22
ஈரானுக்கு எதிராகப் புதிய பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்கு இது தருணமல்ல. அதுகுறித்து ஆலோசனை செய்வதற்கு ஆறுமாத அவகாசம் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் ஈரான் அணு செறிவூட்டலுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையிலே அமெரிக்க ஜனாதிபதி இந்தக் கால அவகாசத்தைக் கோரியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"ஈரானின் அணுத்திட்டம் தொடர்பில் மேற்குலக நாடுகளின் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். தற்போது ஈரானுடன் இணக்கப்பாடான முடிவு ஒன்றை எட்டுவதற்கே நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அந்த நாட்டின் மீது புதிய தடைகள் விதிப்பதன் மூலம் தற்போதுள்ள சுமூக நிலையில் மாற்றம் ஏற்படும். அந்நாட்டுடன் பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் நிலையில் புதிய பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்து ஆலோசிப்பதற்கு எமக்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை ஈரானுடனான அணுத் திட்டம் தொடர்பாக பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூனுக்கும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரௌஹானிக்கும் இடையே பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. (ற)

## 'டிரோன்' தாக்குதலில் 8 பேர் சாவு

பெஷாவர், நவ.22
வடமேற்குப் பாகிஸ்தானில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் காயமடைந்துள்ளனர்.
பாகிஸ்தானில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்தும் தாக்குதல்களுக்கு கடும் எதிர்ப்பு நிலவி வருகின்றது. இது பாகிஸ்தான் அரசின் இறைமையை மீறும் செயல் என்று அந்நாட்டு அரசு கடும் விசனம் வெளியிட்டு வருகின்றது.
எனினும் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. (ற)



எரிமலைகள் தொடர்ந்து வெளியேற்றும் குழம்புகள் படிந்து டோக்கியோவின் தென் கிழக்கே புதிய தீவுத்திட்டு ஒன்று தோன்றியுள்ளது என்று ஜப்பானியக் கடலோரக் காவற்படை தெரிவித்துள்ளது. மனிதர்கள் நடமாட்டம் அற்ற போனின் தீவுகள் என்று அழைக்கப்படும் ஒகசவாரா தீவுத்தொடரின் அருகில் நிஷிநோஷிமா கடற்கரையை ஒட்டியுள்ள கடற்பரப்பில் இந்த தீவு அமைந்துள்ளது. இந்தத் தீவு சுமார் 200 மீற்றர் விட்டம் கொண்டதாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இவ்வாறான தீவுத் திட்டுக்கள் நாளடைவில் மறைந்துவிடும் என்றும் ஜப்பானியக் கடலோரக் காவற்படை தெரிவித்துள்ளது. (ற)

## ஈராக் குண்டுவெடிப்புகள்: 49 பேர் சாவு; பலர் காயம்



பாக்தாக், நவ.22
ஈராக் தலைநகர் பாக்தாக்தில் நடத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 49 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.
பாக்தாக் நகரில் சுமார் எட்டு இடங்களில் கார்க்குண்டுகள் வெடித்துள்ளன. அதில் 36 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.
அதைத் தொடர்ந்து கராடா, சட்ரியா, சுலைமானியா, அதமியா ஆகிய இடங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளில் 13 பேர் உயிரிழந்தனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். (ற)

## சேமிப்பு கிடங்கில் தீ

*சீனாவில் 12 பேர் சாவு*

பீஜிங், நவ.22
சீனாவில் உள்ள சரக்குக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். 3 பேர் கடும்தீக்காயங்களுடன் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
தலைநகர் பீஜிங் அருகே உள்ள சாவ்யாங் மாவட்டத்தில் உள்ள சரக்குக் களஞ்சியம் ஒன்றிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் பின்னிரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட சிறிது நேரத்திலேயே களஞ்சியம் முழுவதும் மளமளவென தீ பற்றிக் கொண்டுள்ளது.
20 மீற்றர் உயரத்துக்கு கொழுந்து விட்டெரிந்த தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் 54 தீயணைப்பு வாகனங்களுடன் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் ஈடுபட்டனர். தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தீயணைப்புக் குழுவினர்தெரிவித்துள்ளனர். விபத்துக்கான காரணம் எதுவும் இது வரை தெரியவரவில்லை. (ற)

## தேசத்துரோக வழக்கில் கைதாவார் முஷாரப்?



இஸ்லாமாபாத்.நவ.22
பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீது பதிவு செய்யப்பட்டுள்ள தேசத் துரோக வழக்கின் அடிப்படையில் மீண்டும் அவர் கைது செய்யப்படலாம் என்று கூறப்படுகின்றது.
முஷாரப் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்தபோது இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியமைக்காகவே அவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள முஷாரப்பின் சட்டத்தரணி,
"வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறியமுடிகின்றது. எனினும் அது குறித்து வேறெதுவும் தெரிவிக்க முடியாது" என்று கூறியுள்ளார்.
எனினும் பாகிஸ்தான் அரச சட்டத்தரணியான முனிர் மாலிக், "இந்த வழக்கில் முஷாரப்புக்கு எதிராகப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த வழக்கில் இருந்து அவர் எளிதாகத் தப்ப முடியாது. தூக்குத் தண்டனையோ, ஆயுள் தண்டனையோ நிச்சயம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## இறந்த குழந்தை உயிர் பிழைத்த அதிசயம்



பீஜிங், நவ.22
இறந்ததாகக் கருதப்பட்டு புதைப்பதற்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரெழுந்த குழந்தையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் சீனாவின் அன்ஹூய் மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.
அன்ஹூய் மாகாணத்தைச் சேர்ந்த தம்பதியிருக்குக் கடந்த மாதம் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. பிறக்கும் போதே குழந்தை சுவாசக் கோளாறுடன் இருந்ததால் தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து மருத்துவர்கள் கண்காணித்து வந்தனர்.
கடந்த 12ஆம் திகதி குழந்தையின் உடல்நிலை நிலைமை மோசமடைந்ததால் அதை காப்பாற்ற வெகு நேரம் போராடிய மருத்துவர்கள் இறுதியில் குழந்தை உயிரிழந்து விட்டது என்று தெரிவித்தனர். இறப்புச் சான்றிதழும் வழங்கியது மருத்துவமனை.
சோகத்தில் மூழ்கிப்போன பெற்றோர் குழந்தையின் இறுதிச் சடங்குகளை மேற்கொண்டு, புதைப்பதற்குக் கொண்டு செல்வதற்காக வாகனத்தில் ஏற்றினார். அப்போது அந்தக் குழந்தையில் சிறு அசைவு ஏற்பட்டுள்ளது. அதைக் கவனித்துவிட்டார் உறவினர் ஒருவர். உடனடியாகக் குழந்தை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது உடனடியாக உயிர் காக்கும் கருவிகளின் துணையுடன் அந்த குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் சீனாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உயிருடன் உள்ள குழந்தை இறந்து விட்டது என்று சான்றிதழ் வழங்கிய மருத்துவர் மற்றும் தாதி ஆகியோர் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ற)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 29வது பொதுப் பட்டமளிப்பு விழா - 10.01.2014

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 10.01.2014 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 01.03.2013 ஆம் திகதிக்கு பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 15.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுதத்துவமாணி
3. பொது நிர்வாகத்தில் முதுமாணி
4. அபவிருத்திக் கல்வியில் முதுமாணி
5. தமிழில் முதுமாணி
6. சைவசித்தாந்தத்தில் முதுமாணி
7. முதுகல்விமாணி
8. பட்டப்பின் கல்வி டிப்ளோமா (யாழ்ப்பாணம்/வவுனியா)
9. நூலக விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா
10. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
11. தாதியியல் விஞ்ஞானமாணி
12. மருந்தகவியல்மாணி
13. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி
14. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
15. சட்டமாணி
16. விவசாய விஞ்ஞானமாணி
17. தொழில் நிர்வாகமாணி
18. வணிகமாணி
19. விஞ்ஞானமாணி (பொது / சிறப்பு)
20. கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி

**வவுனியா வளாகம்**

21. வியாபார முகாமைத்துவமாணி (பொது / சிறப்பு)
22. விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும்(பொது)
23. விஞ்ஞானமாணி சிறப்பு கணினி விஞ்ஞானம்
24. விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது / சிறப்பு)
25. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
26. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)
27. ஆங்கில டிப்ளோமா

***கீழ்வரும் தேர்வுகளுக்கு தோற்றியவர்கள் தேர்வு முடிவுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு விண்ணப்பக்கவும்.**

1. கலைமாணி (பொது/சிறப்பு)
2. நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

**2. அறிவுறுத்தல்கள்**

**1. வேண்டுகோள் படிவங்கள்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**2. கட்டணங்கள்**

- ➢ வேண்டுகோள் கட்டணம் ரூபா. 200.00
- ➢ சான்றிதழ் கட்டணம் ரூபா. 350.00
- ➢ பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 50.00

**குறிப்பு:** பின்வருவோர் சான்றிதழ் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது.

- ➢ பட்டமளிப்பு விழாவிற்கு சமூகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
- ➢ ஒன்று/இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்

**3.கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் கணக்கு இல. 162100160000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் கட்டணத்தை செலுத்தவேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர்பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)

**பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.** மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4.பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும்**

நேரடியாக சமூகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

**5.பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6.வேண்டுகோள்படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 15.12.2013 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கைநெறியை குறிப்பிடவும்)

**அ) யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்**

**உதவிப்பதிவாளர்/அனுமதிகள்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

**ஆ) யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்**

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/**
**தேர்வுகள்,**
**வவுனியா வளாகம்,வவுனியா**

* வேண்டுகோள்படிவங்கள்சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 15.12.2013.

முடிவு திகதிக்கு முன்னர்கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிகவிபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/அனுமதிகள்(தொலைபேசி இல. 0212226714/ 0212222006) உடன் தொடர்பு கொள்ளவும் .

**பதிவாளர்**
20.11.2013

(சீ/11965)

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
### GENERAL CONVOCATION –10th January 2014
### SUPPLICATION FORM

**Note:** In writing your Name please ensure that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English spelling of your name as it appears in your Admission Form.

Registration No:- .......................... Index No:- ........................

(1) Name in Full :-

(a) In English: ..................................................

(b) In Tamil: ..................................................

(c) In Sinhala: ..................................................

(2) Name of the Post Graduate Degree/ Degree/ Diploma to be conferred:

..................................................

(3) Year of passing the above examination and **the effective date of the degree** :

..................................................

(4) Whether the Post Graduate Degree / Degree/ Diploma to be conferred **"In Person"** or **"In Absentia "** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Absentia | |

(5) Present Address:- ..................................................

..................................................

(6) Telephone No:- ........................E-mail..........................

(7) Postal Address:- ..................................................

..................................................

(8) **Particulars of Payment made:- (Payment Receipt Attached)**

| | Total Fee | Date of Payment |
|---|---|---|
| (a) Supplication Fee (Rs. 200.00) | | |
| (b) Certificate Fee (Rs.350.00 ) | | |
| (c) Gown Fee ( Rs. 50.00) | | |

I hereby certify that the above information are correct and true to the best of my knowledge.

Date: ............................ ............................

Signature of Applicant

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.22

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சுவரொட்டிப் போட்டி - ஆரம்பப் பிரிவு**

1ஆம் இடம்-பா.அருண்ராம் (செங்குந்த இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்-ந.யதுர்யன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.), 3ஆம் இடம் -கே. நாராயணி (வேம்படி மகளிர் கல்லூரி).

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம்-ர.ராகவன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.), 2 ஆம் இடம்-ந.நிறோசன் (செங்குந்த இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்-எஸ்.நிசான் (செங்குந்த இந்துக்கல்லூரி).

**திறந்த பிரிவு**

1 ஆம் இடம்-ப.அம்பிகை, 2 ஆம் இடம்-த.ஜெனித்தா, 3 ஆம் இடம்-என்.சோபிகா, சி.கஜேந்தினி.

**துண்டுப்பிரசுரப் போட்டி ஆரம்பப் பிரிவு**

1 ஆம் இடம்-கே.நாராயணி (வேம்படி மகளிர் கல்லூரி).

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம்-எஸ்.கேனிசியா (கோண்டாவில் இந்து மகா வித்தி.), 2 ஆம் இடம்-த.மயூரி (கோண்டாவில் இந்து மகா வித்தி.), 3 ஆம் இடம்-வி.மந் துஷா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**மேற் பிரிவு**

1 ஆம் இடம்-வினுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**திறந்த பிரிவு**

1ஆம் இடம்-ப.அம்பிகை.

**விடுகதைப் போட்டி**

1ஆம் இடம்- ப். அயித்தா (கோண்டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.),2 ஆம் இடம்-ஸ்ரீ.கவிதா (கோண்டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.), இ.நர்மதா (கோண் டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.), 3 ஆம் இடம்-தமிழன்பன் (கோண்டாவில் இந்து மகா வித்தி.), தமிழ்மாறன் (கோண்டாவில் இந்து மகா வித்தி.).

**புதிர் போட்டி**

1 ஆம் இடம்-இ.நர்மதா (கோண் டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.), 2 ஆம் இடம்-கு.ஜக்சனா (கோண்டாவில் இந்து மகா வித்தி.), ஜெ.பிரும்சிகா (கொக்குவில் நாமகள் வித்தி.), 3ஆம் இடம் -ஆர்.யதுர்ஷிகா (கோண்டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.).

**சஞ்சிகை ஆக்கப் போட்டி - ஆரம்பப் பிரிவு**

1 ஆம் இடம்-ந.காருனி (புனித ஜோன் பொஸ்கோ),2 ஆம் இடம்-பா.வேணுகோபன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம்-கே.நாராயணி (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - கே.சுபராகா (கோண் டாவில் இந்து மகா வித்தி.), 3 ஆம் இடம்-ர.துஷானி (வேம்படி மகளிர் கல்லூரி).

**ஆங்கில வாசிப்பு போட்டி**

1 ஆம் இடம் -ஸ்ரீ.கவிதா (கோண் டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.), 2 ஆம் இடம்-இ.நர்மதா (கோண்டாவில் இராம கிருஷ்ணா மகா வித்தி.), 3 ஆம் இடம்-பா.ஜனுசிகா (கோண் டாவில் இந்து மகா வித்தி.). (ரு-14)

**வீட்டுப் பணிப் பெண் தேவை**

வவுனியா, வேப்பங்குளத்தில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்து பிள்ளை பராமரிக்க, வீட்டு வேலைக்கு 35 - 50 வயதுக்கு இடைப்பட்ட பெண் தேவை. சம்பளம் 10000/= (40582) (12.3)

**தொடர்பு: 071 418 2350**

**வாகனம் விற்பனைக்கு**

TATA207,வெள்ளைநிற Cap விற்பனைக்குண்டு. (PRxxxx,22000km ஓடியுள்ளது.

**தொடர்பு: 077 515 1761** (33006) (12.3)

**பெயர்மாற்றம்**

கைதடி மத்தி, குமரநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த

**ஐயன் துரைராசா**

ஆகிய நான் 07.10.2013 முதல் எனது பெயரை

**ஐயன் சின்னராசா**

எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதையும் சகல ஆவணங்களிலும் ஐயன் சின்னராசா என கையொப்பமிடுவேன் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(சீ14958)(12.3) **ஐயன் சின்னராசா.**

**கைதடி மத்தி, குமரநகர்.**

## பாதீனியம் செடிகளால் வவுனியாவில் பாதிப்புகள்

வவுனியா, நவ.21

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பாதீனியம் செடி செறிந்து வளர்ந்துள்ளதால் சுவாச நோய்கள் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படு வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரம், தோணிக்கல், குட்செட்வீதி, மாடசாமி கோயிலடி, தேக்கவத்தை , மூன்றுமுறிப்பு, கந்தபுரம், தவசிக்குளம், சிதம்பரபுரம், கோமரசங்குளம், சமளங்குளம், கோயில்குளம், வெளிக்குளம், சிவபுரம், கணேசபுரம், மரக்காரம்பளை, நெளுக்குளம், கூடமாங்குளம், இராசேந்திரம்குளம், இயங்காவூர், அரபாநகர், பம்பைமடு, கிடாச்சூரி , பூந்தோட்டம், மதினாநகர், வேப்பங்குளம், வெளிவட்டவீதி, பூங்கா வீதி, இறம்பைக்குளம், பட்டாணிச்சூர், செட்டிக்குளம், வீரபுரம், ஓமந்தை, அரசமுறிப்பு, புளியங்குளம் உட்பட பல்வேறு இடங்களில் பாதீனியம் செடிகள் செழித்து வளர்ந்துள்ளதைக் காண முடிகின்றது.

பாதீனியச் செடிகளால் சுவாச நோய்கள் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக இந்தச் செடிகளின் வளர்ச்சி அமோகமாகக் காணப்படுகின்றது.

இந்தச் செடிகளை அழிப்பதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொதுமக்கள் முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## இளைய சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது அவசியமானது

*மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு*

மன்னார், நவ.22

எதிர்காலத்தை மாற்றியமைக்கப்போகும் எமது இளைய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களைப் பாதுகாக்கும் முயற்சியை நாம் கைவிடக்கூடாது. இவ்வாறு மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசபிரிய தெரிவித்தார்.

அண்மையில் மன்னாரில் இடம் பெற்ற உலக சிறுவர் தினப் பேரணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

சிறுவர் தின நிகழ்வுகளை பல்வேறு நாடுகள் வெவ்வேறு தினங்களில் கொண்டாடுகின்றார்கள்.

'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' இன்றைய குழந்தைகளின் கைகளில் தான் நம் நாட்டின் நாளைய எதிர்காலம் தங்கியுள்ளது. அத்தகைய குழந்தை களைச் சரியான முறையில் நாம் வளர்த்தெடுக்காது விட்டால் நம் நாட்டின் எதிர்காலம் பாழாகி விடும்.

இன்று பல சிறுவர்கள் வெவ்வேறு வழிகளில் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர். எமது அரசு சிறுவர் பாது காப்பை அதிகரிக்கும் முயற்சி யில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

வடக்கில் 30 வருட காலமாக சிறுவர்கள் புறக்கணிக்கப்பட்டு போருக்குப் பயன்படுத்தப்பட்டார்கள்.

ஆனால் நாம் எல்லோரும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றோம். எமது நாட்டின் எதிர்காலம் எமது குழந்தைகள். அதனால் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் இந்த நாள் மிக முக்கியமான நாள் ஆகும் எனத் தெரிவித்தார். (க-12)

## வடிகால்களை அமைக்கும் பணிகளில் ஊழியர்கள்

*மன்னார் சாவற்கட்டு கிராமத்தில்*



துணுக்காய், நவ.21

மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் வடிகால்களை அமைக்கும் பணிகளில் ஊழியர்கள் மழைக்கு மத்தியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட சாவற்கட்டு கிராமத்தில் உள்ள வீதிகள் சிமெந்து வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் மழையின் போது வெள்ள நீர் தேங்கி நின்று மக்கள் குடியி ருப்புப் பகுதிகளில் தேங்கிய நின்று வெள்ளக்காடாகக் காட்சி யளித்தது. இதனையடுத்து தற்போது சாவற்கட்டுப் பகுதி யில் வடி கால்களை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. (க-415)

## நிரந்தர வீடுகளை வழங்க கோரிக்கை

### கிராம மக்கள் பேரணி; ஜனாதிபதிக்கு மனு





வவுனியா, நவ.22

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கந்தன்குளம் மக்கள் நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

கந்தன்குளம், புலவன் ஊர், குஞ்சுக்குளம், பூவரசங்குளம் பகுதிகளுக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டபோதிலும் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அமைச்சர் ஒருவர் அதனை தாண்டிக்குளம், ஆண்டியாபுளியங்குளம், செக்கட்டிபுலவு, சூடுவெந்த புலவு, புளிதறித்தகுளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் தமது இனம் சார்ந்த மக்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

முற்பகல் 10.00 மணியளவில் வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக இந்தப் பேரணி ஆரம்பித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை முற்பகல் 11.15 மணியளவில் சென்றடைந்தது. இதில் கலந்து கொண்ட மக்கள் கோஷங்கள் எழுப்பியவாறு வந்ததைக் காண முடிந்தது. பேரணியாக வந்த மக்கள் ஜனாதிபதியிடம் வழங்கும்பொருட்டு அரச அதிபரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கந்தன்குளம் கிராம அபிவி ருத்திச் சங்கத் தலைவர் ஜ.யோகராசா தலைமையில் இடம்பெற்றது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், தியாகராஜா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்களான ப.பரமேஸ்வரன், க.துவாரகன் மற்றும் கிராம மக்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (க-402)

## பாலர் பாடசாலையில் கலை விழா

வவுனியா, நவ.22

சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் பாலர் பாடசாலையின் 20 ஆவது கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் நடராஜர் மண்டபத்தில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா.சேனாதிராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) செல்வி லதாங்கி அம்பிகை பாலன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் (வவுனியா தெற்கு கல்வி வலயம்) கே.தர்பாலன் கலந்து கொள்வார். பரிசளிப்பு விழா மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க உதவிச் செயலாளர் சி.நாகராசா தெரிவித்துள்ளார். (க-402)

## இப்படியுமொரு பாடசாலைக் கட்டடம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சின்னச் சாளம்பன் ஈசுவரன் வித்தியால்யத்தின் தற்காலிகக் கட்டம் மோசமாகச் சேதமடைந்ததால் எந்த வேளையிலும் கீழே வீழ்ந்துவிடும் நிலையில் உள்ளதாகப் பெற்றோர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் மழையின்போது வகுப்பறை முழுவதும் நனைந்து ஈரமாகி விடுவதால் இங்குள்ள உபகரணங்கள் பயன்படுத்த முடியாதநிலைக்கு மாறிவிடுகின்றன. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபரிடம் கேட்டபோது நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதன் மூலமே இந்த அவல நிலையைப் போக்க முடியுமெனத் தெரிவித்தார். (க-500)

## ஓட்டோ அனுமதிக்கு புதிய நடைமுறை

*வவுனியாவில்*

வவுனியா, நவ.22

வவுனியாவில் ஓட்டோக்களுக்கான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கிராம அலுவலர்களால் வழங்கப்படும் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஓட்டோ உரிமையாளர்கள் தற்போது அறிமுகப்படுத்தப்படும் புதிய நடைமுறைகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஏனைய ஆவணங்களுடன் தாம் வசிக்கும் பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலர்களிடமிருந்து வதிவிட அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஓட்டோ உரிமையாளர்களது நலன் கருதியும், பொதுமக்களுக்கு ஏற்படும் சில அசௌகரியமான சம்பவங்களைக் குறைக்கும் பொருட்டும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (க-402)

## பண்டாரிக் குளக்கட்டு வீதியூடாக வாகனங்கள் செல்லத்தடை

வவுனியா, நவ.22

வவுனியா பண்டாரிக்குளத்துக்கு அருகில் உள்ள குளக்கட்டு வீதியூடாக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பண்டாரிக்குளம் குளக்கட்டு வீதியூடாக மாடசாமி கோயிலடி, வியாசர் வீதி, பண்டாரிக்குளம் பகுதிகளுக்குச் சென்று வரும் வாகனங்களுக்கு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மிகச் சிறிய இந்த வீதியூடாக ஒருவழிப் போக்குவரத்தை கார், ஹையஸ் போன்ற வாகனங் கள் மேற்கொண்டு வந்தன. இதன் போது விபத்துக்களும் ஏற்பட்டன.

இந்த வீதியை அகலமாக்கும் பணிகள் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீண்டும் விபத்துக்கள் ஏற்பட்டன. தற்போது சைக்கிள், மோட்டர் சைக்கிள் என்பன மட்டுமே இந்த வீதியூடாகச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு குறித்து வெளியூர்க் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்கு பாலமொன்று அமைக்கப்படுமாயின் மக்கள் மருத்துவமனை, சந்தை, பாடசாலை ஆகியவற்றுக்கு இந்த வீதியூடாகச் செல்ல முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## மாந்தை மேற்கில் பயிர்களை அழிக்கும் கால்நடைகள்

மன்னார், நவ.22

மன்னாரின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களை கால்நடைகள் அழித்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஆண்டாங்குளம், காத்தான் குளம், பரப்பாங்கண்டல், குருவில் ஆகிய கிராமங்களில் விவசாயிகள் புழுதி விதைப்பின் மூலமாக காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது நெற் பயிர்கள் ஒரு மாத வளர்ச்சியை அடைந்து காணப்படுகின்றன.

இந்த நிலையில் கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்காததால் அவை வயல் நிலங்களில் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன. இது தொடர்பாக இந்தப் பகுதி கமக்கார அமைப்பு, கமநல சேவை நிலையத்தினர், பிரதேச செயலகத்தினர் எவரும் கவனத்தில் கொள்வதில்லை யெனவும் விவசாயிகள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமங்களில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு விரைவில் மின்சாரம்

ஒட்டுசுட்டானின் பல பகுதிகளுக்கும் அடுத்த ஆண்டுக்குள் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை 50 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தற்போது ஒட்டுசுட்டானிலிருந்து பெருங்கருவேப்பமுறிப்பு குளம் வரையில் மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இதன்போது பெருமளவு பயன்தரு மரங்கள் வெட்டப்படுகின்றன. (க-500)

## மூதூரில் கசிப்பு உற்பத்தி பொருள்கள் சிக்கின



மூதூர்,நவ.22
மூதூர் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த உபகரணங்களும் படகும் செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து மூதூர், கங்கை யாற்றுப் பாலத்துக்கு அண்மையாகவுள்ள நன்னீப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தப் பொருள்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. (ச-40)

## மரமுந்திரிகைச் செய்கை மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறு ஏற்றுமதி பயிர் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் புதிதாக 500 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படவுள்ளது என்று இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.சசிகரன் தெரிவித்தார்.
அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மழை காலம் ஆரம்பித்ததும் நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, கிரான், செங்கலடி, வாகரை, களுவாஞ்சிக்குடி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் இந்த மாவட்டத்தில் 6000 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டு வருகின்றது என்று அவர் கூறினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மரமுந்திரிகை செய்கையில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## வனப்பிரதேசமாக மாற்ற வர்த்தமானிப் பிரகடனம்

### மீளாய்வு செய்யக் கோருகிறார் மாகாண சபை உறுப்பினர்

மட்டக்களப்பு,நவ.22
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளமான அரச காணிகள் அனைத்தும் யாருக்கும் தெரியாமல் வனப் பிரதேசமாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துவதை மீளாய்வு செய்ய வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் காணிகளை யாரும் கையாள முடியாது.
இந்த நடவடிக்கை மாவட்டத்தின் அரச அதிபரிலிருந்து பொது மக்கள் பிரதிநிதிகள் யாருக்கும் தெரியாத விதத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
எனவே போர் காலத்துக்கு முன்பிருந்து மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த காணிகள் அடையாளம் காணப்பட்டு



அவர்களுக்கு அவை வழங்கப்பட்டு மீதமுள்ள காட்டுப் பிரதேசம் மாத்திரமே வனத்திணைக் களத்துக்கு ஒதுக்கப்படவேண்டும்.
எனவே அரச காணிகளை வனப் பிரதேசங்களாக அறிவிப்பதை மீள்பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இணைக்கப்படாது திருமலை பல்கலை

### உறுதியளித்தார் துணைவேந்தர்

திருகோணமலை,நவ.22
திருகோணமலை பல்கலைக் கழகம் தொடர்பாக அண்மைக் காலமாக சில பிரச்சினைகளால் பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
எதுவாக இருந்தாலும் திருகோணமலை பல்கலைக்கழகம் எந்தவொரு பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்படமாட்டாது. அது தனியாகவே இயங்கும் என்று கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.
கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: -
தமிழ் சமூகத்தின் அனைத்து இழப்புக்களுக்கும் கடந்த காலப் போரே காரணமாக இருந்துள்ளது.
நான் கூட போரால் அனைத்தையும் இழந்தேன். நான்



இழந்ததை எனக்கு மீட்டு தந்தது கல்வி தான்.

**நாம் கல்வியை இழக்கக்கூடாது**

எதை நாங்கள் இழந்தாலும் கல்வியை இழந்து விடக் கூடாது. ஆங்கிலம் உலக மொழி. அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆங்கிலக் கல்வியைப் பெற்ற வன் சமூகத்தின் துணிவு மிக்க மனிதனாகிறான்.
பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் கல்வியைத் தொடர வேண்டும். அப்போது அதிக சம்பளம் பெறும் ஒருவராக ஆக முடியும்.

**திருமலை பல்கலை சுயாதீனமாக இயங்கும்**

திருகோணமலைப் பல்கலைக்கழகமானது சுயாதீனமாக இயங்கும்; இது எந்த ஒரு பல்கலைக் கழகத்துடனும் இணைக்கப்படமாட்படாது; இன்று அதன் அபிவி ருத்திக்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இன்னமும் இரண்டு வருடங்களில் இந்த வளாகம் தரமான ஒரு வளாகமாக மாறும். இதனை எனது காலப்பகுதியில் செய்து முடிப்பேன்.

**ஒரு பாடசாலையை நிர்வகிப்பது கடினம்**

பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கலாம். ஆனால் ஒரு பாடசாலையை நடத்துவதென்பது எந்தளவு கடினமானது என்பதை நான் இங்கு பார்த்து உணர்கிறேன். பரிசளிப்பு விழா என்பது சாதனையாளர்களை மட்டும் கௌர விப்பதாக மட்டும் இருக்கக் கூடாது. சாதனை செய்யாது முடங்கிக் கிடப்பவர்களை ஊக்குவிப்பதாக அது அமைதல் வேண்டும். -என்றார். (ச)



இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை கார்மேல் பற்றிமா தேசியப் பாடசாலையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

## பொருள் விலையை குறைக்க முடியாது

### பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.22
அரசால் பொருள்களின் விலையை குறைக்க முடியாது. உலக சந் தையில் பொருள்களின் விலை அதிகரிப்பதாலேயே இலங்கை யிலும் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.
இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.
காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள விதவைகள் மற் றும் பெண்களை தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு சுய தொழில் உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
நாட்டை எந்த அரசு ஆட்சி செய்தாலும் பொருள்களின் விலை குறையாது. உலக சந்தையில் பொருள்களின் விலை அதிகரிப்பதுதான் எமது நாட்டிலும் பொருள்களின் விலை அதிகரிப்புக்கான காரணமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வாழ்வாதார உதவிகள் கிடைத்தன



மட்டக்களப்பு,நவ.22
போரால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஓமடியாமடு கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கும் 44 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
இந்தக் குடும்பங்களுக்கு சிறு கடை வியாபாரம், விவசாய உற்பத்திக்கான நெல், மீன் பிடிக்கான உபகரணங்கள், வீட்டுத் தோட்டத்துக்கான இயந்திரம், பயிர் விதைகள், கால்நடை வளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 45.000 ரூபா வீதம் செல விடப்பட்டுள்ளது.

## விஞ்ஞானபீடம் திறப்பு

காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த தென்கிழக்குப் பல்கலைக் கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் 2ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கடந்த ஒக்ரோபர் மாதம் பிரயோக விஞ்ஞான பீடத்தின் 2ஆம், 3ஆம் வருட மாணவ குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து 53 மாணவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், பிரயோக விஞ்ஞான பீடத்தின் 2ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருந்தது. (ச)

## இருவர் மீது வாள்வெட்டு

நிந்தவூர் பிரதேசத்தில் இரவு வேளை இருவர் மீது இனந்தெரியாதநபர்களால் வாள்வெட்டு மேற் கொள்ளப்பட்டுள்ளது.
நிந்தவூர், மீரா நகர் பிரதேசத்தை சேர்ந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோர் மீது அவர்களை பொலிஸாருக்கு சார்பாக செயற்படுவதாக கூறி வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
வாள்வெட்டுக்கு இலக்கானவர்கள் கூக்குரலிட்டமையால் அந்த வீட்டை நோக்கி அயவர்கள் சென்றுள்ளனர்.
அதனால் தாக்குதல் மேற்கொண்ட இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## திருத்திய படகுப் பாதையை சேவையில் ஈடுபடுத்துங்கள்

### மக்கள் வேண்டுகோள்



மட்டக்களப்பு,நவ.22
திருத்தியமைக்கப்பட்டு ஒரு வாரமாக சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்படிருக்கும் மண் முனை - கொக்கொடிச்சோலை வாவியுடான படகுப் பாதையை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு நீர்வழிப் பயணத்தில் ஈடுபடுவோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மண்முனை- கொக்கட்டிச்சோலைக்கு இடையிலான நீர்வழி படகுப் பாதை பழுதடைந்து ஒருமாத காலமாகிறது. அதனால் ஒரு படகுப் பாதையே தற்போது சேவையில் ஈடுபட் டுள்ளது.
பழுதடைந்த பாதை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
பாதை திருத்தப் பணி கள் பூர்த்தியடைந்து ஒரு வார காலமாகியும் இன்னமும் சேவையில் ஈடுபடுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறித்து பொது மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.
ஒரு பாதை மாத்திரம் சேவையில் ஈடுபட்டுள்ளதால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (ச)

# காணாமல்போனோரின் உறவுகள் நெஞ்சினில் வேலைப் பாய்ச்சாதீர்!

## முரளிதரனுக்கு இராதாகிருஷ்ணன் எம்.பி. எச்சரிக்கை



"வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இன்று சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் விளையாட்டு வீரர் முத்தையா முரளிதரன், காணாமற்போனோரின் தாய்மார்கள் தொடர்பில் கூறிய சில விடயங்கள் மிகவும் பாரதூரமானவை. அவருடைய கருத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது."

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறைத் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் தனது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இன்று சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழர்களாகிய நாம் எமது கருத்துகளை மிகவும் நிதானமாக வெளிப்படுத்த வேண்டும். முரளிதரன் கூறிய சில விடயங்கள் மிகவும் பாரதூரமானவை. ஏனென்றால், எத்தனை தாய்மார்கள் கண்ணீர்வடித்தார்கள் என்பதை விட அத்தனை கண்ணீருக்கும் ஆயிரம் கவலைகள் மனதில் குடிகொண்டிருக்கின்றன.


உண்மையில், போரின் வலி மலையகத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியாது. அந்த வலியைப் பற்றி நாம்பேசலாமே தவிர, அதனை உணரமுடியாது.

எனவே, முரளிதரனுடைய கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது. முரளிதரனுக்கு வடக்கு, கிழக்கு மக்களிடம் நல்ல மரியாதையும் கௌரவமும் இருக் கின்றன.

வடக்கிலே இருக்கின்ற தாய் மார்கள் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? உயிருடன் இருக் கின்றார்களா? இல்லையா? என்ற கேள்விகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கிலே உள்ள தாய்மார்கள் எவரிடம் சென்றாவது தமது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என நினைக்கின் றார்கள். அது அவர்களுடைய தவறு அல்ல.

இதன் காரணமாகவே பிரிட்டிஷ் பிரதமரைச் சந்திப்பதற்காக அவர்கள் வீதிக்கு வந்தார்களே தவிர, வேறொன்றுக்கும் அல்ல. இந்த நிலைமைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின் மனதை வெற்றிகொள் ளும் வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். அதைவிடுத்து



வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல எமது நடவடிக்கைகள் அமையக் கூடாது.

எதிர்வரும் காலங்களில் இதனைச் சிந்தித்து முரளிதரன் மட்டுமல்ல, மற்ற விளையாட்டு வீரர்களும் நடந்துகொள்வார்கள் என நான் கருதுகின்றேன்" - என்றுள்ளது.

# அவிசாவளை குளோரின் வாயு கசிவு விசாரணை 25ஆம் திகதி

## நடைபெறும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

அவிசாவளை பென்ரித் தோட்ட குளோரின் வாயு கசிவு விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவிசாவளை பென்ரித் தோட்டத்தில் அமைந்துள்ள அவிசாவளை நகருக்கு நீர் விநியோகம் செய்யும் நீர்த் தாங்கியில் இடம்பெறும் குளோரின் வாயு கசிவினால் பாதிக்கப்பட்ட தோட்ட தொழிலாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் சார்பாக ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு கடந்த 5ஆம் திகதி நேரடியாகச் சென்று முறையிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, எதிர் வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.45 மணிக்கு நீதிபதி பிரியந்த பெரேரா முன்னிலையில் விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த விசாரணைக்கு மனுதாரர் என்ற முறையில், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனுக்கும், பிரதிவாதிகள் என்ற முறையில் மத்திய சுற்று சூழல் அதிகாரசபை தலைவருக்கும், தேசிய நீர்வளங்கள் மற்றும் வடிகால் சபை தலைவருக்கும், அவிசாவளை நகரசபை தலைவருக்கும், சம்பந்தப்பட்ட ஹன்வெல பிரதேச செயலாளருக்கும் தகுந்த ஆவணங்களுடன் சமூகமளிக்கும்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

# 65 இலட்சம் ரூபா கொள்ளையின் சூத்திரதாரி ஒரு வருடத்தின்பின் கைது

## ஏற்கனவே அறுவர் விளக்கமறியலில்

மினுவாங்கொடையில் தனவந்தர் ஒருவரது வீட்டிலிருந்து 55 இலட்சம் ரூபா பணத்தையும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையிட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் கொள்ளை நடந்து ஒரு வருட காலத்தின் பின் மேல் மாகாண வட பிராந்தியத்தின் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருந்த ஆறு சந்தேக நபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொள்ளைக்கூட்டத்தின் தலைவனாக செயற்பட்ட இந்த நபருக்கு கொள்ளையடித்த பணத்தில் அவரது பங்காக ஏழு இலட்சம் ரூபாவும் ஒரு மோதிரமும் கிடைத்துள்ளது.

அந்தப் பணம் முழுவதையும் அவர் சூதாட்டத்தில் இழந்துள்ளதாகத் தெரியவரு கின்றது. அடகு வைக்கப்பட்டிருந்த மோதிரம் மீட்கப்பட்டுள்ளது.

மஹபாகே பிரதேசவாசியான இந்த நபர் சுமைதூக்கியாக (நாட்டாமை)வேலை செய்தவர் எனக் கூறப்படுகின்றது. மேலதிக விசரணைகள் தொடர்கின்றன.

# காணாமற்போனோரின் உறவினர்கள் அனுபவிக்கும் வேதனைகளை வார்த்தைகளால் மதிப்பிட முடியாது

## முரளிதரன் சார்பில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்கின்றேன்

வடக்கு, கிழக்கில் காணாமல் போனோரின் உறவினர்களின் மன வேதனைகளை வார்த்தைகளால் மதிப்பிட முடியாது. இந்த நிலையில், கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் கருத்துக்கள் மூலமாக காணாமற்போனோரின் உறவினர்களின் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதை நான் அறிவேன். எனவே, முரளிதரன் சார்ந்த இந்திய வம்சாவளியின் தமிழன் என்ற அடிப்படையில் அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் முத்தையா முரளிதரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்த கருத்துகள் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இது எனக்கு ஆச்சரியத்தை கொடுக்கவில்லை. ஏனெனில் அவர் தமிழர் என்ற அடையாளத்தை எப்பொழுதும் வெளிப்படுத்தியதில்லை.

முத்தையா முரளிதரன் புகழின் உச்சக்கட்டத்தில் இருந்த பொழுது தன்னை ஒரு தமிழன் என்று சொல்லியதும் இல்லை. பொது இடங்களில் தமிழில் உரையாற்றியதும் இல்லை. ஆகவே அவருக்கு தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளக் கூடிய மனிதாபிமான சிந்தனையும் இல்லை. அரசை திருப்திபடுத்துவதற்கான கருத்துக்களையே வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் காணாமற்போனோர் சம்பந்தமாக நீண்ட பட்டியல் ஒன்று உள்ளது. காணாமல்போனோரின் உறவினர்களின் மனவேதனைகளை வார்த்தைகளால் மதிப்பிட முடியாது.

காணாமற்போனவர்களின் உறவினர்களை 2007ஆம் ஆண்டிலே தலைநகரத்திற்கு அழைத்து வந்து மாபெரும் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னின்று நடத்தியுள்ளேன்.

ஆனால், அப்போராட்டங்களுக்கு நான் தலைமை தாங்காவிட்டாலும் சம்பந்தப்பட்ட உறவினர்களின் வேதனைகளை பல மணித்தியாலங்கள் அவர்களுடன் பேசி பகிர்ந்து கொண்டுள்ளேன்.

முத்தையா முரளிதரனின் கருத்துக்கள் மூலமாக அவர்கள் மனது எவ்வளவு புண் பட்டிருக்கும் என்பதை நான் அறிவேன். எனவே, முரளிதரன் சார்ந்த இந்திய வம்சாவளியின் தமிழன் என்ற அடிப் படையில் அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள் கின்றேன்.



பிரபா எம்.பி தெரிவிப்பு

காலங்காலமாக 2006 ஆம் ஆண்டு முதல் காணாமற்போனவர்களின் உறவினர்களை அரசு உதாசீனம் செய்து வருகின்றது.

காணாமற்போனவர்களை ஒருபோதும் இந்த அரசு மீட்டுக் கொடுக்கப் போவதும் இல்லை என்ற வேதனையான பக்கத்தையும் நான் அறிவேன் - என்றார்.

# ஹெரோயினுடன் மூவர் மாட்டினர்

பேலியகொட - துட்டகெமுனு மாவத்தை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொட மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் குறித்த சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் பேலியகொட மற்றும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வசமிருந்து 7 கிலோ 520 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



வெலிகம பொலிஸ் பிரிவின் மிதிகம - இப்பாவல வீதி, வதகட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மிதிகமவில் இருந்து இப்பாவல நோக்கி பயணித்த லொறி ஒன்று அதற்கு எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் போதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி வெலிகம - வலான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் வதுகட - மிதிகம பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த விபத்துடன் தொடர்புடைய லாரியின் சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மொரட்டுவை பிரதி மேயருக்கு பிணை

மெட்டிகொட்டுமுல்லே விமலவங்ச தேரரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொரட்டுவை நகரசபையின் பிரதிமேயர் சுஜித் புஷ்பகுமார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை மேல் நீதிமன்றத்தினாலேயே அவருக்கு நேற்று வியாழக்கிழமை பிணை வழங்கப்பட்டுள்ளது.

5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கையைக் காப்பாற்றும் இறுதி நேர முயற்சிகள்

போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து உள்நாட்டில் சுயாதீன விசாரணை மேற்கொள்ள இலங்கை அரசு எதிர்வரும் 2014 மார்ச் மாதத்துக்கு முன் நடவடிக்கை எடுக்கத் தவறினால், சர்வதேச சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்படும் என்று கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எச்சரித்திருந்தார். தற்பொழுது இதேவிதமான கருத்தையே தமது இலங்கை பயணத்தின்போது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் வெளிப்படுத்தியுள்ளார். ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் இலங்கை வரவுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் பற்றிய விசேட அறிக்கையாளர், பலவந்தமான காணாமற்போதல்கள் பற்றிய விசேட அறிக்கையாளர் ஆகியோரும் இவர்களில் உள்ளடங்குகின்றனர். ஆகவே, அடுத்த நான்கு மாதங்களுக்கு இடைப்பட்ட காலம், இலங்கை அரசுக்குப் பெரும் சோதனைகாலமாக அமையப்போகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிவிட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் சர்வதேசம் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இராணுவம் மீதான குற்றச்சாட்டுகளை இராணுவமே விசாரணை செய்வதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லை.

போர் முடிவடைந்த பின்பு இலங்கை வந்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூனும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் விடுத்த கூட்டறிக்கையில், சர்வதேச மனித உரிமைகள் பெறுமானம் மற்றும் சர்வதேச கடப்பாடுகளுக்கமைய மனித உரிமையை மேம்படுத்திப் பாதுகாப்பது தொடர்பில் தன்னார்வ ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு இலங்கை உத்தரவாதமளித்தது. மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும் இணக்கம் தெரிவித்தது. இந்த வாக்குறுதியும் காப்பாற்றப்படவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், அதன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அதேசமயம், பொதுநலவாய மாநாட்டின் இறுதி நாளன்று வெளியிடப்பட்ட கொழும்புப் பிரகடனத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் கையெழுத்திட்டதன் மூலம், இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு வழி அமைத்துக் கொடுத்துவிட்டார் என்று ஐ.தே.கவும் எச்சரித்துள்ளது. ஆகவே, உள்நாட்டில் நம்பகத்தன்மையுள்ள பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி படையினர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து குற்றம் இழைத்தோருக்குத் தண்டனை வழங்க அரசு தவறுமானால் எதிர்வரும் மார்ச் மாதக் கூட்டத்தில் இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடலாம்.

இப்படியான நிலையில் இலங்கைக்கு ஆபத்பாந்தவராக வந்திருப்பவர் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாதான். லண்டனிலிருந்து கொழும்பு புறப்பட முன் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பில் இலங்கை விசாரணை நடத்தும் என்று எவரும் எதிர்பாராத, கோரிக்கைவிடாத திடீர் அறிவிப்பொன்றை கமலேஷ் சர்மா விடுத்தார். இதற்கு ஏற்றாற்போல் மனித உரிமைகள் மீறல் விசாரணைகளை பொதுநலவாய செயலகத்தின் தொழில்நுட்ப உதவிகளுடன் முன்னெடுக்கப்போவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனிடையே பொதுநலவாய செயலகத்தின் மனித உரிமைகள் பிரிவின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழு அடுத்த மாதம் 2ஆம் திகதி இலங்கை வரவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டுவரை இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் முதலில் உள்ளக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம கோரிக்கை விடுத்துள்ளார்.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத்துக்கு முன் உள்நாட்டு விசாரணைக்கு இலங்கையை இட்டுச் செல்வதன் மூலம் சர்வதேச விசாரணையிலிருந்து இலங்கையைப் பாதுகாக்கும் முயற்சியே பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பிலான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை என்று கொள்ள இயலும் - தென்னாபிரிக்காவின் அனுசரணை முயற்சியும் கூட இத்தகையதே.



### மன்மோகனை பின்தள்ளிய

# டேவிட் கமரூன்

ராஜராஜன்

ஒருவாறு பொதுநலவாய நாடு களின் தலைவர்கள் மாநாடு கோலாகலமாக ஆரம்பித்து முடிவடைந்துள்ளது. சர்வதேச ரீதியில் சுமத்தப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்துவரும் இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த மாநாட்டின் மூலமாவது தமது 'இமேஜ்' உயர்ந்து விடாதா என்ற பலத்த எதிர்பார்ப்புக்களுடன் இரவு பகலாகப் பாடுபட்டு மாநாட்டின் வெற்றிக்கு உழைத்தனர். பல ஆயிரம் கோடி ரூபா பணம் தண்ணீராகச் செலவு செய் யப்பட்டது.

**இந்திரலோகமாக மாறிய தலைநகர்**

இலங்கையொரு வறியநாடு என்ற எண்ணம் இங்கு வருகை தரும் வெளி நாட்டுத் தலைவர்களின் மனங்களில் பதிந்துவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தலைநகர் கொழும்பும் அதன் புறநகர்ப் பகுதிகளும் இந்திரலோகம் போன்று காட்சியளிக்கும் வகையில் ஏராளமான பொருள் செலவில் அழகுபடுத்தப்பட்டன. இவற்றையெல் லாம் பார்த்த இந்த நாட்டில் வாழும் சாமானியர்கள் நாம் இலங்கையில்தான் இருக்கின்றோமா என்ற ஐயத்தில் ஆழ்ந்துவிட்டார்கள் என்றே கூற வேண்டும்.

இங்கு வாழ்கின்ற வறிய மக்கள் ஒரு வேளை உணவுக்கே அல்லாடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் பெரும் பொருள் செலவில் இந்த மாநாட்டை இங்கு நடத்தத்தான் வேண்டுமாவென எதிர்க்கட்சிகள் எதிர்ப்புக்குரல் எழுப்பிய போதிலும் அவையாவும் புறக்குடத்தில் ஊற்றிய நீர் போன்று பயனற்றுப் போயின.

பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கும் வெளிநாட்டுத் தலைவர்களைப் பொறுத்தவரையில், ஏதோவொரு காரணத்தால் இங்கு வருகை தராத இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் வருகை தந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளனர். தமது அதிரடியான நடவடிக்கைகள் மூலமாக டேவிட் கமரூன் மன்மோகன் சிங்கின் முக்கியத்துவத்தை கீழே தள்ளி விட்டார் என்றே கூற வேண்டும்.

**இழுபறியில் இருந்த இந்தியப் பிரதமர் பயணம்**

இந்த மாநாடு ஆரம்பமாவதற்கு சில வாரங்களுக்கு முன்பிருந்தே இந்தியப் பிரதமரின் வருகை தொடர்பான சர்ச்சைகள் ஆரம்பித்துவிட்டன. அவர் வருவாரா? வராமல் நின்று விடுவாரா? என்ற விவாதங்களும் இடம்பெற்றன. தெற் காசியாவின் வல்லரசு நாடு என்த் தன் னைத்தானே கூறிக் கொள்ளும் இந்தியா கூப்பிடு தூரத்தில் இருக்கும் இலங்கையில் இடம்பெறும் மாநாட்டில் அந்த நாட்டின் பிரதமர் கலந்து கொள்வது தொடர்பான முடிவை மேற்கொள்ள முடியாது விழித்துக் கொண்டிருந்தது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறவிருக்கும் நிலையில் இலாப நட்டக் கணக்கைப் பார்ப்பதிலேயே இந்திய ஆளும் கட்சித் தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். வட மாநிலங்களில் பாரதிய ஜனதாக் கட்சியின் வெற்றி வாய்ப் புக்கள் பிரகாசமாக உள்ளதென கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்ததால் ஆளும் காங்கிரஸ் கட்சியினர் கலங்கிப் போயுள்ளனர். தென் மாநிலங்களின் ஆதரவையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவர்கள் முனைப்புக் காட்டினர். தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற ஆசனங்கள் உள்ளன. புதுச்சேரியில் ஓர் ஆசனம் உள்ளது. இரண்டையும் சேர்த்து 40 ஆசனங்கள் என்பது பெரிய தொகைதான். இவற்றை இழந்து விடுவதற்கு மன் மோகன் சிங் சார்ந்த காங்கிரஸ் கட்சி ஒரு போதுமே துணியாது. மேலும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் செல்லாக் காசாகி விட்ட காங்கிரஸ் கட்சி ஏனைய கட்சிகளின் தயவையே நம்பியுள்ளது.

**மக்களின் எதிர்ப்பலையால் அடங்கியது**

இந்த நிலையில் மன்மோகனின் இலங்கைப் பயணம் தொடர்பாக இந்திய அரசியல் கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவின. தமிழ் நாட்டிலுள்ள ஈழ ஆதரவாளர்களும், இன உணர்வாளர்களும் இந்தியப் பிரதமர் இலங்கை மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஒரு சில தமிழ்நாடு காங்கிரஸாரும் அந்த நிலைப்பாட்டை ஆதரித்தனர். மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், ஜி.கே.வாசன், திருமதி ஜெயந்தி நடராஜன் ஆகியோர் வெளிப்படையாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஜீ.கே.வாசன் ஒரு படி மேலே போய் பிரதமர் இலங்கை சென்றால் தாம் காங்கிரஸ் கட்சியிலிருந்தே வெளியேறிவிடுவேன் என கடுமையான வார்த்தைகளால் கூறியிருந்தார். சோனியாவின் கைப்பிள்ளையான இந்தியப் பிரதமர் தமது தலைவியின் கை அசைவுக்காக தூக்கத்தை இழந்து காத்துக் கிடந்தார். அவரது இலங்கைப் பயணத்துக்கான ஏற்பாடுகள் யாவற்றையும் பூர்த்தி செய்த இந்திய அரசின் உயரதிகாரிகள் பரபரப்புடன் அங்கு மிங்கும் அலைந்து திரிந்தனர். விசேட விமானம் ஒன்று விமான நிலையத்தில் தவமிருந்தது.

இறுதியில் இந்தியப் பிரதமர் இலங்கை செல்லமாட்டாரென்ற அறிவிப்பு வெளியாகியது. அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் செல்வாரென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பாக இலங்கைத் தமிழர்கள் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இந்திய நாட்டின் தகிடு தத்தங்களை அவர்கள் நன்கு புரிந்தவர்கள். இந்தியாவால் வேதனைகளை அனுபவித்தவர்கள்.

**சொன்னதைச் செய்தார்**

ஆனால் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் இலங்கைப் பயணம் தொடர்பாக எந்தவிதமான இழுபறி நிலையும் காணப்படவில்லை. இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் நிச்சயம் கலந்து கொள்வேன். ஆனால் இதன் நோக்கமே வேறு. மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அல்லல்களை எதிர்கொள்ளும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகக் குரல் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகவே இதனை நான் பயன்படுத்துவேன். இலங்கை ஜனாதிபதியிடம் சில கேள்விகளையும் கேட்கவுள்ளேன் என்று பிரிட்டன் பிரதமர் இங்கு வருவதற்கு முன்னரே தெரிவித்திருந்தார்.

அவர் சொல்லளவில் மாத்திரம் நிற்கவில்லை. செயலிலும் நிரூபித்தார். யாழ்ப்பாணம் சென்றார். பாதிக்கப்பட்டவர்களுடன் உரையாடினார். நிலைமைகளை நேரில் அவதானித்தார். ஆறுதல் கூறினார். அவர் தமது யாழ்ப்பாண வருகையின்போது உலகின் வல்லரசு நாடொன்றின் தலைவர் என்ற வகையில் நடந்துகொள்ளவில்லை. மிகவும் சாதாரணமானவரா கவே அவர் தம்மைக் காட்டிக் கொண்டார்.

அவ்வாறே நடந்தும் காட்டினார். பல வருடங்களாக இடம்பெயர்ந்த நிலை யில் இன்னல்களை எதிர்கொண்டு வரும் வலிகாமம் வடக்கு மக்களை அவர்களின் முகாம்களில் வைத்துச் சந்தித்து நிலைமைகளை நேரில் அவதானித்தார். அவர்களின் குறை களைக் கேட்டறிந்தார். ஆறுதலும் கூறினார். இதைப் போன்றே காணாமற் போனவர்களின் உறவுகளின் வேதனையிலும் அவர் பங்கு கொண்டார். அது மட்டுமல்ல கடந்த காலங்களில் பல தடவைகள் தாக்கு தல்களுக்கு உள்ளான யாழ்ப்பாணத்தின் முக்கியமான பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்று நிலைமைகளை ஆய்வு செய்தார். உண்மை நிலைவரத்தை அறிந்து கொண்டார்.

எவருமே எதிர்பார்க்காத வகையில் பிரிட்டன் பிரதமர் நடந்து கொண்டமை வடபகுதி மக்களிடையே ஒரு நம்பிக்கையை வளர்த்துள்ளது என்று தான் கூற வேண்டும்.

ஆனால் இந்தியப் பிரதமர் இங்கு வந்திருந்தால் அரச ஆதரவான அதிகாரிகளைச் சந்தித்திருப்பார். அமைச்சர் ஒருவரின் சந்திப்புக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பார். தெரிவு செய்யப்பட்ட இடங்களைப் பார்வையிட்டிருப்பார். எல்லாமே நன்றாக இருப்பதாக அறிக்கையில் தெரிவித்திருப்பார். பாதிக்கப் பட்ட தமிழர்கள் இவரின் கண்களில் தென்பட்டிருக்கவே மாட்டார்கள்.

இந்த நிலையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இந்தியப் பிரதமரை விட ஒரு படி மேலேயே தமிழர் கண்களுக்குத் தெரிகின்றார் என்பதில் சந்தேகமே தேவையில்லை. ✸





# கவனம் உங்கள் கண்கள்

அனுஜன்

தொழில்நுட்ப வளர்ச்சியும், விஞ்ஞான மும் போட்டி போடும் காலம் இது. அந்த வகையில், இந்த நூற்றாண்டின், மிகப் பெரிய கண்டுபிடிப்பு கணினி. இன்று, கை பேசி பயன்படுத்துவோரின் எண்ணிக்கைக்கு இணையாக, கணினியைப் பயன்படுத்துவோரும் பெருகி விட்டனர்.

கணினி பயன்படுத்துவது நல்ல விடயம் தான். ஆனால், அதே நேரத்தில், கணி னியில் இருந்து வெளிப்படும் கதிர்களில் இருந்து, கண்களைப் பாதுகாத்துக் கொள்வதும் மிக அவசியம். தொடர்ச்சியாக கணினியைப் பயன்படுத்துவோர் சந்திக்கும், முதல் பிரச்சினை பார்வைக் கோளாறு.

தலைவலி, மந்தமான பார்வை, ஒளியைக் காணும் போது கண் கூசுதல், கண் சிவப்பு அடிக்கடி ஏற்படுதல், கண்வலி, கழுத்து மற்றும் பின் முதுகுவலி, நிறங்கள் மங்கலாக தெரிதல், கண் உலர்ந்து காணப்படுதல், அதோடு கண் எரிச்சல் போன்றவை, கண்களுக்குண்டான பிரச்சினைகளை உறுதிப்படுத்தும்.

கணினி பயன்படுத்தும், 80 சதவீதம் பேருக்கு இந்தகைய பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது.

நாம் பார்க்கும் ஒவ்வொரு பொருளின் நிழலும், கண்ணின் பின்புறம் உள்ள, விழித்திரையில் குவிகிறது. கணினியில் உள்ள, படங்க ளைத் தொடர்ந்து பார்ப்ப தால், இந்த குவிதலில், பிரச்சினை ஏற்படுகிறது. கண்ணில் உள்ள ஈரப் பதத்தை யும், கண்களுக்குத் தேவை யான ஆக்ஸிஜனையும், கண்ணீர் பாதுகாக் கிறது. தொடர்ந்து கணினியைப் பார்ப்பதால், கண் சிமிட்டல் குறைந்து, கண் எரிச்சல் மற்றும் கண்கள் உலர்ந்து போதல் போன்ற பிரச்னைகள் ஏற்படுகின்றன. ஆனால், புத்தகத்தில் உள்ள எழுத்துக்களைப் பார்க்கும்போது, அதன் தெளிவான தன்மையால், இந்த பிரச்னை வருவதில்லை.

**கணினிப் பாதிப்புத் தலைவலியை, எப்படி தெரிந்து கொள்வது?**

பெரும்பாலும் தலைவலி, தலையின் முன் அல்லது பின்பக்கமாகவும். சில நேரம் ஒரு பக்கத் தலைவலியாகவும் வரலாம். குறிப்பிட்ட நேரம் ஓய்வு எடுத்தால், இது சரியாகி விடும். சிறு வயதிலேயே கணினியைப் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு, கிட்டப் பார்வை குறைபாடு ஏற்படுகிறது.

**கண்களைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்**

கணினியை, கண் பார்வையில் இருந்து, 20 முதல் 26 இஞ்சி தள்ளியிருக்கக் கூடியவாறு, அமைத்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் கணினிகள் இருக்கும் அறைகள், குளிரூட்டப்பட்ட தாக இருப்பதால், அதில் இருந்து வரும் காற்று, கண்ணுக்கு நேராக படும்படி உட் காரக் கூடாது.

கணினி இருக்கும் அறையில், வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்வதுடன், பளீர் என்ற வெளிச்சமோ, மங்கலான வெளிச்சமோ இல்லாமல், மிதமான வெளிச்சமாக இருக்க வேண்டும். கணினிப் பணியின் போது, ஒவ்வொரு, 20 நிமிடத்துக்கு ஒரு முறை யும், திரையில் இருந்து, கண்களை அகற்றி, 20 மீட்டர் தொலைவில் உள்ள ஏதாவது ஒரு பொருளை, 20 வினாடிகள் பார்க்க வேண்டும். இப்படிச் செய்யும்போது, கண்களுக்கு இயல்பான பாதுகாப்புக் கிடைக்கும்.

கணினியால், கண்கள் உலரும் பாதிப்பு ஏற்பட்டால், கண் டாக்டர் அறிவுரைகளைக்கேட்கலாம்.

தொடர்ச்சியாகக் கணினி பயன்படுத்தி, கண் சிமிட்டல் குறைந்து போனவர்கள், அடிக்கடி சிமிட்டலை தொடர வேண்டும். அதோடு, கண்களை மூடி, வட்டச் சுழற்சி முறையில், ஒரு முறை சுழற்றி, மூச்சை ஆழமாக உள்ளிழுத்து, பின், கண்களை திறந்து, மூச்சை மெதுவாக விட வேண்டும். கம்ப்யூட்டர் அத்தியாவசியம் என்றான பின், அதனால், கண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகளை, இந்த விதத்தில் சரி செய்து கொள்ள முடியும்.

# குடத்து விளக்கு குன்றின் மேல்...



பா.அபிசாந்

செல்வம் இருக்கும் இடத்திலேயே அது இன்னும் சேர்வதுபோல பிரபலமான புள்ளிகளைச் சுற்றியே புகழ் என்ற ஒளி வட்டங்களும் நிலைகொண்டு விட்டன போலும். இதனால்தான் பிரபலமான பாடசாலைகளின் சாதாரண பெறுபேறுகள்கூட ஆகா, ஓகோ என்று கொண்டாடப்படு கின்ற போதும் பின்தங்கிய பாடசாலை மாணவர் களில் அதி உன்னத சாதனைகள்கூட குடத்தி லிட்ட விளக்காக பிரகாசித்தத் தவறிவிடு கின்றன அல்லது அவர்களின் ஆற்றல் குறித்த வெளிப்பாடுகள் போதியளவில் இடம்பெறுவ தில்லை. ஏனெனில் பின்தங்கிய பாடசாலைகள் பற்றி, கதைப்பது கௌரவக் குறைச்சல் என்றும் சிலர் எண்ணி விடுகின்றார்கள். இத்தகைய மனோபாவத்தால் தான் உள்ளூர் பாட சாலைகளை விடவும் நகரில் உள்ள பிரபல மான பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை சேர்ப்பதில் ஆலாய்ப் பறக்கின்றனர்.


அண்மையில் வெளியான புலமைப் பரீட்சையில்கூட முன்னணிப் பாடசாலைகள் பற்றிய பெறுபேறுகளே அதிகளவில் விளம்பரப்படுத்தப்பட்டன. பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பாடசாலைகளின் பொருளாதாரப் பலம் இத்தகைய விளம்பரப்படுத்தல்களுக்கு இடம்கொடுப்பதில்லை. ஆனாலும், தனியே பகட்டு மட்டுமே ஒரு பாடசாலைக்குப் பெருமை சேர்க்க முடியாது. மாறாக, கல்விப் புலமே அதன் தனித்துவத்தை நிலைநாட்டும் என்பதை நிரூபித்திருக்கிறார் கைதடி குருசாமி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் பா.அபிசாந்.

பின்தங்கிய பகுதியைச் சேர்ந்ததாகக் கருதப்படும் குறித்த பாடசாலையில் கற்கும் அபிசாந், 186 புள்ளிகளைப் பெற்று, தென்மராட்சி வலயத்தில் 3ஆம் இடத்தையும் தனதாக்கியிருக்கிறார். அவருடைய வகுப்பாசிரியரும் ஆரம்பக் கல்வி ஆசிரியருமான கோகிலா கேதீஸ்வரன், பாடசாலை அதிபர், ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் இடைவிடாத ஊக்கமும் ஆதரவும் அவரை இந்தப் பெறுபேற்றை அடைய வைத்தது. அத்துடன் மாகாண கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட பயிற்சிப் பரீட்சைகள், புலமைச் சுடர் வெளியீட்டு வினாத்தாள்கள் போன்றவற்றின் பெற்ற பயிற்சியும் இவரது உயர்வுக்கு உந்துதல் ஆனது.

"எங்களுடைய பாடசாலை பௌதிக வளம் குறைந்தது தான். ஆனாலும், ஆசிரியர்களும் அதிபரும் மாணவர்களை கல்விப் புலத்தில் உயர வைக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்போடு சேவையாற்றி வருவதால் பௌதிகவள மட்டுப்பாடு என்ற தடையை தாண்டி, அபிசாந் இந்தப் பெறுபேற்றை அடையமுடிந்தது. அத்தோடு, கல்வி காருண்யனும் இ.ச.பே.நிறுவன உரிமையாளருமான நாகரட்ணம் தனது சொந்தப் பணத்தில் எமது பாடசாலைக்கு வழங்கிய போட்டோ பிரதி இயந்திரத்தின் மூலம்தான் மாணவர்களுக்கான பயிற்சி வினாத் தாள்களை பிரதிசெய்து வழங்க முடிந்தது. இதுபோன்ற நல்ல உள்ளங்களின் கல்விப் பணியால் எமது பாடசாலையின் பெயரும் மாணவர்களின் புகழும் நாடறியும் வண்ணம் உயரும்" என்று நம்பிக்கையோடு சொல்கிறார் அபிசாந்தின் வகுப்பாசிரியர்.'

கல்விக்கு பௌதிக வளமோ, பிரபலமான பாடசாலையோ காரணம் அல்ல. மாறாக மாணவர்களின் முயற்சியும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமே என்பதை இனியாவது உணர்வோம்.

Dr. ச.முருகானந்தன்



# கர்ப்ப கால ஆரம்ப அசௌகரியங்களைக் கண்டு அஞ்சாதீர்கள்

கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஆரம்பகால அசௌகரியங்களைக் கண்டு முதன் முறையாக கருத்தரிக்கும் பெண்கள் அஞ்சுவதுண்டு. இவ்வாறான சிறு பிரச்சினைகள் இயல்பானவை. இவற்றைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. கர்ப்பம் என்பது ஒரு பெண்ணுக்கு உயர்வான தாய்மை ஸ்தானத்தை வழங்கிடும் உன்னதமான காலம். குடும்பத்தில் மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் ஏற்படுத்தும் காலம்.

கர்ப்ப காலத்தில் உடலின் கட்டமைப்பிலும், தொழிற்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் சில உபாதைகளும் ஏற்படுகிறது. உண்மையிலேயே இவை நோய் நிலைகள் அல்ல. அறிகுறிகள் மூலம் ஒரு பெண் கர்ப்பமுற்றிருப்பதை நாம் அனுமானித்துக் கொள்வதற்கு இவை உதவும். நோய்களுக்கு குணம் குறிகள் இருப்பது போல கர்ப்பகால ஆரம்பத்தில் சில அறிகுறிகள் வெளிப்படுவதுண்டு. இவை ஆளுக்கு ஆள் மாறுபடும். சிலரில் அதிக உபாதைகளுடன் தீவிரமாக வெளிப்படும் அசௌகரியங்கள் இன்னும் சிலரில் மிகவும் இலேசாகவே வெளிப்படும். இவ்வாறு சந்திக்க நேரிடும் இடையூறுகள் இற்கையானவை என்பதை இளம் கர்ப்பிணிகளுக்கு வீட்டிலுள்ளபெரியோர் எடுத்துச்சொல்லித் தைரியப்படுத்த வேண்டும். மிகவும் தீவிரமான பிரச்சினைகள் எனின் வைத்திய ஆலோசனையைநாடலாம்.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் சாதாரண பிரச்சினைகளான இடுப்பு வலி, மார்பக கனதி, வயிற்று நோவு, தலை மற்றும் உடல் வலி, தலைச்சுற்று, நெஞ்செரிவு, வயிற்றெரிவு மற்றும் சமிபாடடையாமை, வாய்க் கசப்பு, குமட்டல், வாந்தி கூடுதல், சிறுநீர் கழித்தல், லேசான மயக்கம் மற்றும் சோர்வு, மலச்சிக்கல், யோனியில் குருதிக் கசிவு கர்ப்பவதிகளுக்கு ஏற்படலாம். இவற்றைக் கண்டு குழப்பமடைய வேண்டியதில்லை.

ஒருவர் கருவுற்றதும் மாதவிடாய் ஏற்படுவது நின்றுவிடும். மாதவிடாய் பின் தள்ளிப் போனால் உடனடியாக் சலப் பரிசோதனை செய்வதன் மூலம் கருவுற்றுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். செலவு அதிகமில்லாத H.C.G STRIP ஒன்றை ஒரு நிமிடம் சலத்தில் அமிழ்த்தி வைத்திருக்கும்போது அதன் மேற்பகுதியில் சிவப்புக் கோடுகள் தோன்றினால் கர்ப்பம் தரித்துள்ளமையை உறுதிப்படுத்தலாம். கர்ப்பத்தை உறுதிப்படுத்தியதும் உங்கள் பகுதி மருத்துவ மாதுவிடம் பதிவு செய்து அவர் சொல்லும் தினத்தில் மகப்பேற்று கிளினிக்குக்கு போகலாம். பிரசவிக்கும் காலம் வரை கிளினிக் செல்ல வேண்டும்.

கர்ப்பவதி ஒருவருக்கு ஏற்படும் சிறு பிணிகளுக்கு மருத்துவ சிகிச்சை தேவையில்லை. சில நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இடுப்புவலி தசைகள் விரிவடைந்து சவ்வுகள் இழுபடுவதனால் ஏற்படும். இதைத் தடுப்பதற்கு அதிக பாரம் தூக்குவதைத் தவிர்ப்பதுடன் குனியும்போது நாரியை வளைக்காமல் முழங்காலை மடித்தல் நல்லது. உட்காரும் போதும் நாரி வளையாமல் நிமிர்ந்து உட்காருதல் நன்று. அதிக மென்மையான மெத்தைகளில் படுப்பதையும், குதி உயர்ந்த பாதணிகளை அணிவதையும் தவிர்த்தல் வேண்டும்.

மலச்சிக்கல் ஏற்படும்போது அவசரப்பட்டு மருந்துகளைப் பாவிக்காமல் விடுவது நன்று. நார்ப் பொருள் நிறைந்த உணவுகள், மரக்கறி பழவகைகளை உண்பதன் மூலம் சீராக்குதல் சிறந்தது. தலைவலி ஏற்படும் போது பாம் வகைகளைப் பூசலாம். கட்டுப்படாவிட்டால் பரசிற்றாமோல் வில்லைகளைப் பாவிக்கலாம். அடிக்கடி பாவிப்பதைத் தவிர்க்கவும். நெஞ்செரிவு, செமியாக்குணம் இருப்பவர்கள் எண்ணெய் மற்றும் பொரித்த உணவுகளைத் தவிர்க்கவும். சாப்பிட்டவுடன் படுக்க வேண்டாம். பால் பருகுவது எரிவைக் குறைக்கும்.

கர்ப்பிணிகளின் தலைச்சுற்று இயல்பானது. எனினும் தொடர்ந்து இருப்பின் குருதி அழுத்தத்தை பரிசோதிக்க வேண்டும். கிளினிக்குக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் குருதி அழுத்தத்தைப் பரிசோதிப்பார்கள். படுத்து எழும் பும் போது தலைச்சுற்று ஏற்படுபவர்கள் படுக்கையிலிருந்து எழுந்ததும் சிறிது நேரம் கட்டிலில் இருந்து விட்டு எழ வேண்டும்.

கர்ப்பிணிகள் வாந்தி எடுப்பது இயற்கையானது. மனதுக்குப் பிடித்ததை மாத்திரம் சாப்பிடுங்கள். அதிகமாக நீராகாரம் அருந்துங்கள். கூடுதலாக வாந்தி எடுப்பின் ஜீவனி அருந்தலாம். சிலரில் கட்டுப்பாடில்லாமல் வாந்தி எடுப்பதுண்டு. இவ்வாறான நிலையில் வைத்திய ஆலோசனையை நாட வேண்டும். HYPER EMISIS GRAVIDARAM என்ற இந்த அதிதீவிர வாந்திக்கு, வாந்தியைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் அவசியம். நீரிழப்பு அதிகமாக இருப்பின் சேலைன் முதலான திரவங்களை நாளத்தினூடாக வழங்க வேண்டும்.

# துணுக்காய் பகுதியில் யானைகளால் தொல்லை

அக்கராயன், நவ.22
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் யானைகளின் தொல்லைகளால் மீளக்குடியமர்ந்த மக்கள் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
மழை காலம் என்பதால் மாலை வேளைகளில் யானைகள் வீதிகளில் காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் செல்வதைக் காண முடிகின்றது.
இந்த யானைகள் இரவுவேளைகளில் குடிமனைகளுக்குள் புகுந்து தென்னை, வாழை ஆகிய பயன்தரு மரங்களை அழித்து நாசம் செய்து வருகின்றன.
இங்குள்ள பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், ஐயன்கன்குளம், கல்விளான் - உயிலங்குளம் ஆகியகிராமங்கள் யானைகளின் தொல்லைக்களை எதிர் கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)





கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு வந்த சங்கானை சிவப்பிரகாசம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள். (வ-10)

# தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ.22
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள் மாவட்ட, மாகாண தேசிய நிலை தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றமையையிட்டு பாராட்டி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி க.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரையும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் மாவட்ட மாகாண தேசிய நிலை தமிழ்த் தினப் - போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், தேசிய நிலைப் போட்டியில் பிரிவு V இலக்கணப் போட்டியில் முதலிடம்பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி தம்பிராசா கஜேந்தினிக்கு தங்கப் பதக்கமும், பண முடிப்பும் வழங்கப்பட்டன.
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி தமிழ்ப் பாட ஆசிரியையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். (வ-9)



# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், நவ.22
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் நாவலர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலா சார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் கனக சபை அருள்நேசன் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். விஜயர்தாசினி தயாளனின் தமிழ்த்தெய்வ வணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசனும் தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் நிகழ்த்துவர்.
நாவலரும் தமிழ்த்தேசியமும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றுவார்.
நாவலரின் கனவை நனவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது அவரது சமயப் பணிகளா? அல்லது தமிழ்ப் பணிகளா? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் பட்டி மண்டபம் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், சி.ரமணன், ஆசிரியர் கு.பாலஷண்முகன், மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் வாதிகளாகவும், பிரதிவாதிகளாகவும் பங்கேற்கவுள்ளனர். நிகழ்வுக்கான் அனுசரணையை யாழ். பெரியகடை சிவகணேசன் றெக்ஸ் றைல்ஸ் நிறுவனத்தினரும், மண்டபத்துக்கான அனுசரணையை யாழ். மாநகர சபையினரும் வழங்கி யுள்ளனர்.
நிகழ்வு இடம்பெறும் நாவலர் கலாசார மண்டபம் ஆறுமுக நாவரது வீடு அமைந்திருந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?


**மேடம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். கடன் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி காண்பீர்கள். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.


**இடபம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.


**மிதுனம்:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உறவினர், நண்பர்களின் பேச்சும், செயற்பாடுகளும் உங்களுக்கு பிடிக்காமல் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.


**கடகம்** : குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரக்கூடும்.


**சிங்கம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வாலிப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.


**கன்னி:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். வேலை யாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

கார்த்திகை-07 சனிக்கிழமை 23.11.2013
திதி: ஷஷ்டி முழுவதும்
நட்சத்திரம்: பூசம் பி.இ. 01.44 வரை
சுபநேரம்: 03.11 - 04.41 வரை
இராகுகாலம்: 09.11 - 10,41 வரை


**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.


**விருச்சிகம்:** எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து போகும். அடுத்தவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.


**தனுசு:** நட்பு வட்டாரம் விரிவடையும். பண வரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.


**மகரம்:** சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.


**கும்பம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.


**மீனம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | | | 9 | | | 8 | 5 |
| | | 2 | | | | | | |
| | | 4 | | 6 | 8 | | 3 | 7 |
| 2 | 6 | | 1 | | | | | |
| 9 | 7 | 1 | 6 | | 5 | 3 | 2 | 4 |
| | | | | | 7 | | 1 | 9 |
| 1 | 4 | | 5 | 7 | | 9 | | |
| | | | | | | 5 | | |
| 3 | 5 | | | 1 | | | 7 | 2 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 4 | 5 | 2 | 9 | 6 | 8 | 7 |
| 2 | 8 | 7 | 3 | 6 | 4 | 9 | 1 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 3 | 2 | 1 | 4 | 9 |
| 6 | 2 | 3 | 9 | 4 | 1 | 7 | 5 | 8 |
| 9 | 4 | 1 | 7 | 5 | 8 | 3 | 6 | 2 |
| 7 | 1 | 6 | 2 | 8 | 3 | 5 | 9 | 4 |
| 4 | 9 | 2 | 1 | 7 | 5 | 8 | 3 | 6 |
| 3 | 5 | 8 | 4 | 9 | 6 | 2 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## கூகுள்/ புரொஜெக்ட் லூன் தொடர்பில் தகவல்

எந்தவொரு தருணத்திலும் தடங்கல் அற்ற இணையச்சேவையை வழங்கும் முகமாக கூகுள் நிறுவனம் புரொஜெக்ட் லூன் என்ற சேவையை அறிமுகப் படுத்த உள்ளது.

பறக்கும் பலூன்கள் மூலம் WiFi தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இணைய இணைப்பை வழங்குதலே இந்தச்சேவையின் நோக்கமாகும்.

இதேவேளை இச்சேவையில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு பலூனும் 100 நாள்களில் பூமியை 3 தடவைகள் சுற்றிவரும் என்ற புதிய தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் குறித்த பலூன்கள் எந்த வொரு காலநிலையையும் தாங்கும் வகையில் பொருத்தமான ஊடகத்தால் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## Ccleanerd புதிய பதிப்பு அறிமுகம்

கணினியை சுத்தம் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் Ccleanerdன் புதிய பதிப்பு அறிமுகமாகி உள்ளது.

கணினியில் தங்கும் தேவையற்ற கோப்புகளை அழிப்பது, ரெஜிஸ்ட்ரியில் நீக்காமல் விடப்படும் குறியீடுகளை நீக்குவது, பயனற்ற குக்கீஸ் கோப்புகளை ஒழிப்பது போன்ற பல பணிகளுக்கு பெரும்பாலான நபர்கள் பயன்படுத்தும் மென்பொருள் தான் சிகிளீனர்.

இதன் புதிய பதிப்பு Ccleaner- v4.07.4369 அண்மையில் வெளியிடப்பட்டது.


இந்த பதிப்பு விண்டோஸ் 8.1 சிஸ்டத்தில் இணைந்து இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பழைய விண்டோஸ் சிஸ்டத்தின் போல்டர்களை நீக்கும் திறன் வழங்கப்பட்டுள்ளது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் History Files- களை நீக்குவதில் புதிய முறை தரப்பட்டுள்ளது.

இதேபோல பல புதிய புரோகிராம்களுக்கான வசதிகளுடன், சில சிறிய தவறுகளும் சரி செய்யப்பட்டுள்ளதாக, இதனைத் தயாரித்து வழங்கும் பிரிபார்ம் நிறுவனம் அறிவித்துள்ளது.

## நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய போர்ட்டபிள் ஸ்பீக்கர் அறிமுகம்



Favi நிறுவனம் புளூடூத் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதும் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியதுமான ஸ்பீக்கர்களினை அறிமுகம் செய்துள்ளது.

Boomerang, Boomerang Mini என்ற இரண்டுவகை பதிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள் ளன.

வெள்ளை, கறுப்பு, மஞ்சள் ஆகிய மூவகை நிறங்களில் வடிவமைக் கப்பட்டுள்ள Boomerang ஸ்பீக்கர் 7.83 X 8.2 X 2 அங்குல அளவு கொண்டதாகவும், 6 W சக்தியை வெளிவிடக் கூடியதாகவும் இருக்கின்றது.


இதன் பெறுமதி 79.99 டொலர்களாகும்.

இதேவேளை Boomerang Mini 4 W சக்தியை வெளிவிடக் கூடியதாகவும், 5.91 X 6.12 X 1.49 அங்குல அளவுடையதாகவும் காணப்படும் அதேவேளை இதன் விலை 59.99 டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 12GB கிராபிக்ஸ் கார்ட்


கணினிகளில் வீடியோ எடிட்டிங், உயர்தர விளையாட்டு போன்றவற்றுக்கு உயர் கொள்ளளவுடைய கிராபிக்ஸ் அட்டைகள் நிறுவப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

தற்போது புனிம் நிறுவனம் FirePro S10000 எனும் 12GB கொள்ளளவுடைய கிராபிக்ஸ் கார்ட்டை அறிமுகம் செய்துள்ளது.



இந்த நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு தற் போது பாவனையில் உள்ள 6GB கொள்ளளவுடைய கிராபிக்ஸ் கார்ட்டின் விலையானது 3,000 டொலர்களாகக் காணப்படுகின்ற போதிலும் 12GB கொள்ளளவுடைய கிராபிக்ஸ் கார்ட்டின்பெறுமதிவெளியிடப்படவில்லை.

## மசாஜ் செய்யும் ரோபோ அறிமுகம்



அண்மையில் திருமணம் செய்து வைக்கும் ரோபோ மற்றும் மாடு மேய்க்கும் ரோபோ என்பன அறிமுகமாகியிருந்தமை நாம் அறிந்ததே.

இந்நிலையில் தற்போது மனிதர்களுக்கு மசாஜ் செய்யக்கூடிய ரோபோ ஒன்றும் அறிமுகமாகியுள்ளது.

எனினும் இந்த ரோபோ மசாஜ் ஆனது பல ஆய்வாளர்கள் மத்தியிலும் சில எதிர்மாறான கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.

காரணம் குறித்த ரோபோ ஓர் இயந்திரம் ஆகையால் அதில் ஏற்படும் கோளாறுகள் மசாஜ் செய்யும் மனிதனை பாதிக்கக் கூடும் என்பதே ஆகும்.

குறித்த ரோபோ ஓர் இயந்திரம் ஆகையால் அதில் ஏற்படும் கோளாறுகள் மசாஜ் செய்யும் மனிதனை பாதிக்கக் கூடும்



## அன்ரோயிட் சாதனங்களுக்காக அறிமுகமாகும் புத்தம் புதிய ஹேம்

Vlambeer நிறுவனம் அன்ரோயிட் இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களுக்கான புதிய Ridiculous Fishing என்ற விளையாட்டை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த விளையாட்டு அப்பிளின் ஐ.எஸ்.ஓ.சாதனங்களுக்காக ஏற்கணவே அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நிலையில் சுமார் ஒரு மில்லியன் டொலர்கள் பெறுமதியான 300,000 நகல்கள் விற்பனையாகியுள்ளன என கடந்த ஒகஸ்ட் மாதம் ஐரோப்பாவில் இடம்பெற்ற ஹேம் வடிவமைப்பாளர்களுக்கான மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை விண்டோஸ் 8 இயங்கு தளத்துக்காக இந்த விளையாட்டை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விற்பனைக்கு

தொட்டிலடி, சங்கானையில் 7½ பரப்புக் காணி வியாபாரக் கடை, குடி யிருப்புக்கு உகந்த இடம் விற்ப னைக்கு உண்டு. (சி/14948)

தொடர்பு: 077 742 2529 (7.6.3)

## வாடகைக்கு

பாதுகாப்பான சூழலில் சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அருகில் தொழில் புரியும் பெண்கள் ஒருவர்/இருவர் தங்குவதற்கான அறை, குளியலறை, சிறிய விறாந்தை வசதியுடன் வாடகைக்கு உண்டு. Teachers/Bank Staff விரும்பத்தக்கது. (40339)(7.6.3)

தொடர்பு: 075 282 4208, 011 245 9239

## தேவை

மேற்குத்தேச நாடுகள் அல்லது இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள பழைய சைக்கிள்கள் தேவை. Rileighபோன்றவை விரும்பத்தக்கது.

தொடர்பு: 071 825 3124 (40363)(4.6.3)

## கடையும் வீடும் வாடகைக்கு

941, கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்தியில் 3 கடையும், மேல்மாடி 3 படுக்கை அறையும், 3 கோலுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடும் வாடகைக்கு விடப்படும். பகுதியாகவோ தனியாகவோ கொடுக்கப்படும். (40355)(4.6)

தொடர்பு: 077 507 9765

## அறிவித்தல்

### காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மேற்படி அறிவித்தல் 21.11.2013 உதயன் பத்திரிகையில் 17ஆம் பக்கத்தில் "கிளைப் பொதுச் சபைக் கூட்டம் 30.11.2013" எனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. அதனை *23.11.2013 சனிக்கிழமை* என திருத்தி வாசிக்கவும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
திகதி: 21.11.2013

கு.அருந்தவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (40366) (7.3)

## பதவி வெற்றிடம்

**பரந்தன் – குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் முகாமையாளர், இரவுக் காவலாளி, மடைப்பள்ளி உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்.**

தகைமைகள்:

* முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
* வயது 40இற்கு மேற்பட்டவராகவும், சைவபோசனம் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஆலயக் குடிமனையில் தங்கியிருக்கக்கூடிய குடும்பத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமைச் சான்றிதழ், 2 நற்சான்றிதழ், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள், சுயவிவரம், முகவரி, கைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கியதாக விண்ணப்பத்தை சுயமாகத் தயாரித்து, **151, குமரபுரம், பரந்தன்** என்னும் முகவரிக்கு 30.11.2013ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். தகுதியானவர் எனக் காணப்படும் விண்ணப்பதாரர் மட்டும் நேர் காணலுக்கு அழைக்கப்படுவார். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பொறிக்கடவை அருள்மிகு கண்ணகிஅம்மன் ஆலய அறங்காவல் அவை.**
**கைபேசி: 077 833 9665** (37589) (7.6.3)

க.ம.பத்மநாதன்
தலைவர்


## மும்மொழி செயற்றிட்டம்

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே மும்மொழி அறிவை சிறுவயதிலேயே மேம்படுத்தும் நோக்குடன் வகுப்பறைச் சுவர்களில் மும் மொழிகளிலும் அரிச்சுவடிகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. USAID-RESIN நிறு வனத்தால் 2014 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கும்போது இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. ஆரம்பப் பிரிவு தரங்களைக் கொண்ட பாடசாலைகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

(ந-14-35)


## தேவை

கொழும்பிலுள்ள பிரபல சைவ உணவகத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வேலையாள்கள் தேவை. சமையல்காரர் (பிட்டு, கொழுக்கட்டை, வடை, சமையல், அரைவை தெரிந்திருக்க வேண்டும்) சம்பளம் 35,000/= காசாளர் தேவை சம்பளம் 15,000/=

தொடர்பு: 011 232 6289, 077 300 0469 (40313)(7.6.3)
இல. 131, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.

## தேவை

கல்வியங்காடு பகுதியில் உள்ள சிறுகைத்தொழில் நிலையத்துக்கு இளம் ஆண், பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 071 902 2222 (40348)(4.6.3)

## வீட்டுக்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு

சிறுப்பிட்டி தெற்கில் பருத்தித்துறை வீதியில் இருந்து மேற்குப்பக்கமாக செல்லும் வீதியில் செல்லப்பிள்ளையார் கோயிலுக்கு மேற்பக்கமாக 350 மீற்றர் தூரமளவில் மேட்டுக்குக் கிழக்குப் பக்கமாக 6 பரப்புக் காணியுடன் கூடிய கல் வீடு நன்னீர் கிணற்றுவசதியுடனும் பயிர் வகைகளுடனும் மற்றும் சிறுப்பிட்டியில் இராசபாதைக்கு அருகில் நூல் நீர் கிணற்றுவசதியுடன் 12 பரப்பு செம்பாட்டுத் தோட்டமும் உடன் விற்பனைக்குண்டு. (40264)(4.6.3)

தொடர்பு: 0061312 20048

## வீடு வாடகைக்குத் தேவை

கௌரவ மதிப்புள்ள குடும்பத்திற்கு கொக்கு வில், தாவடி அல்லது அயல் ஊர்களில் சாதா ரண வசதிகளுடன் ஓரளவு குறைந்த வாட கைக்கு ஒரு வீடு தேவை. நல்லுள்ளமும், பண்பு முள்ளவர்களிட மிருந்து விரும்புகின்றோம்.

தொடர்பு: 077 323 0072 (சி/13931) (7.3)

## வேலைக்குப் பெண்கள் தேவை

கீழ்வரும் வேலைகளுக்கு 18-25 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை.

**செயலாளர், கணினி ரைப்பிஸ்ற், கணக்காளர், அறைகள் பராமரிப்பாளர்**

உங்கள் விவரங்களை சுயவிவரக் கோவையுடன் படம், தொ.பே.இலக்கம் என்பவற்றுடன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**புளூ ஓஷன் றிசோட், அல்லைப்பிட்டி.**
தொடர்பு: 077 835 0478 (40369)(4.3)

## பரிசில் நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்


பி.பிரகாசினி


க.துஷிக்கா

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தபெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த 162 புள்ளிகள் பெற்ற **செல்வி பிரபாகரன் பிரகாசினி** அவர்களையும் 153 புள்ளிகள் பெற்ற **செல்வி கஜேந்திரகுமாரன் துஷிக்கா** அவர்களையும் மேலும் ***100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற***

றூபவரன் ஜீவானந் – 125 சிறீராம் விதுர்சன் –110
பாஸ்கரராசன் ஸ்நேகன் –114 செல்வராசா கஜிந்தன் –109 ஆகியோரையும்

70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர் களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

பாடசாலைச்சமூகம்
(சி/2789)(3.6.4)
யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, மட்டுவில், சாவகச்சேரி.

# யா/மகாஜனக் கல்லூரியிலிருந்து 22.11.2013 இன்று ஓய்வுபெற்று மணிவிழாக்காணும்

## அதிபர் கு.வேல்சிவானந்தன்

(B.A.(Hons, PGDE (Merit) SLPS - I)

## மகாஜனன் அவர்களின் சேவைநலன் பாராட்டு




### சேவை விவரம்:

கல்வி கற்ற பாடசாலை (தரம் 1 - தரம் 13) - யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
ஆசிரியர் சேவை - கம்/சென்ட் அந்தனி கல்லூரி, வத்தளை
1984 .05.08 - 1994.05.15
அதிபர் சேவை - க/ரஜாவல தேசிய கல்லூரி, கண்டி - அதிபர்
1994.05.16 - 2005.05.16
கொ/விவேகானந்தா தேசிய கல்லூரி - பிரதி அதிபர்
2005.05.17 - 2011.11.01
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை - அதிபர்
2011.11.02 - 2013.11.21

மணிவிழா நாயகனே
மகாஜனத்தாய் திருமகனே
வீரத்தின் விளைநிலமாய்
விழுதூன்றும் விருட்சமென
கண்களில் கனிவைக்காட்டி
கண்டிப்பில் துணிவைக் கூட்டி
சொல்லில் திடம் கொண்டு
செயலில் தடம் பதித்திட்டீர்
வாழும் காலமதில்
நாளும் நன்மைபெற வாழ்த்துகின்றோம்
வாழி நீர்! நீடு வாழி!

புகழ் பூத்த மகாஜனனும், அனுபவமிக்க **அளவையியல் ஆசிரியருமான கு.வேல்சிவானந்தன் அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் சித்தி பெற்று தரம் - I அதிபராக** மேற்படி பாடசாலைகளில் சிறந்த சேவையினை வழங்கி தான் கற்ற பாடசாலையில் தனது சேவையினை ஆற்ற வேண்டும் என்ற முனைப்புடன் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்றார். பதவியேற்ற காலம் தொடக்கம் தன்னை வளர்த்தெடுத்த மகாஜனத் தாயிற்கு தன்னாலான அரும்பணிகளை மிகவும் உன்னதமான முறையில் வழங்கி கல்வி மற்றும் இணைப்பாடவிதான புறக்கிருத்திய செயற்பாடுகளில் மாணவர்கள் தேசியமட்டம்வரை பதக்கங்கள் மற்றும் சாதனைகள் புரிவதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அதுமட்டுமன்றி மருத்துவத்துறை, பொறியியல் துறை, முகாமைத்துவம், கலைத்துறை ஆகியவற்றுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கும் துணை நின்றார்.

மேலும் அனைத்து உலகிலும் வாழக்கூடிய மகாஜனன்கள் வியந்து பாராட்டும் முகமாக எமது பாடசாலையின் நவ மகாஜன சிற்பி அமரர் **அதிபர் தெ. து. ஜயரத்தினம்** அவர்களின் நூறாவது பிறந்த தின விழாவை மிகவும் உயர்தரமான முறையில் சிறப்பாகக் கொண்டாடியதுடன் நவ மகாஜன சிற்பியின் நூறாவது பிறந்த தின விழாவில் **"ஜயரத்தினம்"** என்ற மலர் மூலம் மகாஜன அன்னையின் வரலாற்றை ஆவணமாக்கி, நினைவுப் பேருரைகளைத் தொகுப்பாக்கி கல்லூரியின் இன்றைய வரலாற்றை மகாஜனன் என்னும் நூலுருவாக்கி கல்விச்சமூகம் நன்மைபெற உழைத்திட்டார். அத்துடன் கல்லூரியையும் புதுப்பொலிவு பெற வைத்துள்ளார்.

எங்கள் கல்லூரிக்கு மகோன்னதமான பணியாற்றி மகாஜனாவின் புகழுக்கும் கீர்த்திக்கும் பாடுபட்டுழைத்த பெருமதிப்பிற்குரிய அதிபர் .கு. வேல்சிவானந்தன் அவர்கள் இன்று அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் அவரது ஓய்வுக்காலம் ஆரோக்கியத்துடனும் மேலும் மகிழ்ச்சியுடனும் மிளிர பாடசாலை சமூகத்தின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி.14940)(45.3)

**பாடசாலைச் சமூகம்**
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2012

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012.12.31 ஆம் திகதி முதல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருடைய 2013 .06.24ஆம் திகதிய (NP/05/01/GE6/UNS/RQ) இலக்க கடிதத்திற்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமை யுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | | வெற்றிடம் |
|---|---|---|
| 01. காரியாலய காரிய சகாயர் பதவி | தரம் III (ஆண்கள்) | 02 |
| 02. காவலாளி பதவி | தரம் III (ஆண்) | 01 |
| 03. சுகாதாரத் தொழிலாளி பதவி | தரம் III (ஆண்கள்) | 03 |
| 04. மயானத் தொழிலாளி பதவி | தரம் III (ஆண்) | 01 |

**சம்பளம்:**

2007.08.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 06/206 (IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (11730 - 120 x 10-130x10-145x10-160x12- 17600) (PL-1 -2006 - A **ஆகும்.**

**05. ஆயுள்வேத மருந்தாளர் பதவி (டிஸ்பென்சர்) - வெற்றிடம் 01**

**சம்பளம்:**

2007.08.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 06/206 (IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (12210 - 130 x 10-145x10-160x10-170x12- 18600) (PL-2- 2006 - A **ஆகும்.**

நியமிக்கப்படுவோர் தொகையும் நியமனத் திகதியும் நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது ஏதேனுமொரு எண்ணிக்கையை நிரப்பாமலிருக்க நியமன அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஒய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்றுவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**தகைமைகள்:**

**அடிப்படைத் தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஒய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்நடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்)
05. தொழில் நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன் முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல்வேண்டும்.

**கல்வித் தகைமை:**

01. ஆகக் குறைந்தது தரம் 8 சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள், அனுபவம் என்பன விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்.

***பொய்யான தகவல் வழங்குதல்:**

இவ் வெற்றிடங்களை நிரப்புகையில் யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லை என்பது வெளிப் பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஏதேனுமொரு முக்கிய தகவலை அவரது அறிவிற்கு தெரிந்தவரை பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைந்திருப்பது தென்பட்டாலோ அவரை அரசசேவையில் இருந்து நீக்க இடமுண்டு.

**தெரிவு செய்யப்படும் முறை:**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன், விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா. ஐம்பதைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தபடாதிருப்பின்-அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
05. பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான சகல தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுதிகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
06. ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனதிற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுதிகதி:**

2013.12.07 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

**செல்வி கா. கேதீஸ்வரி,**
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

21.11.2013

(சி.14957) (45.3.6)

# இலங்கை தூதுவருக்கு எதிராக இந்திய நீதிமன்றில் வழக்கு

*விரும்பத்தகாதவர் என அறிவிக்க கோரிக்கை*

சென்னை ,நவ.22

இந்தியாவிலுள்ள இலங்கை தூதுவர் பிரசாத் காரியவாசம் விரும்பத்தகாத மனிதராக அறிவிக்கப்பட வேண்டும் என்று கோரும் மனுவொன்று மதுரையிலுள்ள உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காரியவாசம் 1961 ஆம் ஆண்டு வியன்னா பிரகடனத்தின் 9 ஆம் விதிகளுக்கு மாறாக செயற்பட்டிருப்பதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> காரியவாசம் 1961 ஆம் ஆண்டு வியன்னா பிரகடனத்தின் 9 ஆம் விதிகளுக்கு மாறாக செயற்பட்டிருப்பதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலரான லேனாகுமார் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் இலங்கை ஸ்தானிகர் பிரசாத் காரியவாசம் ராஜ துரோகமான ஆத்திரமூட்டுகிற எரிச்சல் தருகின்ற கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அவை இந்திய நாட்டின் கண்ணியம், இறைமை மற்றும் சமய சார்பற்ற தன்மைகளைப் பாதிப்பவையாக இருக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார். 2013 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிங்களவர்கள், ஓடியாஸ் மற்றும் பெங்காளி வம்சங்களைச் சேர்ந்தவர்களென்றும் அதனால் அவர்கள் இந் திய ஆதரவுக்குரியவர்கள் என்றும் கூறியிருந்தார். பத்திரிகைகளில் வெளியாகியிருந்த இந்த அறிக்கை போரின் போது பெரும் எண்ணிக் கையில் தமிழர்கள் கொல்லப்பட்டி ருக்கும் நிலையில் தமிழ் மக்களின் உணர்வு களை புண்படுத்தியும் கோப முறவும் செய்துள்ளது என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இனரீதியாகவும், சமய ரீதியாகவும் பிரிவினையையும் திரிபுகளையும் ஏற்படுத்தும் நோக்கத்திலேயே இந்த கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றவென்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார். காரியவாசம் தூதுவர் என்ற வரையறைகளை மீறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காரியவாசத்தின் அறிக்கை தொடர்பாக இந்திய அரசு நடந்து கொண்டுள்ள நிலை குழப்பகரமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது கட்டுப்படுத்தப்படா விட்டால் வெளிநாட்டு தூதுவர்கள் உள்ள நாட்டு விவகாரங்களால் தலையிடுவது தவிர்க்க முடியாமல் போய் விடும் என்று அந்த மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# முரளிதரனின் கருத்துக்கு நகரசபை கடும் கண்டனம்

தென்மராட்சி. நவ.22

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வெளியிட்ட கருத்துக்கு சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக் கப்பட்டது.

"சிங்கள மக்களுக்கே பிரச்சினை. தமிழ் மக்களுக்கு முழுச் சுதந்திரம்" என்ற கூற்றினை வன்மையாகக் கண்டிப்பதாக நகரசபை உறுப்பினர் ப.சிறி தரன் தனிநபர் பிரேரணை ஒன்றை மாதாந்தக் கூட்டத்தில் முன் வைத்தார்.

வடபகுதி வாழ் மக்கள் அனுபவித்த. அனுபவிக்கின்ற கஷ் டங்களை தெரியாத நிலையில் சுகபோகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் முத்தையா முரளிதரன் தமிழ் மக்களைப் பற்றி கருத்து வெளியிடத் தகுதி யில்லாதவர்.

தமிழ் மக்கள் அவர் மீது கொண்டுள்ள அபி மானத்தை தமிழ் மக்களுக்கு எதிரான அறிக்கைகளை விடு த்து குறைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் கண்டனப் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டார். இந்தக் கருத்தை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## அரசாங்க அறிவித்தல்

**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**
**கணினிகள், அலுவலக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலை கோருதல்**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், தகவல் தொழிநுட்பப் பூங்கா, மற்றும் பிரதேச செயலகங்களின் பாவனைக்காக மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் பொருள்களிற்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. வழங்குநர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5,000.00 உம் **அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் பெயருக்குச் செலுத்தி கேள்வி விண்ணப்ப படிவங்களைக் பெற்று அவற்றில் குறிப்பிடப்பட்ட விவரங்களை பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**கணினிகள், அலுவலக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலை**" எனக்குறிப் பிட்டு 06.12.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகச் செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியில் இடல் வேண்டும். அல்லது "**தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். பெறுகைகள் அன்றைய தினம் பி.ப 3.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமூக மளிக்கலாம்.

பெறுகை விண்ணப்பப் படிவங்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 25.11.2013 ஆந் திகதி தொடக்கம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

சு.அருமைநாயகம்,
தலைவர்
திணைக்களப் பெறுகைக்குழு
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.

(சி/14984) (7.3)

# ஒழுக்கமுள்ள மாணவ சமூகம் உருவாக வேண்டும்

தென்மராட்சி, நவ.22

மாணவ சமுதாயம் ஒழுக்க முள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் பாடசாலையின் வளங் களைப்பாதுகாப்பது, பாடசாலையில் உள்ள பற்று, பாடசாலைக்கு வெளி யேயும் உள்ளேயும் நற்பெயர் கெடாமல் பாதுகாப்பது ஒவ்வொரு மாணவரின் கடமையாகும்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் அ.கயிலாய பிள்ளை பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கல்லூரியில் 1952 இல் மாணவ முதல்வர் சபை உருவாக்கப்பட்டு இதுவரை மாணவ தலைவர் களால் நற்பெயர் கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். 2 ஆயிரம் மாணவர் கள் கற்கும் கல்லூரியில் வகுப்பு ரீதியாக மாணவ தலைவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். மாணவர்களிடையே ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப் பட்டு கல்லூரி ஒழுக்காற்றுக் குழு வின் நேரடி பரிந்துரையின் மூலம் மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மாணவத் தலைவர்களாக சின்னம் சூட்டப்பட்ட 70 மாணவர்களும் இந் துக் கல்லூரிக்கு பெருமை சேர்க் கும் விதத்தில் செயற்படுவதுடன் ஏனைய மாணவர்களுக்கு ஒழுக்கத் தைக் கற்றுக் கொடுக்கக் கூடிய முன் மாதிரியாகவும் நடந்து கொள்ள வேண்டும்.-என்றார். (ந-9)

## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 25*04*1939

விண்ணில் 24*10*2013



**அன்னம்மா சற்குணமலர் இராசநாயகம்**

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு அவரையே நம்பி அவரே உன் சார்பில் செயலாற்றுவார்.


உங்கள் ஆத்மா இறைவனடியில் இளைப்பாறிச் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். கடந்த (24.12.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்ப உறுப்பினரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (23.11.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

88/4, ஆசீர்வாதம் லேன்,
கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(சி/14941)(7.6.3)

## ஓராண்டு நினைவலைகள்



மண்ணில் 04.02.1939

விண்ணில் 03.12.2012

அமரர்

**செல்லையா கணேசன்**

பாசமழை பொழிந்து
பாரினில் எமை வளர்த்தீர்
பாசமுடன் நாம் தேட
பறந்து சென்று ஓராண்டுமானதுவோ
நேசமுடன் நாம் நினைவு கூருகின்றோம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை
(செல்வா வீதி)

(40184)(5.4)

குடும்பத்தினர்.

# பரிசில் நாள் நிகழ்வு

தென்மராட்சி, நவ.22

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசில் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்குமாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர், ப.சத்தியலிங்கம் போக்கு வரத்து மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரும், கௌரவிருந்தினர்களாக மாகாண சபை உறுப் பினர்களும், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணை யாளர் கொ.ஜக்கீல் ஆகியோரும் கலந்து கொள்வார்.

கௌரவிப்பு நிகழ்வு, பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் ஆகியவை இடம்பெறும். (ந-9)

★ ★ ★

தென்மராட்சி, நவ.22

மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை பரிசில் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமை யாளர் க.சண்முகலிங்கமும், சிறப்பு விருந்தினர் களாக திரு.திருமதி லியோன்-புஷ்பராணி, பாடசாலை பழைய மாணவன் கனடாவைச் சேர்ந்த நாகராசா சுவர்ணராஜா தம்பதி, தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் என்.திருவாசகன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பாடசாலையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட் சையில் சித்திபெற்ற மாண வர்கள் கௌரவிப்பும் இடம் பெறும். (ந-9)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.22

769 வழித்தட காங் கேசன்துறை யாழ்பாணம் தனியார் போக்குவரத்து சிற்றூர்தி சேவைச் சங் கத்தின் பொதுக் கூட்ட மும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம் பெற்றன.

இதன் போது புதிய நிர் வாகிகளாக தலைவர் அ.றொபின்சன், செய லாளர் தி.டயஸ், பொரு ளாளர் வி.வி.சுஜிந்தன், உபதலைவர் அ.அமு தராசா, உப செயலாளர் க.கிருஷ்ணகுமார் ஆகி யோர் தெரிவு செய்யப் பட்டதுடன் புதிய நிர்வாக உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டனர். (ந)

## பொது நூலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.22

ஆ.சி.நடராசா ஞாப கார்த்த பொது நூலக கட்டடத்திறப்பு விழாவும் அஞ்சலி நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல்10.30 மணிக்கு குரும்ப சிட்டி அரசடி முருகன் ஆலய வளா கத்தில் இடம்பெறவுள் ளது.

குரும்பசிட்டி கிராம அபி விருத்தி சங்கத் தலை வர் வ.கிருஸ்ணசாமி தலைமையில் நடை பெறும் நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர் தன் கலந்து கொள்வார். (ந)

# சாயி பாபாவின் அவதார தினவிழா

யாழ்ப்பாணம், நவ.22

சத்திய சாயி பாபாவின் 88 ஆவது அவதார தின விழா யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை நடைபெற வுள்ளது.

காலை 8 மணிக்கு பிராசாந்திக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமா கும் இந்த நிகழ்வில் அஷ்டோத் திரம், காயத்ரீ ஜெபம், சாயி காயத்ரீ, நாம பஜனை, இசை நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், சொற் பொழிவு என்பன இடம்பெற்று மங்கலாராத்தி யுடன் மதிய போசனம் இடம் பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்ப மாகும் நிகழ்வில் கலை நிகழ்வுகள், இசை ஸ்துதி, சிறப்புரை, பஜனை என்பன இடம்பெறும் மாலை 5.15 மணிக்கு நிகழ்வு நிறைவுபெறும் (ந)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

**காந்திமதி துரைச்சாமி**



மலர்வு 02.03.1933

உதிர்வு 23.10.2013

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்திமதி துரைச்சாமி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் எம்முடனும் எமது வெளிநாட்டு உறவுகளின் துயரத்திலும் பங்கு கொண்டு ஆறுதல் தந்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் அதிபர், ஆசிரியர்கள் (தேசிய பாடசாலை-குருத்தலாவ, டிறிபேக் கல்லூரி- சாவகச்சேரி) தலைவர், உபதலைவர், செயலாளர், உத்தியோகத்தர்கள் (நகரசபை-அப்புத்தளை) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (22.11.2013) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. 077 616 1880

(40207)(3.6.4)


பிள்ளைகள், பேரமக்கள், சகோதரர்கள், மருமக்கள்.

## 123ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 28.06.2005

இறப்பு 23.07.2013

**தங்கேஸ்வரன் துலக்சன்** (துஷான்)



ஆழ்கடலில் முத்தெடுக்கச் சென்றீரோ - ஐயா
கரையில் நின்று கதறுகின்றோம்
ஆழிக்கடல் உங்களைப் பலியெடுத்து விட்டதோ!
அநாதையாகத் தவிக்கின்றோம் - மகனே
எம்மை எல்லாம் விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
- துஷானா
மீண்டும் ஒருமுறை பிறப்பீர்களா? என் தம்பியாக
ஏங்குகின்றோம் உங்களின் வருகைக்காக
- உறவினர்கள்
ஏஞ்சல் சர்வதேசப் பள்ளியின் ஏஞ்சலே!
துள்ளிக் குதித்து விளையாடிய உங்கள்
சர்வதேச சூடல் உன்னுடன் உறவாடியதேனையா!
உங்களை எம்மிடம் பிரித்து - உம்
முகங் காட்டக் கூட மறுத்ததேனையா? துஷானா
-யாரிடம் சொல்லி அழ எங்கள் துயரத்தை.

(40222)(12.3)


அரசடி,
தொண்டைமானாறு.
0776485721

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**லோகநாதமுதலி பத்மநாதமுதலி**

(ESSO இயக்குநர்)



யாழ்.நல்லூரைப்பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட லோகநாதமுதலி பத்மநாதமுதலி அவர்கள் 18.11.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதமுதலி (Attorney-at-Law Acting Magistrate)- பரமேஸ்வரியம்மா (ஆசிரியை) தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற வர்களான ஆசைப்பிள்ளை-அம்மணிப்பிள்ளை தம்பதியரின் ஆருயிர் பேரனும், காலஞ்சென்ற வரதராஜா (பிரதம லிகிதர்)- மனோன்மணி (இளைப்பா றிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகனும், கலாமதியின் அன்புக் கணவரும், லோறன்ஸ் (அருன்-University of.Toronto), றொபேட் (University of. Manitoba) ஆகி யோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன் (ஜேர்மனி), கமலநாதன் (லண்டன்), பவானி-சண்முகலிங்கம் (B.F.A கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், Dr.ஆரணி சண்முக லிங்கம் (Victoria Hospital-Canada), Dr.ஆரூரன் சண்முகலிங்கம் (St.Joseph Hospital -Canada) ஆகியோரின் மாமனாரும், சண்முகலிங்கம் செல்வநாய கம் (Engineer), கலாராணி அசோகன், பார்த்தீபன் வரதராஜா, ராமச்சந்திரன் வரதராஜா, சிறீதரன் வரதராஜா, வஜிதரன் வரதராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அசோகன் அவர்களின் சகலனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பவானி சண்முகலிங்கம்(சகோதரி)
Dr.ஆரூரன் சண்முகலிங்கம், Dr.ஆரணி சண்முகலிங்கம்

(40342)(3.6.4)



# மரண அறிவித்தல்

## நாகர் கார்த்தியேசு

நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கார்த்தியேசு 19.11.2013 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுநாகர் - வைரவி தங்கம் தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும் பூமணியின் அன்புக் கணவரும், ரவீந்திராதேவி, பாஸ்கரன் (ஜேர்மனி), புலேந்திரதாசன், ரவிச்சந்திரன் (ஜேர்மனி), சிறிதரன் (லண்டன்), கமலநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,ரஜினி, சவுந்தரராஜா, சிவாநந்தினி, குசலா, சந்திரகலா, விஜயதீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஸ்தூரி, கார்த்திகா, சிவசங்கர், கவிதா, சமீரா, சரீனா, சாரு, கஜானா, கஜீபன், அஞ்சலா, பிரசன்ஜா, பிரதீனா, ஜதுசன், ஜானுகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம், சங்கானை.
தொலைபேசி - 077 4965386

(C/14962)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.22

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மகாஜனக் கல்லூரி தரம்-I ஏபி பாடசாலையின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III மற்றும் வடமாகாணப் பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை தரம்-I, 2-I யைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாண கல்வித் திணைக்களத் தில் பார்வையிட்டு அதற்கமைவாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி முன்னதாக உரிய முறைப் படிவிண்ணப்பங்களைமாகாண கல்வி திணைக்களத்துக்கு அனுப் பலாம். (ந-14)



தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான காணி சுன்னாகம் மக்கள் வங்கியில் ஈட்டில் இருந்து மீட் கப்பட்டு மீண்டும் வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (வ-86)

## நாவலர் குருபூசை

யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத் தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நாளை மறு தினம் ஞாயிறு காலை 9 மணிக்கு நாயன்மார்கள் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம்பெறும். பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில்நடைபெறும்குருபூசையில்கந்த.சத்திய தாசனின் சிறப்பு சொற்பொழிவும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளன. (ஓ)


# இல்லத்தரசிகளே! உங்களுக்கு ஒரு நற்செய்தி

இதோ உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஒளியேற்ற வருகிறாள்

தமிழ் சஞ்சிகை வரலாற்றில் இல்லத்தரசிகளுக்கென தனித்துவமாக வெளிவரும் மாதாந்த சஞ்சிகை

டிசம்பர் 1 முதல்

நல்லதொரு குடும்பம்

# "ஒளி அரசி"

## இல்லத்தரசிகளின் தோழி

அரசியல், பாலியல், கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

### குடும்பத் தலைவிகளுக்கான விசேட அம்சங்கள்

- பெண் எனும் தெய்வம்.
- சமையலைத் தாண்டி...., இல்லத்தரசிகளின் வகிபாகங்கள்.
- நட்சத்திர இல்லத்தரசிகள்...
- ஒரு குடும்பத்தின் வெற்றியில் குடும்பத் தலைவியின் பங்கும், அதற்கான ஆலோசனைகளும்.
- குடும்பத் தலைவிகளுக்கான சுயதொழில் முயற்சிகள்.
- கணவன்- மனைவி இடையிலான புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புகள்.
- குடும்ப ஆரோக்கியம், உளவியல், அறிவியல், சுகாதாரம், மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகள்.
- சினிமா (+) பிளஸ், சினிமா (-) மைனஸ்.
- சுவையாக சமைப்பது எப்படி?
- இல்லத்தரசிகளுக்கானப் போட்டி

### ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான பயன் மிக்க அறிவியல், பொழுது போக்கு, கல்விசார் ஆக்கங்கள், ஊக்குவிப்புப் போட்டிகள்.

- உலக வெற்றியாளர்களின் அனுபவங்கள் ....
- உண்மைச் சம்பவங்களும், அதன் படிப்பினைகளும்.
- சிறுகதை - போட்டி.
- கவிதைப் பூங்கா - போட்டி.
- விந்தைமிகு செய்திகள்.
- நகைச்சுவை.
- புதிய விடுகதைகள்.
- விளையாட்டுப் பிரியர்களுக்கான விடயங்களும் போட்டியும்.
- சிறுவர் விருந்து.
- குறுக்கெழுத்துப் போட்டி.
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி.

ஒவ்வொரு இதழிலும் 10,000/= பணப்பரிசுகளை அள்ளி வழங்கும் போட்டிகள்.

### நேரடியான கல்விசார் துணுக்குகள்

- (GRADE -5) தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான முக்கிய 10 வினாக்களும், உங்கள் பிள்ளைகளை வழிப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் (ஒவ்வொரு சஞ்சிகையிலும் பிரபல ஆசிரியர்களது வினாக்களும் ஆலோசனைகளும் உள்ளடங்கும்.)
- (G.C.E O/L) க.பொ.த சாதாரண தர மாணவர்களின் (தரம் 10,11) தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும். 10 கணித, விஞ்ஞானபோட்டி வினாத்துணுக்குகள்.
- (G.C.E. A/L) உயர்தர வர்த்தக, பொருளியல் மாணவர்களுக்கான பரீட்சைக்கு அவசியமான புதிய விடயங்களும், வினா விடைகளும்.
- (G.C.E. A/L) உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களின் தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும் பாடநெறிகளிலான 10 வினாத் துணுக்குகள்.

இத்தனை விடயங்களுக்கும் உங்கள் மாதாந்த முதலீடு ரூ. 60/= மட்டுமே.

இல்லத்தரசிகளே! நீங்களும் பயன் பெற்று, உங்களூடாக பிள்ளைகளும் பயன் பெறத் தவறாது வாங்கிப் படியுங்கள்; உங்கள் பிள்ளைகளுக்கும் படிக்கக் கொடுங்கள்!

சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ள அருகில் உள்ள பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் இன்றே முற்பதிவு செய்து கொள்ளவும்.

அச்சிட்டு வெளியிடுவோர்:
நியூ விசன் மீடியா சின்டிகேட் பிறைவேட் லிமிட்டட்.
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14

மேலதிக தொடர்புகளுக்கு:
ஆசிரிய பீடம்:
011 5738004,
011 5738855

விநியோகம்:
தலைமை அலுவலகம்: 011 5737593/ 0718628379
வட மாகாணம்: 0215677222/ 0716182182
மேலதிக முறைப்பாடுகளுக்கும் விமர்சனங்களுக்கும்: 0714273035

### பனை அபிவிருத்தி சபைக்கு மட்டு. அரச அதிபர்

மட்டக்களப்பு பனை அபிவிருத்திச் சபைக்குச் சென்ற மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் அங்கு நடைபெற்றுவரும் பனம் நாற்று மேடை, பனம் பொருள் உற்பத்தி நிலையங்களின் வேலைகளைப் பார்வையிட்டார்.

விற்பனைக்காகத் தயாராக உள்ள பனம் பொருள் உற்பத் திகள், கைப் பணிப் பொருள் களையும் பார்வையிட்டார். பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்களின் தேவைகள், ஏனைய விடயங்கள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

இந்தப் பயணத்தின் போது, மாவட்ட அரச அதிபருடன், மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.நேசராஜா ஆகியோரும் சென்றிருந்தனர். (ச)

## கஸினோ எதிர்ப்பு பேரணி 5 இற்கு ஒத்திவைப்பு


கொழும்பு,நவ.22

கஸினோக்களுக்கு வரிச்சலுகை வழங்குவதற் காக நாடாளுமன்றில் அரசு சமர்ப் பிக்கத் திட்ட மிட்டுள்ள சட்ட வரைபை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என வலி யுறுத்தி கோட்டே ரஜ மகா விகாராதிபதி மாதுலுவாவே சோபித்த தேரர் தலைமையில் எதிர்வரும் 5ஆம் திகதி கொழும் பில் எதிர்ப்புப் பேரணியும், மாநாடும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய் யப்பட்டிருந்த இந்தக் கஸினோ எதிர்ப்பு நடவ டிக்கை கள் மாதுலுவாவே சோபித்த தேரரின் வேண்டு கோளுக்கிணங்க பிற்போடப் பட்டுள் ளது என்று ஐ.தே.க வின் நாடாளுமன்ற உறுப் பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரி வித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு நகர மண்டபத்திலி ருந்து நூலகத்தை நோக்கி பேரணியொன்று இடம் பெறவுள் ளது. அதன் பின்னர் நூலகத் தில் மாநாடும் நடைபெறவுள்ளது.

## மார்ச்சில் இலங்கை வருகிறார் பாப்பரசர்



கொழும்பு,நவ.22

பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ், எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கைக்கான பய ணத்தை மேற் கொள்ள வுள்ளார் என்றுரோமாபுரியிலுள்ள இலங்கை தூதர் நாவலகே பேர்னாட் குரே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்காக பாதுகாப்பு அமைச் சின் செய லர் கோத்தபாய ராஜ பக்ஷ நேற்றுமுன்தினம் வத் திக்கா னுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

பாதுகாப்பு செயலரும் அவரது பாரி யாரும் நேற்றுமுன் தினம் பாப் பரசரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டதுடன், அழைப் புக்கான வேண்டுகோளையும் விடுத் தனர் என பேர்னாட் குரே மேலும் தெரிவித்துள்ளார்.

---

## வீட்டுக்கி ருத்திய அழைப்பு



அமரர்

### இராமலிங்கம் ஆனந்தராசா

பிறப்பு 22.03.1950

இறப்பு 23.10.2013

அன்னாரின் வீட்டுக்கிரித்திய கிரியைகள் இன்று (22.11.2013) வெள்ளிக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன் னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
செட்டி வளவுலேன்.

குடும்பத்தினர்.

---

வீடு வாடகைக்கு

கொக்குவிலில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 8828152

---

## சுஜீவா வைத்தியசாலை துயர் பகிர்தல்

வாணக்குடியிருப்பு தம்பசிட்டி , பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட எமது உறவினரான

### திருமதி கிருஸ்ணபிள்ளை இராசம்மா

காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Dr. இராஜரட்ணம்
சுஜீவா வைத்தியசாலை,
பாலி நகர் வவுனிக்குளம்,
மாங்குளம்.

Dr. J. ஜெயலன், சுஜீவா வைத்தியசாலை
(சுஜீவா தாய்மை பேற்று சிறப்பு சிகி
ஆயுள் வேத வைத்தியசாலை), கஸ்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லபிள்ளை சின்னத்துரை

(தமிழரசு சின்னத்துரையின் மனைவி)



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் லண் டன் Eastham யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லபிள்ளை சின்னத் துரை நேற்று (21.11.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற் றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:

கணவர்:- க. சின்னத்துரை (00442084724945)
சகோதரர்கள்:-ப. கதிரிப்பிள்ளை (077 0816805)
வீ. ஜெகதீஸ்வரி (077 5240027)


வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(c 14967.14.17)

---

## மரண அறிவித்தல்

### லயன் குழந்தைவேலு நடராசா



(லயன்ஸ் கழக 306BI மாவட்ட தலைவர் சமுர்த்தி மகாசங்கத்தலைவர், தென்மராட்சி தென்னை அபிவிருத்திச்சபை தலைவர், தென்மராட்சி கிழக்கு அபிவிருத்திச்சபை உறுப்பினர், கொடிகாமம் பொது வைத்தியசாலை அபிவிருத்திசபை உறுப்பினர், நூலக அபிவிருத்திச்சபை பொருளாளர்)

கச்சாய் வடக்கு , கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும். நகுலகிரி கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தை வேலு நடராசா நேற்று முன்தினம் (20.11.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - ஈஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும் விநாயகமூர்த்தி, சிறிரங்கநாதன், தவமணி, தவமலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருச்செல்வம், பரமேஸ்வரி ,மகேஸ்வரி காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சோமநாதர், அரியநாயகம், இராசேஸ்வரி, சிறிநந்தினி ஆகியோரின் மைத்துனரும் கணேசலிங்கம், ஜெயமணிதேவி காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், ஜெயவீரசிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சிவரூபன் சிவகேசவன், சிவநேசன், துஸ்யந்தி, சாவித்திரி, கோபிகா, சுவர்ணா ,தட்சாயினி ,சுதர்சன், பரிசன் ,கஸ்தூரி, வாசுகி, பிரகாஸ் ஆகியோரின் மாமனாரும் சாரங்கன், சாரங்கி ஆகியோரின் பெரியப்பாவும் பாலசோதி, சோதீஸ்வரன், பாலேஸ்வரி, விக்கினேஸ்வரன், இராசேஸ்வரன், குமணன், அகிலன், கலாநிதி, சவிதினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் பாலாவித்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

நகுலகிரி கச்சாய் வீதி, கொடிகாமம்.

தகவல் : குடும்பத்தினர்
077 6679391, 077 4293432

---

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2014ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 29.11.2013 நண்பகல் 12 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 02.12.2013 முற்பகல் 10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 02.12.2013 முற்பகல் 11 மணி
4. கேள்வி தொகையின் 2/3 பகுதியைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டிய இறுதித் திகதி : 09.12.2013

2014ஆம் ஆண்டு இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| தொ.இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடை 02 | 1,540,000.00 | 15,400.00 | 1,000.00 |
| 2 | ஆட்டிறைச்சிக் கடை 01 | 660,000.00 | 6,600.00 | 1,000.00 |
| 3 | கோழி இன்றச்சிக் கடை 01 | 935,000.00 | 9,350.00 | 1,000.00 |
| 4 | கோழி இறைச்சிக் கடை 02 | 935,000.00 | 9,350.00 | 1,000.00 |

குறிப்பு:-

நகராட்சி மன்றத்தின் கோழி இறைச்சிக் கடைகளிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப் படமாட்டாது. மேலதிக விவரங்களை 06.11.2013ஆம் திகதிய உதயன் பத்திரிகை யில் பார்வையிடவும்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
21.11.2013

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

(வி/2790) (7.6)

---

## மரண அறிவித்தல்

### நாராயணர் முருகையா

(ஓய்வுபெற்ற அதிபர், முத்தமிழ்க் கலாவித்தகர்)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர், கலைஞர் நாராயணர் முருகையா கடந்த 15.11.2013 கனடாவில் காலமானார்.

அன்னார் கனடாவைச் சேர்ந்த திருமதி விசாக பூஷணம் முருகையாவின் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான நாராயணர்-சின்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்றவர்களான நல்லூரடியான், கிருஷ்ணசாமி, தில்லைவனம் மற்றும் சிவசிதம்பரம் விநாயக மூர்த்தி, வெள்ளிமலை ஆகியோரின் சகோதரரும், நாராயணமூர்த்தி (கனடா), ஜெகதாம்பிகை (கொழும்பு), லலிதாம்பிகை (கனடா), விசாகதாசன் (கனடா), சாரதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாணந்தமூர்த்தி (கொழும்பு), விஜயநாதன் (கனடா), ஜெனிற்றா ஜெயந்தி (கனடா) ஆகியோரின் மாமனும், ரமேஷ் ரெமி, பவித்ரா, அரவிந்தன், லக்ஷ்மி, லக்ஷணா கௌதம், லஷ்யா, நிவேதன், தமோதன், பிரதீபன், வர்ணப்பிரியா-சுதன், பிரிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், சஷ்மிதா, அதர்வா ஆகியோரின் செல்லப் பூட்டனும், விசாகரத்தினவேல் (மூளாய்), லோகேஸ்வரி மரியதாசன் (யாழ்ப்பாணம்), சரவணபவன் (நவாலி), கோமதிதேவி செல்வநாதன் (நல்லூர்), சயலொளிபவன் (பிரான்ஸ்) ஸ்கந்தமலர் குகதாசன் (பிரான்ஸ்), குகபூஷணி இராமலிங்கம் (சுழிபுரம்) கோடீஸ்வரி சோமசுந்தரம் (ஜேர்மனி) ஸ்ரீகௌரி அல்போன்ஸ் (லண்டன்), கீதா சிவபாதம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை Chapel Ridge Funeral Home & Cremation Centre, Canada வில் நடைபெறவுள்ளது என்பதனையும் அன்று பி.ப 2.00 - 5.00 மணிவரை அன்னாரது ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை இலங்கையில் தொல்புரம் சர்வோதய நிலையத்தில் நிகழவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(40378) (10,14)

தகவல்:
கந்தையா சயலொளிபவன் (பிரான்ஸ்)
தொலைபேசி இல.0033147393194

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐ.தே.க

யில் கூடியது. சபாநாயகரின் அறிவிப்புமுடிவுற்ற பின்னர் பிற்பகல் 1.07 மணியளவில் வரவு - செலவுத்திட்ட உரையை ஜனாதிபதி ஆரம்பித்தார்.

அவ்வேளையில், சபைக்கு வராத ஐ.தே.கவும், ஜனநாயக தேசியக் கூட்டணியும் ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட உரையைப் புறக்கணித் தன. எனினும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு புறக்கணிக்கும் முடிவை எடுத் திருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

"அரசு கடந்த காலங்களில் வரவு - செலவுத்திட்டத்தி னூடாக வழங்கிய உறுதிமொழிகளில் பல இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வரவு செலவுத் திட்டமானது உறுதிமொழி அறிக்கை யாகவே இருக்கின்றது. எனவே, இம்முறையும் அப்படித் தான் நடக்கும். இதன் காரணமா கவே புறக்கணிப்பு முடிவு எடுக் கப்பட்டது" என ஐ.தே.கவும், ஜனநாயக தேசியக் கூட்ட ணியும் தெரிவித்துள்ளன. (த-சி)

### வெடிபொருள்

டிருக்கலாம் என்று பொலிஸார் சந் தேகம் தெரிவிக்கின்றனர்.

பெரிய விளானிலிருந்து மாதகலுக்கு தண்ணீர் விநியோகிக்கும் பொருட்டு வீதியோரமாக வாய்க்கால் வெட்டி தண்ணீர்க் குழாய் பொருத்தும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இதன் போதே குண்டுகள் இருந்தமை கண்டறியப்பட்டது. பின்னர் அவை செயலிழக்க வைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

### 51,600

மொத்த வருமானம் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 50 இலட்சம் (1469.5 பில்லியன்) ரூபா மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, மொத்தச் செலவாக ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 500 கோடியே 60 இலட்சம் (1985.6 பில்லியன்) ரூபா கணிப்பிடப்பட்டுள்ளது.

அரசின் 2013 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை 507.5 ரூபாவாகும். 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அடுத்த ஆண்டுகான பற்றாக் குறை 8.7 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. (த-சி)

### வரவு - செலவுத்

★ பல்கலை மாணவர் தங்குமிட வசதிக்காக 15000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

★ கொழும்பு, களுபோவில, ராகம வைத்தியசாலைகளுக்கு 180மில்லியன்டொலர்சீனஉதவி

★ பெண்கள் சுயதொழிலுக்கு வட்டி இல்லாக் கடன் ரூபா 250,000 வரை

★ சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பணியகத்துக்கு ரூ.300 மில்லியன்

★ யாழ்., காலி வைத்திய சாலைகளில் வேதிச்சிகிச்சை அலகுகள்

★ வெளிநாட்டு வேலை வாய்ப்பு வருமானம் ரூ. 7000 மில்லியன் எதிர்பார்ப்பு

★ குடிநீர், மின்சாரத் திட்டங்களுக்கு 1400 மில்லியன் ரூபா

★ பாடசாலைகளின் சுகாதாரத்துக்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(த)

### வடக்கு, கிழக்கு

கள் கூறியுள்ளனர்.

இந்த வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று மாலை 'உதயன்' வினவியது. இதன்போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

**பொன்.செல்வராஜா**

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எது விசேடம் என்று சொன்னால் அது பாதுகாப்புச் செலவினங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதே ஆகும். இதனை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். 30 வருட காலப் போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எதுவித விமோசனமோ - நிவாரணமோ இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை - என்றார்.

**ஈ.சரவணபவன்**

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது எதற்கு? இந்த வரவு - செலவுத் திட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் திட்ட மிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், வாழ்வாதாரங்கள் பற்றி இதில் எதுவுமே விசேடமாகசொல்லப்படவில்லை.

தமிழ் மக்களை இந்நாட்டின் பிரஜைகளாக மஹிந்த அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்த வரவு-செலவுத் திட்டத்திலிருந்து நாம் விளங்கிக்கொள்ளலாம். சர்வதேச சமூகம், இந்த அரசின் செயல்களைப் பார்த்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

**பா.அரியநேத்திரன்**

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யாத இந்த வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றில் நாம் ஆதரிக்கமாட் டோம். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் போரை நடத்திய படையினருக்குச் சலுகைகளை வழங்கியுள்ள மஹிந்த அரசு, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைத் தூக்கியெறிந்துள்ளது.

வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட விதவைகள், அங்கவீனர்களுக்குக்கூட எந்தவித விசேட சலுகைகளையும் இந்த அரசு வழங்கவில்லை. வடக்கு மாகாணத்துக்கு 17 பில்லியன் ரூபாவையும், கிழக்கு மாகாணத்துக்கு 14 பில்லியன் ரூபாவையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசு ஒதுக்கியுள்ளது - என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு புறக்கணிப்பட்டு இருப்பதால் மஹிந்த அரசின் இனத்துவேசம் - இன விரோதம் மீண்டுமொரு முறை வெளிக்காட்டப்பட்டுள்ளது. அரசால் அகதியாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் எதுவும் இதில் இல்லை.

வடக்கு, கிழக்கை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் தொடர்ந்து வைத்திருக்கவே இந்த அரசு விரும்புகின்றது. அதற்கேற்ற மாதிரி இந்த அரசு காய்நகர்த்தி வருகின்றது - என்றார். (த)

### ஏமாற்றம்

**பல்கலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு**

பல்கலைக்கழககல்வியை மேம் படுத்தும் நோக்கத்துக்காக மாணவர்களின் தங்குமிடங்களை நவீனமுறையில் மாற்றியமைப்பதற்கு 15000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

**ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிப்பு 350 - 500 ரூபா**

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு 500 ரூபாவும் அதற்கு பின்னர் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு 350 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**2014 இல் 1000 பாலங்கள் நிர்மாணிக்கப்படும்.**

**விவசாயிகளுக்கு ஓய்வூதியம்**

63 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த ஜனவரி முதல் ஓய்வூதியம் வழங்கப் படும் அதற்காக ரூபா 1000 மில்லியன் மூலதனம் இடப் படும். தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆகியவற்றுக்கான வரி பலப்படுத்தப்படும்.

**மிருக வைத்தியருக்கு 7500 ரூபா கொடுப்பனவு**

பால் உற்பத்தி அதிகரிக்கப்பட்டவுள்ளது. அதனை மேம்படுத்துவதற்கு நாட்டுக்கு 20 ஆயிரம் பால் மாடுகள் இறக்குமதி செய்யப்படும்.

**5000 வீடுகளை கொண்ட 15 புதிய வீட்டுத்திட்டங்கள்**

ஒவ்வொன்றும் 5000 வீடுகளை கொண்ட 15 புதிய வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். இந்த வீடுகளை ஒதுக்கும் போது தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பொலிஸ் சேவை முக்கிய பங்கு வகிக்கிறது**

வடக்கில் சிவில் பாதுகாப்பிலும் சட்டம், ஒழுங்கை நாட்டில் நிலைநாட்டுவதிலும் பொலிஸ் சேவை முக்கிய பங்கு வகிக்கின்றது.

**நீதிபதிகளின் படிகள் அதிகரிப்பு**

நீதிபதிகளின் பிரத்தியேக படிகள் 8 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**வாழ்க்கைச்செலவு படி 1200 ரூபாவால் அதிகரிப்பு**

அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவு படி ஜனவரியிலிருந்து 1200 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

**வறுமை 6 வீதமாக குறைப்பு**

வறுமை 2013 ஆம் ஆண்டில் 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மற்றும்1976 ஆம் ஆண்டு நடைபெற்ற அணிசேரா மாநாட்டுக்கு பின்னர் சர்வதேச மாநாடான பொதுநலவாய மாநாடு 2013 ஆண்டே நடை பெற்றது. பொருளாதார வளர்ச்சி பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொதுநலவாய மாநாட்டை நடத்தியதன் ஊடாக நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**வெளிநாட்டவர்கள் காணி வாங்குவதை நிறுத்த சட்டம்**

வெளிநாட்டவர்கள் காணி கொள்வனவு செய்வதை முற்று முழுதாக நிறுத்தச் சட்டம் கொண்டு வரப்படும். குத்தகை அடிப்படையில் மட்டுமே வெளிநாட்டவர்கள் காணிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

**விமானிகளுக்கான பயிற்சி பாடசாலை**

நவீனப்படுத்தப்பட்ட விமானிகளுக்கான பயிற்சிப் பாடசாலை நிர்மாணிக்கப்படும்.

**பெண்கள் சுயதொழிலுக்கு வட்டி இல்லாக் கடன் ரூபா 250,000 வரை.**

68 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் தொழில் முயற்சிக்கு வட்டி இல்லாத கடன் மற்றும் சலுகைகள் வழங்கப்படும். இதன்படி 250,000 வரை கடன் வசதிகளைப் பெறமுடியும்.

**சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பணியகத்திற்கு ரூ.300 மில்லியன்**

சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பணியகத்திற்கு 300 மில்லியன் ரூபா கொடுக்கப்படும். இலங்கையில் ஒரு செழுமையான சமய கலாசார வளர்ப்பு முறை உள்ளபோதும் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பரவலாக காணப்படுகின்றது. இது நிறுத்தப்படவேண்டும்.

**மாகாண சபை வரி இல்லை**

50 ஆயிரம் ரூபாவுக்கும் குறைந்த வணிகங்களுக்கு மாகாண சபை வரி இல்லை.

**பசளைக்கு 350 ரூபா வழங்கப்படும்**

பெரும்போகத்திலும் சிறுபோகத்திலும் பசளைக்கு 350 ரூபா வழங்கப்படும். நீர்ப்பாசனத் திட்டத்துக்கு 1700 மில்லியன் ரூபா வழங்கப்படும்.

**வாகனங்கள், மதுபானங்கள், சிகரெட் வரி மூலம் வருமானம்**

நிவாரணத்தை வழங்கும் அரசு என்றவகையில் வாகனங்கள், மதுபானங்கள் மற்றும் சிகரெட் ஆகியவற்றின் மீதான வரிகள் ஊடாக வருமானத்தை ஈட்டவேண்டியுள்ளது.

**வரி வங்கிகள் அறிமுகம்**

தேசத்தை கட்டியெழுப்பும் வரி வங்கிகளுக்கும் அறிமுகப் படுத்தப்படும்.

**அரச கடன் குறைக்கப்படும்**

வரவு-செலவுத்திட்ட பற்றாக் குறை 2016 ஆம் ஆண்டளவில் 3.6 வீதமாக குறைக்கப் படும். அத்துடன் அரச கடன் கொடுத்தலும் குறைக்கப்படும்.

**யாழ்., காலி வைத்திய சாலைகளில் வேதிச்சிகிச்சை அலகுகள்**

யாழ்ப்பாணம், காலி மற்றும் வேறு மாவட்ட வைத்திய சாலைகளில் வேதிச்சிகிச்சை அலகுகள் நிறுப்படும். இதன் மூலம் மஹரகம புற்றுநோய் சிகிச்சைநிலையத்தில் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் காலம் 3 வருடங்களிலிருந்து 6 மாத மாக குறைக்கப்படும்.

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமான ரூ. 7000 மில்லியன் எதிர்பார்ப்பு**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமான 7000 மில்லியன் ரூபாவாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது. துணி இறக்குமதியை 6 வீதத்தால் அதிகரிக்க யோசனை மற்றும் கட்டுமான கைத்தொழில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதமாகத் தற்போது உள்ளது.

**குடிதண்ணீர், மின்சாரத்துக்கு 1400 மில்லியன் ரூபா.**

வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் மற்றும் மின்சார நடவடிக்கைகளுக்கு 1400 மில்லியன் ரூபா. மீன் உற்பத்தியை அதிகரிப்பதனூடாக ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**மிருக வைத்தியர்களுக்காக 7500 மாதாந்த கொடுப்பனவு**

யாழ்ப்பாணம், கண்டி, அனுராதபுரம், பதுளை, காலி ஆகிய பகுதி வைத்தியசாலைகளில் நவீன வைத்திய உபகரணங்களுடன் கூடிய வசதிகள் வழங்கப்படும். வைத்தியசாலை ஊழியர்களுக்கான சீருடை கொடுப்பனவு 500 ரூபாவில் இருந்து 1500 ரூபாவிற்கு அதிகரிக்கப்படும்.

**கொழும்பு, களுபோவில, ராகம வைத்தியசாலைகளுக்கு 180 மில்லியன் டொலர் சீன உதவி**

கொழும்பு, களுபோவில, ராகம தேசிய வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவை விருத்தி செய்வதற்கு சீனா 180 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

**பாடசாலைகளின் சுகாதாரத்துக்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு**

நாட்டுக்கு பெருமை தேடி தரும் கலைஞர்கள் அவர்களின் பணியை சுதந்திரமாக தொடர ஐந்து ஓய்வு விடுதிகள் அமைக்கப்பட உள்ளதோடு அதற்கான காணியும் ஒதுக்கப்படும். (த-சி)

### வெளியுறவு

செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வரவு - செலவுத்திட்டமானது தெற்காசியாவில் முதன் முறையாக 23ஆவது பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை நடத்திய தன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகிறது. இது 1976ஆம் ஆண்டு இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு அடுத்ததாக இந்த நாட்டில் இடம்பெற்ற முதலாவது சர்வதேச நிகழ்வாகும். எமது தாய்நாடு 53 நாடுகளைத் திரட்டியதன் மூலம் அவர்களாகவே எமது திருப்புமுனையை நேரடியாகக் கண்டுகொள்வதற்கான வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம் என்ற வகையில் நாம் பெருமைப்படுதல் வேண்டும்.

புனையப்பட்ட கருத்துகள் முற்றிலும் பிழையானவை என்பதை எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் ஜனநாயத்தின் ஸ்திரத்தன்மை என்பவற்றினை அவர்களாகவே கண்டுகொள்வதற்கும் அதனை உறுதியாக நம்புவதற்கும் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

மாநாட்டை நடத்தியதனூடாக அரிதான வாய்ப்புகள் பலவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்ததுடன், பொது நலவாய நாடுகளின் பரந்தளவிலான வெளிநாட்டு சந்தைகளை இலக்காக் கொண்டு எமது நாட்டின் முதலீட்டு சந்தர்ப்பங்களை ஊக்குவிப்பதற்கும் உலக சந்தையில் தொடர்புகளை ஏற்படுத்துவதனுடன் மாநாட்டின் பிரதான பொருளாதார நன்மையை அடைந்து கொள்ள முடியுமாக இருந்தது. இந்த முன்னெடுப்பின் காரணமாக முதலீடுகளை அதிகரிப்பதற்கும், தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எமக்கு முடியுமாக இருந்தது. இந்த மாநாட்டின் வெற்றிகரமான முடிவில் எமது நாட்டிற்கு பொதுநலவாய தலைமைத்துவம் வழங்கப்பட்டதால் எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளை சர்வதேசம் வரவேற்றுள்ளது என்பது தெளிவாகியுள்ளது - எனத் தெரிவித்தார். (த-சி)

### மானிய எரிபொருளே

மன்னார் மாவட்டத்தில் மீனவர்கள் நேற்றுத் தொழில் புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அதன் தலைவர் என்.எம். ஆலம் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதன் பின்னர் மீனவர்கள் ஊர்வலமாக சென்று தமது கோரிக்கை அடங்கிய மனுவை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல்லிடம் கையளித்தனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் எமது கடல் பகுதிக்குள் உள்நுழைந்து தொழில் செய்கின்றமையால் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மீனவர்கள் வாரத்தில் மூன்று தினங்களே கடற்றொழில் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு மாத காலத்துக்கு முன்னர் இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்ட எமது சகோதர மீனவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

எமது சங்கங்களின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் நடக்கும் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்துகின்றனர்.

கடல் சீற்றம், காலநிலை மாற்றம் என்பவற்றால் எமது மீனவர்கள் பல மாதங்கள் தொழிலின்றி வாழ்வாதா ரத்தை இழந்துள்ளனர். இவர்களின் பெயர்கள் திரட்டப்படுகின்ற போதும் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு பிரச்சினைகள் தொடர்ந்து வருவதால் இந்த மீனவர்கள் கடன் சுமைக்கும் வறுமைக்கும் சிக்குண்டு தங்கள் தொழில்களைக் கைவிட்டு தமது உயிர்களை மாய்க்கவும் அல்லது நாட்டை விட்டு அயல் நாட்டுக்கு இடம்பெயர்ந்து செல்லவும் வழிவகுக்கின்றன. எனவே மக்களின் கோரிக்கைக்குத் தீர்வை வழங்குமாறு கோருகின்றோம் - என்றுள்ளது.

இதேவேளை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பினால் நேற்று துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5-12)

### இணைத்


புக் குழுக் கூட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்தது.

கூட்டங்கள் முடிவடைந்த நிலையில், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களுக்கு இணைத் தலைவராக முதலமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சருக்கு இதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.


நாடு பூராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மஹிந்த சிந்தனையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தல், அந்த அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் செய்தல், திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பல்வேறு விடயங்களை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருடன் இணைந்து முன்னெடுப்பதற்கு முதலமைச்சருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைமைப்பதவி 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருக்கும். (த-5)

### சதுரங்க இறுதியாட்டம்



யாழ்ப்பாணம், நவ.22
வட மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 2013ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்க சுற்றுப் போட்டித் தொடரில் குழு நிலை சதுரங்கத் தொடரின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் ஸ்தான மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இருந்து ஆரம்பமான சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதான முன்றலில் முடிவடைந்தது.போட்டியில்

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வென்றது நெல்லியடி ம.வி. அணி

யாழ்ப்பாணம், நவ.22
அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவு அணிகளின் பிரிவு III க்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது. யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சாருதன் 31 ஓட்டங்களையும் விஜிதன் 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரி அணி சார்பில் மதிகன் 3 இலக்கினையும் டினுஷன், டிலக்ஷன் ஆகியோர் தலா 2 இலக்கினையும், டினோஸ் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 32 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனலக்சன் 26 ஓட்டங் களையும் டினுஷன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார்பில் சிறிகிருஸ்ணா 4 இலக்கினையும், பிரதாபன் 3 இலக்கினையும், விஜிதன் 2 இலக்கினையும் சருதன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.



தனது 2 ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்தவித இலக்கு இழப்புமின்றி 74 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிசோக் ஆட்டம் இழக்காமல் 39 ஓட்டங்களையும், இந்துஷன் 34 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

தனது ஆட்டத்தை இடைநிறுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி யூனியன் கல்லூரி அணியைத் தொடர்ந்து ஆடுமாறு பணித்தது.

அதற்கமைய தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கினை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மதிஷன் 14 ஓட்டங்களையும் குபேரன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார்பில் பிரதாபன் 3 இலக்கினையும் சிறிகிருஸ்ணா, சாருதன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.22
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப. 3.30 மணி**
திருக்குமரன் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**மாலை 4.30 மணி**
வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம். (த-23)

## மன்னார் லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், நவ.22
மன்னார் உதைபந்தாட்ட லீக் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை மன்னார் நகர சபை மைதானம், மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆரம்ப நிகழ்வுக்கு விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம், மன்னார் நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம், மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் சியான், மன்னார் பேராலய பங்குத் தந்தை பொப்பி சோசை அடிகளார் மற்றும் மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் தவிசாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## வென்றது மேரிஸ்

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் நேற்று வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோள் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



## சதுரங்கத்தில் வென்றோர்

வட மாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 2013ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் தனிநபர்களுக்கான சதுரங்க போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**ஆண்கள்**
எஸ்.வித்தியாதரன் - முதலாமிடம் (கல்வி அமைச்சு), எஸ். கிசோர் இரண்டாமிடம் (உள்ளூராட்சி அமைச்சு), எல். விஸ்வநாதன் மூன்றாமிடம் (கல்வி அமைச்சு), மதிவண்ணன் (சுகாதார அமைச்சு).

**பெண்கள்**
எஸ்.வித்தியாரணி - முதலாமிடம் (ஆளுநர் செயலகம்), துஷ்யந்தி இரண்டாமிடம் (சுகாதார அமைச்சு), கே.பிரபா மூன்றாமிடம் (உள்ளூராட்சி அமைச்சு). (த-23)



யாழ்ப்பாணத்தில் முதலாவது புற்றரை கிரிக்கெட் ஆடுகளம் அமைக்கும் பணிகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
கடந்த ஜூனில் யாழ். வருகை தந்த இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம தேர்வாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய இந்தப் பணியை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (த-23)

## பிரதம செயலர் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.22
வட மாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 2013ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பிரதம செயலாளர் கொத்தணி அணி வெற்றி பெற்று சம்பியனானது.



நேற்று வியாழக்கிழமை கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து பிரதம செயலாளர் கொத்தணி அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பிரதம செயலாளர் கொத்தணி அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுபாஸ்கர் 40 ஓட்டங்களையும், மதுஷன் 31 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் உள்ளூராட்சி திணைக்கள அணி சார்பில் குமார், சுதர்சனன், சுதேஸ்குமார், சுதாகரன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உள்ளூராட்சி திணைக்கள அணி 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கவித்தன் 44 ஓட்டங்களையும், தனுராஜ் 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பிரதம செயலாளர் கொத்தணி அணி சார்பில் மதுஷன் 5 இலக்குகளையும் சுபாஸ்கர் 2 இலக்கினையும் ராகவன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினார்கள். (த-23)




# வாழும் கடவுள் சச்சின்

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் தீவிர ரசிகர் சுதிர் குமார் சவுத்ரி(வயது 32). தனது வாழ்க்கையை சச்சினுக்காவே அர்ப்பணித்தவர். போட்டிகளின் போது தேசிய கொடியின் மூவர்ணத்தை உடலில் பூசிக் கொண்டு டெண்டுல்கர் 10 என்ற வாசகத்தை மார்பில் எழுதி, அணியை உற்சாகப்படுத்துவார்.
சச்சின் ஓய்வு பெற்ற தினத்தன்று, மைதானத்தை வலம் வந்த போது, சுதிர் குமார் சவுத்ரியும், தேசியக் கொடியுடன் சென்றார்.
இது குறித்து சுதிர் குமார் சவுத்ரி கூறுகையில், கடந்த 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற போது, என்னை உடை மாற்றும் அறைக்கு அழைத்து உலகக் கிண்ணத்தைக் காண்பித்து வாழ்க்கையில் மறக்க முடியாதநினைவுகளைகொடுத்துவிட்டார். மும்பையில் சச்சின் இறுதி உரை நிகழ்த்திய போது எனது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மைதானத்தின் ஒரு ஓரமாக சென்று தேம்பி அழுதேன். மறுநாள் நடந்த பத்திரிகையாளர் சந்திப்புக்கு வருமாறு சச்சின் தெரிவித்தார். ஆனால் அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததால், அவரைச் சந்திக்க முடியவில்லை. கொச்சியில் இந்திய அணி பங்கேற்கும் போட்டி முடிந்ததும் சச்சினை நேரில் பார்ப்பேன். ஏனெனில்என்னைப்பொறுத்தவரையில் வாழும் கடவுள் சச்சின். இனி சச்சின் இல்லை என்றாலும் மிஸ்யு டெண்டுல்கர் 10 என்ற வாசகத்தை முதுகில் எழுதி, தொடர்ந்து போட்டிகளில் வீரர்களை உற்சாகப்படுத்த உள்ளேன் என்று தெரிவித் துள்ளார். (த)

# கிறிஸ்ரியானோ ரொனால்டோ ஹட்ரிக் கோல் உலகக்கிண்ணப் போட்டிக்குப் போர்த்துக்கல்

கடுமையான போராட்டத்துக்குப் பிறகு கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் போர்த்துக்கல் அணி, அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.
ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகளுக்கு இடையேயான தகுதிச்சுற்றுப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவுக்கு வந்தன.
தகுதிச்சுற்று முடிவுகளைத் தொடர்ந்து, போர்த்துக்கல், கிரேக்கம், குரோஷியா, பிரான்ஸ் ஆகிய 4 அணிகளும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்குத் பெற்றுள்ளன.
போர்த்துக்கல் அணிக்கும் சுவீடன் அணிக்கும் இடையேயான ஆட்டம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த ஆட்டம், இரு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் என்பதை விட, உலக அளவில் புகழ்பெற்ற போர்த்துக்கல் அணித்தலைவர் ரொனால்டோவுக்கும், சுவீடன் அணித் தலைவர் இப்ராஹிமோவிச்சுக்கும் இடையேயான ஆட்டமாகவே கருதப்பட்டது. இந்த ஆட்டம் சுவீடனின் சோல்னா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
உள்ளூர் ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவுடன் சுவீடன் அணி களமிறங்கியது. ஆனால் நட்சத்திர வீரர் ரொனால்டோவை சுவீடன் வீரர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால், அவர் ஹட்ரிக் கோல் (50, 77, 79 நிமிடங்களில்) அடித்தார்.
கடுமையாகப் போராடிய இப்ராஹிமோவிச், தன் பங்குக்கு 2 கோல்களை (68, 72) அடித்து ரசிகர்களுக்கு ஆறுதல் அளித்தார். முடிவில், 3-2 என்ற கணக்கில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது.
இந்த ஆட்டத்தின் 76ஆவது நிமிடம் வரை சுவீடன் அணிக்கு உலகக் கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்பு இருந்தது. ஆனால், 77ஆவது நிமிடத்தில் அதனை ரொனால்டோ தனது கால்களால் தட்டிப் பஷீத்தார்.
தகுதிச்சுற்றில் இரு அணிகளும் 2 முறை மோதின. இரு ஆட்டங்களையும் ஒப்பிட்டு ஒட்டு மொத்தமாக போர்த்துக்கல் அணி 4-2 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனால், அந்த அணி உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது.
இதனால், தொடர்ந்து 4ஆவது முறையாக உலகக் கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்பை அந்த அணி பெற்றது. (த)



# அக்தர் சீற்றம்

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர், கிரிக்கெட் சபையைக் கடுமையாகச் சாடியுள்ளார்.
தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, இரண்டு 20/20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.
இந்தத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் ணியிலிருந்து அப்துல் ரசாக் மற்றும் சொகைப் மாலிக் திடீரென நீக்கப்பட்டுள்ளனர்.
இது குஷீத்து கருத்து தெரிவித்திருக்கும் சொகைப் அக்தர், இது நல்ல நகைச்சுவை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. தென்னாபிரிக்காவுக்கு இந்த இரு வீரர்களும் செல்லும் போது உடற்தகுதி சரியானதாக இருந்ததா?இப்போது திடீரென அவர்களை நாடு திரும்புமாறு கூறக் காரணம் என்ன? பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரின் செயல்பாடு மிகவும் மோசமாக கவலைக்குரியதாக இருக்கிறது.
அதேபோல் ஒரு கிரிக்கெட் சபையின் தலைவர் திடீரென ரிவி தொகுப்பாளராக மாறி, அவர் சார்ந்த அணியின் அணித் தலைவரைச் சராமரியாக கேள்வி கேட்பது என்பதை இதுவரை நான் கேள்விபட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை என்று தெரிவித்துள்ளார். (த)



# 2ஆம் இடத்துக்கு முன்னேற இங்கிலாந்துக்கு வாய்ப்பு



ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து வெற்றி பெறும் பட்சத்தில் தரவரிசையில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி 2ஆவது இடம் பிடிக்க வாய்ப்பு உள்ளது.
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என இந்தியா கைப்பற்றியது. இதன் மூலம் தரவரிசைப் பட்டியலில் இந்தியா 119 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து அணி 116 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது.
இந்நிலையில், இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. இத்தொடரை 4-0 அல்லது 5-0 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றும் பட்சத்தில், தரவரிசையில் 2ஆவது இடத்துக்கு அந்த அணி முன்னேற வாய்ப்பு உள்ளது.
இங்கிலாந்தை விட 15 புள்ளிகள் பின்தங்கி 5ஆவது இடத்தில் உள்ளது ஆஸ்திரேலியா. ஆஷ்ல் தொடரை ஆஸ்திரேலியா சமநிலை செய்தாலோ அல்லது தொடரை வென்றாலோ மீண்டும் முதல் நான்கு இடங்களுக்குள் முன்னேற வாய்ப்பு உள்ளது.
ஒருவேளை ஆஸ்திரேலியா 4-0 என்ற கணக்கிலோ அல்லது தொடரை முழுமையாகவோ கைப்பற்ஷினால் 3ஆவது இடத்துக்கு முன்னேறலாம். 2016ஆம் ஆண்டுக்குள் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மட்டுமே, 201%ஆம் ஆண்டு நடக்கவுள்ள உலகக் கிண்ண டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறவுள்ளன.

**இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. இத்தொடரை 4–0 அல்லது 5–0 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றும் பட்சத்தில், தரவரிசையில் 2ஆவது இடத்துக்கு அந்த அணி முன்னேற வாய்ப்பு ள்ளது.**

# டில்ஷான், பெரேரா விளாசல் தொடரை வென்றது இலங்கை



இலங்கை நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 8 இலக்குகளால் அபார வெற்றி பெற்று 1:0 என்ற அடிப்படையில் தொடரையும் கைப்பற்றியது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டம் மழையினால் கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று பல்லேஹல விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி நியூஸிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 3 ஓட்டங்களுக்குள் தனது முதலாவது இலக்கை இழந்தது. அந்த அணியின் இலக்குகள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட அவ்வணி பெரிய இலக்கை நிர்ணயிக்க முடியாது திணறியது. அவ்வணி சார்பாக டேவிட். 30 ஓட்டங்களையும். மக்குலம் 26 ஓட்டங்களையும்.லதம் 20 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ரோன்சி மட்டும் ஆட்டமிழக்காமல் அதிக பட்சமாக 34 ஓட்டங்களைப் பெற்றார். அவ் வணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 7 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பந்துவீச்சில் மலிங்க, குலசேகர. மத்தியூஸ். ரம்புக்வெல. மெண்டிஸ் மற்றும் பெரேரா ஆகியோர் தலா ஓர் இலக்கினை கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இலங்கை அணி 17.5 பந்து பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை மட்டும் இழந்து 8 இலக்குகளால் வெற்றியை சுவீகரித்துக் கொண்டது. இலங்கை அணி சார்பாக பெரேரா 57 ஓட்டங்களை பெற்றார். டில்சான் 59 ஓட்டங்களுடனும் குமார் சங்ககார 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் மக்லிங்கன் நிகோல் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். இப் போட்டியில் ஆட்டநாயகனாக பெரேரா தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றி யின் மூலம் இலங்கை அணி 1:0 என்ற அடிப்படையில் தொடரை தம் வசப்படுத்திக் கொண்டது.

(த-400)

# இந்தியாவிடம் பணிந்தது மேற்கிந்தியத் தீவுகள்



இந்தியா- மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி கேரள மாநிலம் கொச்சியில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. கெய்ல் - சார்லஸ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்.

கெய்ல் முதலாவது பந்துப் பரிமாற்றத்தின் இரண்டாவது



பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன்பின் 2ஆவது இலக்குக்காக சாமு வேல், சார்லசுடன் இணைந்தார். அவர் 24ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரெய்னாவின் பந்தில் கிளீன் போல்டானார்.

3ஆவது இலக்குக்காக சார்லசுடன், பிராவோ இணைந்தார். இருவரும் நிதானமாக விளையாடினர். சார்லஸ் 42 ஓட்டங்களில் ஜடேஜாவின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார். தொடர்ந்து பிராவோ 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்

அவர்பின் வந்தவர்களால் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற மேற்கிந்தியத்தீவு அணி 48.5 பந்துபரிமாற்றங்களில் 211 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்திய அணி சார்பில் ஜடேஜா. ரெய்னா தலா 3 இலக்குகளையும் அஸ்வின் சமி ஆகியோர் தல இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து 212 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத் தாட களமிறங்கிய இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அணி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தவானின் இலக்கு வீழ்த்தப்பட்டது. அவர் வெறும் 5 ஓட்டங்களுடன் வெளி யேறினார். தொடர்ந்து சர்மாவும் கோஹ்லியும் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி வெற்றிக்கு வழி சமைத்தனர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 150 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் 35.2 பந்துப்பரி மாற்றங்களில் 4 இலக்கு களை மாத்திரம் இழந்து 212 ஓட்டங்களைப்பெற்று இந்திய அணி வெற்றியடைந்தது. ரோகித் சர்மா 72 ஓட்டங்களையும் விராட் கோஹ்லி

86 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர் போட்டியின் ஆட்ட நாயகமாக கோஹ்லி தொிவானார். 3போட்டிகள் கொண்ட இத்தொடரில் 1:0 என்ற நிலையில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது. இதன் இரண்டாவது போட்டி நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. (ஐ-400)

# மரண அறிவித்தல்

## செல்வி ஜெயரூபி பாலசுப்பிரமணியம்



மூளாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரூபி பாலசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (20.11.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகாராஜா நிறுவனப் பங்காளர் பாலசுப்பிரமணிம் (அரசு) -சுந்தரேஸ்வரி(சந்திரா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - இராமலிங்கம் (தியாகு வாத்தியார்) - சிவகங்காதேவி தம்பதியரினயதும், மயில்வாகனம் -தையல்நாயகி(மகராசி) தம்பதியரினதும் பேர்த்தியும், சுந்தரேசன் (சூரி), சேரா (கனடா) தம்பதியரின் மருமகளும், சிவரூபி (கனடா), முரளி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தட்சணாமூர்த்தியின் (கனடா) மைத்துனியும் அருஷ்ணா, அஷ்வினியா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2013) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாணிக்கன் தோட்டம், மூளாய், சுழிபுரம்.

தகவல்: சந்திரா (அம்மா)
077 310 8959

# தகுதி பெற்றது பிரான்ஸ்



2014 இல் பிரேஸிலில் நடக்க விருக்கும் உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிக்கு பிரான்ஸ் அணி தகுதி பெற்றது.

பிரான்ஸை எதிர்த்து உக்ரைய்ன் மோதியது. இதில் பிரான்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உலகக் கிண்ண உதை பந்தாட்ட 2014 இன் தெரிவுப் போட்டியில் தகுதி பெற்றது.

சில தினங்களுக்கு முதல் உக்ரைய்னில் நடந்த போட்டியில் உக்ரைய்னிடம் 2:0 என்ற விதத்தில் பிரான்ஸ் தோல்வியடைந்தது. இதனால் பிரான்ஸ் உலகக்கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறுமா என்ற நிலையில் நேற்றைய இறுதிப் போட்டியில் அபராமாக விளையாடி தன்னை உறுதிப்படுத்தியது. (த-400)


## அறியத்தருகின்றோம்

2014 ஆம் ஆண்டுக்கான
ந. சந்திரகுமார் (மட்டக்களப்பு)
ஆசிரியரின் தரம் - 1 முதல் 5 வரையான மாணவர்களுக்குரிய பாடப்புத்தகங்கள் வெளிவந்துவிட்டன மொத்தமாகப் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகள் கல்விக்கூடங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 021 222 9881

## JCB BACKHOE இயந்திரம் வாடகைக்கு உண்டு

கட்டடங்கள் இடித்து அகற்ற, காணிகள் துப்புரவு செய்ய மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும் .
தொடர்பு : 077 4150799, 077 2605718
(40359) (4.3)

## CAR விற்பனைக்குண்டு

Brand New 28000km ஓடிய தனிப்பாவனை கறுப்பு நிற Car விற்பனைக்குண்டு. உற்பத்தியாளரின் உத்தரவாதம், பராமரிப்பிலுள்ளது அதி உன்னத பாவனை Super Petrol (95) மட்டுமே பாவிக்கப்பட்டுள்ளது. (இதற்கு பெற்றோல் நிலையப் பற்றுச்சீட்டும் உண்டு) அனைத்து உத்தரவாத, பராமரிப்பு ஆவணங் களும் உண்டு.

தொடர்பு:-078 5285342

## இதுவும் திசைகாட்டியின் சமூக நோக்கோடு கூடிய கைங்கரியமாகும்

யாழ்ப்பாணத்தில் ஆபரண வடிவமைப்பு இலவச பயிற்சி நெறி - அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுடன் தொழில் தொடங்க கடன் வசதிக்கு ஆலோசனைகளும்

படித்து விட்டு வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளே முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம் உங்களுக்காக நடத்தும் மேற்படி பயிற்சி நெறியில் பங்கு கொண்டு பயன் பெறுங்கள்.

- O/L சித்தி - ஆண் பெண் பங்கு பெறலாம்
- உணவு, தேனீர் இலவசம் - (வேறு எந்த வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது
- 30 பேர் மட்டும்
- பயிற்சி 8.12.2013 யாழ். நகரில் ஆரம்பமாகி 5 நாள்கள் இடம்பெறும்
- பயிற்சி முடிவில் தொழில் தொடங்கவதற்கான உபகரணங்கள் நிதி நிறுவனங்களில் கடன் வசதிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும்.

தொடர்பு - 021 7904941
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## ஐரோப்பிய நாடான நெதர்லாந்து (HOLLAND) இல் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு

2 வருட விசா உணவு இருப்பிடம் இலவசம் ரிக்கெற் இலவசம் டிசம்பர் 26 வரை 20% கட்டணச்சலுகை
7 நாள்களும் காலை 8.30 - பி.ப. 5.30 வரை
www. thisaivisa.com
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.